**நைஜீரியாவில்**
**சிறுபான்மையினர் கொலை**
சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை
பக். 14

**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
விலை: 20/= பக்கங்கள்: 32 | சுடர் 31 | கதிர் 251 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 19, புதன்கிழமை 03.08.2016

# அரசின் விசாரணையில் நம்பிக்கையே இல்லை

## மக்கள் கருத்தறியும் செயலணியிடம் பூநகரியில் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 3
குமாரபுரம் படுகொலை, உடும்பன்குளம் படுகொலை, மூதூர் அக்சன் பாம் படுகொலை, செம்மணிப் படுகொலை என்பவற்றுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. இவ்வாறான நிலையில் இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு இலங்கை அரசு நீதி வழங்கும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. எனவே பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைப் பொறிமுறையினூடாகவே நீதி கிடைக்கும் என்று நம்புகின்றோம்.
இவ்வாறு பூநகரியில் நேற்று இடம்பெற்ற மக்கள் கருத்தறியும் செயலணியின் அமர்வில் வலியுறுத்தப்பட்டது.
இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு பன்னாட்டு விசாரணையே வேண்டுமென தமிழ் மக்கள் வலியுறுத்தி வந்தனர். எனினும் பன்னாட்டு விசாரணை அவசியமில்லை. உள்ளக விசாரணைப் பொறிமுறை ஊடாகப்போர்க்குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்படும். அதில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்வாங்கப்படுவர் என இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உறுதி வழங்கியது.
இந்த நிலையில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு ஒருபோதுமே விசாரணைப் பொறிமுறையில் இடமளிக்கப் போவதில்லை என்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உறுதியாக உள்ளனர். அத்துடன், பன்னாட்டு பக். 29

### மோட்டார் சைக்கிள் மோதியதில் முதியவர் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 3
வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த முதியவரை, வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் முதியவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் மானிப்பாய்ச் சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த நற்குணசிங்கம் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தார்.
விபத்தையடுத்து மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களில், பக். 29

## பொலிஸ் காவலில் இருந்தவர் திங்களன்று இரவு திடீர்ச் சாவு

### காணாமற்போனோர் தொடர்பில் பணம் பெற்ற குற்றச்சாட்டு விசாரணையில்

யாழ்ப்பாணம், ஓக. 3
பொலிஸ் காவலில் இருந்தவர் உயிரிழந்தார். பொட்டாசியம் சயனைட் திரவத்தைக் குடித்து உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிய வந்தது. அதனை அவரே வைத்திருந்து குடித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தசாமி கிருஸ்ணன் (வயது 59) என்பவரே உயிரிழந்தார்.
காணாமற்போனோரின் உறவினர்களிடம் பணம் பெற்றார் என்று அவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டது. அதனை விசாரணை செய்வதற்கு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த போது, அவர் பொட்டாசியம் சயனைட் திரவத்தைக் குடித்தார். அதனைக் கொண்டுவந்த போத்தலை உடைத்தார். அவரைப் பக். 29

முச்சந்தி முரளி



யாரிட்ட ஐயா முறைப்பாடு செய்ய வேணும்?

### மன்னார் மர்மக் கிணற்றில் தடயப்பொருள்கள் மீட்பு

அகழ்வுப் பணி இன்றும் தொடரும்

மன்னார், ஓக. 3
மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு அருகே கிணறு அகழ்வின் போது, பல் ஒன்று, பாவிக்கப்படாத துப்பாக்கிரவை ஒன்று, எலும்புத் துண்டுகள் 3, உரப்பை, கம்பித் துண்டுகள் ஆகிய தடயப் பொருள்கள் நேற்று மீட்கப்பட்டன. கிணற்றில் தண்ணீர் பெருக்கெடுத்ததனால் பக். 27



### யாழ். பல்கலை. நிர்வாகத்தை நாளை சந்திக்கிறார் மைத்திரி

கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஆராய

யாழ்ப்பாணம், ஓக. 3
யாழ்.பல்கலைக்கழகத்தின் தற்போதைய நிலை தொடர்பில் ஆராய்வதற்காக, துணைவேந்தர் உள்ளிட்ட குழுவினரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்புக்கு அழைத்துள்ளார். பக். 27

### வடக்கு - கிழக்கில் விகாரைகளை சீரமைக்க அரசு முடிவு

கொழும்பு, ஓக. 3
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிப்புக்கு உள்ளான விகாரைகள் மற்றும் மதத் தலங்களை சீரமைப்புச் செய்யும் பொறுப்பை விகாரைகள் மற்றும் மதத் தலங்களின் முகாமைத்துவ பராமரிப்புச் சபைகளுக்கு வழங்குவது தொடர்பில் அரசு அவதானம் செலுத்தியுள்ளது.
இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.
போரினால் பாதிப்புக்கு உள்ளான பக். 29

## முன்னாள் போராளிகள் மர்மச் சாவு; பன்னாட்டு விசாரணையே தேவை

### செயலணியிடம் பாதிக்கப்பட்டவர்கள் வலியுறுத்து

கிளிநொச்சி, ஓக. 3
இராணுவத்தினரால் புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் தொடர் உயிரிழப்புக்கள் எங்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன. இவர்களது உயிரிழப்புக்கான காரணம் தொடர்பில் பன்னாட்டு மருத்துவக் குழுக்கள் முழுமையான விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.
இவ்வாறு போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவது தொடர்பான மக்கள் கருத்தறியும் செயலணியின் அமர்வில், பூநகரி மக்கள் கேட்டுக்கொண்டனர். பக். 29

## போராளிகளுக்கு விச ஊசி ஏற்றப்பட்டதா? முறைப்பாடு செய்தால் விசாரிக்கப்படும்

### அரசு நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 3
புனர்வாழ்வின்போது முன்னாள் போராளிகளுக்கு விச ஊசி ஏற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் அரசிடம் உரிய வகையில் முறைப்பாடு செய்யப்பட்டால், உள்நாட்டு விசாரணை நடத்தப்படும்.
இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன நேற்றுத் தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.
தடுப்பு முகாமில் தமக்கு விச ஊசி ஏற்றப்பட்டதாக முன்னாள் போராளியொருவர் மக்கள் பக். 27

### தொண்டர் ஆசிரியர்களுக்கு வடக்கு ஆளுநர் உறுதிமொழி

உணவு தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டது



யாழ்ப்பாணம், ஓக. 3
நிரந்தர நியமனம் வழங்குமாறு உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் கடந்த இரு தினங்களாக ஈடுபட்டிருந்த தொண்டர் ஆசிரியர்கள், வடக்கு மாகாண ஆளுநர் கூரேயின் உறுதிமொழியை பக். 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 தமிழ்பேசும் இளைஞர்கள் கடத்தல்; சட்டமா அதிபருக்கு அழைப்பாணை

கொழும்பு, ஓக. 3
கொட்டாஞ்சேனை மற்றும் தெகிவளைப் பகுதிகளில் தமிழ் – முஸ்லிம் இளைஞர்கள் 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் முன்னிலையாகுமாறு சட்டமா அதிபருக்கு அழைப்பாணை விடுக்குமாறு கொழும்பு - கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன உத் தரவிட்டார்.

கடந்த ஐந்து வருடங்களாக கொழும்பு -கோட்டை நீதிவான் மன்றில்இந்த வழக்கு இடம் பெற்றுவருகின்ற போதிலும், சட்டமா அதிபரோ அல்லது சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பிலோ எவரும் முறையான பிரதிநிதித்துவம் செய்ய மறுத்து வருவதை அடுத்தே, நீதிவான் இந்த உத்தரவை நேற்றுப் பிறப்பித்தார்.

2008, 2009ஆம் ஆண்டுகளில் கொழும்பு - கொட்டாஞ்சேனை மற்றும் தெகிவளைப் பகுதிகளில் கடத்தப்பட்ட ஐந்து மாணவர்கள் உட்பட 11 தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் கொழும்புத் துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள கடற்படையினரின் தடுப்பு முகாமிலும், திருகோணமலை கடற்படை முகாமிலுள்ள கோட்டா முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்டார்கள் எனத் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு கோட்டை நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கிற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் எவரும் முன்னிலையாகாததை அடுத்து, சட்டமா அதிபருக்கு அழைப்பாணை விடுக்குமாறு நீதிமன்ற பதிவாளருக்கு நீதிவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணைகளை சட்டமா அதிபர் திணைக்களம் உதாசீனம் செய்து வருவதாக மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, மன்றுக்குத் தொடர்ச்சியாக எடுத்துக் கூறிவந்த நிலையில், கடந்த வாரம் பதிவுத் தபாலில் சட்டமா அதிபருக்கு அறிவித்தல் விடுக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

நேற்றைய தினமும் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து எவரும் முன்னிலையாகவில்லை. இதனை அடுத்து அழைப்பாணை விடுக்குமாறு நீதிவான் ஜயரத்ன உத்தரவு பிறப்பித்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டுள்ள இந்த வழக்கிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது சட்டமா அதிபர் திணைக்களத்தின் கடமை என்றும் நீதிவான் குறிப்பிட்டார்.

நீதிமன்றப் பணிகளுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்திய நீதிவான், வழக்கு விசாரணையை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (வ-5)

# யாழ். பல்கலை. மாணவர்களின் கற்றல் தடைப்படாது தொடர ஒத்துழையுங்கள்

## மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுடைய கற்றல் செயற்பாடுகள் தடைப்படாமல் இடம்பெற, வேறுபாடுகளைக் கடந்து சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குங்கள். இவ்வாறு கேட்டுள்ளது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றியம்.

இது தொடர்பில் ஒன்றியம் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற அசம்பாவிதம் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உண்மையான நிகழ்வையும், நிலைப்பாட்டையும் தொடர்புசாதனங்கள் மூலம் மக்களுக்கும் ஏனைய நிர்வாகிகளுக்கும் தெரிவித்திருந்தது.

இந்தநிலையில்ஒவ்வொருவரும் தங்கள் நிலையிலிருந்து தகவல்களை பத்திரிகைகளிலும் சமூக வலைத் தளங்களிலும் தெரிவித்து வருகின்றனர். சிலர் தங்கள் சுய இலாபம் கருதி உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிட்டு வருவதை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது. பல்கலைக்கழகங்களில் முரண்பாடுகள், குழு மோதல்கள் பல அடிப்படைகளில் எழுந்து வருவதை பல்கலைக்கழகத்தில் படித்தோர், அனுபவரீதியாகவும் பல்கலைக்கழகத்தில் படியாதோர் அறிவு ரீதியாகவும் அறிந்திருக்கின்றார்கள். பல்கலைக்கழகங்களில் இத்தகைய முரண்பாடுகள் மூத்த மாணவர், இளைநிலை மாணவர் என்ற அடிப்படையில், மாணவ மன்ற தேர்தலின்போது, காதல் விவகாரம், விழாக்கள் ஒழுங்கமைத்தல் தொடர்பாக, விழாக்களை ஒரு குழு குழப்புவது தொடர்பாக, நிகழ்ச்சி நிரலில் மாற்றம் ஏற்படுத்த முனைவது தொடர்பாக, மாணவர்கள் சமநிலை இழக்கும்போது இவ்வாறு பல அடிப்படைகளில் முரண்பாடுகள் குழு மோதல்கள் பல்கலைக்கழகங்களில் ஏற்படுவதுண்டு.

இவ்வாறான நிலமை சகல பல்கலைக்கழகங்களிலும் காணப்படுகின்றது. அதன் ஒருவழி வந்ததாகவே கடந்த 16ஆம் திகதி விஞ்ஞானபீடத்தில் நடைபெற இருந்த நிகழ்ச்சியில், நிகழ்ச்சி நிரலில் மாற்றம் ஏற்படுத்த முனைந்தபோது, ஒரு சிறு குழுவினரிடையே நடைபெற்ற முரண்பாடே தவிர வேறு எந்த விடயமும் இல்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற சகல மாணவர்களும் ஒன்றாகப் படித்து, ஒன்றாக அறைகளில் தங்கி, ஒன்றாக விளையாடி, ஒன்றாக நிகழ்வுகளை நடத்தி, ஒற்றுமையாக இருப்பார்கள். இந்த நிலையில் மாணவர்களிடையே எந்த ஒரு அடிப்படையிலும் குழு மனப்பான்மையினையும் ஏற்படுத்த யாழ்ப்பாணப் பலக்லைக்கழக மாணவர் ஒன்றியம் ஒரு போதும் அனுமதிக்காது. ஆகவே இத்தகைய ஓர் சூழ்நிலையினை உருவாக்குவதற்கு மாணவர்கள் தயாராகவே இருக்கின்றார்கள். இந்த நிலையில் பல்கலைக்கழக நிர்வாகம் அரசு, அரசியல் தலைவர்கள், பெற்றோர்கள், சமூக நலன் அமைப்புக்கள் இந்தச்சூழ்நிலையை உருவாக்கவும் தொடர்ந்தும் பாதுகாக்கவும் உரிய நடவடிக்கையினை இதய சுத்தியுடன் மேற்கொள்ள வேண்டும் என வேண்டி நிற்கின்றோம். சகல தரப்பினரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுடைய கல்வி தடைப்படாமல் இருப்பதற்கு பல்கலைக்கழகத்தை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம் – என்றுள்ளது. (வ-4)

# இளவாலைப் பொலிஸ் நிலையம் புதிய கட்டடத்துக்கு இடம்மாறியது

## வழக்குகளை மீளப் பெற்றனர் மக்கள்

பண்டத்தரிப்பு-விளானில் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் இளவாலை பொலிஸ் நிலையம் நிர்மாணிக்கப்பட்டு அங்கு இடமாற்றப்பட்டது. அதனால் இளவாலைப் பொலிஸாருக்கு எதிராகப் பொது மக்களால் தாக்கல் செய்யப்பட்ட 8க்கும் மேற்பட்ட வழக்குகளைப் பொது மக்கள் மல்லாகம் நீதிமன்றில் நேற்று மீளப்பெற்றனர்.

உத்தியோகத்தர் தங்கும் விடுதி, முறைப்பாட்டு பிரிவு, சிறுவர் பிரிவு, போதை ஒழிப்புப் பிரிவு, சிறுவர் பிரிவு, சமையல்கூடம், மலசலகூட வசதி மற்றும் கட்டளைப் பணியகம், ஆயுத அறை எனச் சகலவசதிகளும் கொண்டதாக புதிய பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு தொடக்கம் இளவாலையில் உள்ள தனியார் காணிகளை கையகப்படுத்தி, இளவாலை பொலிஸ் நிலையம் பொதுமக்களின் சேவைக்காக ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காணிகளை விடுவிக்குமாறு கடந்த வருடம் மார்ச் முதலாம் திகதி காணி உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். பின்னர் மல்லாகம் நீதி மன்றில் வழக்கு தொடரப்பட்டது.

அது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பின்னர் குறித்த காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டது.

புதிய பொலிஸ் நிலையத்துக்குரிய காணி பண்டத்தரிப்பு விளான் பகுதியில் 55 இலட் சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டது. அங்கு பொலிஸ் நிலையம் மாற்றப்பட்டது. (ற-4,107)

# மாணவன் சடலமாக மீட்பு

17 வயதுச் சிறுவன் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் பெற்றோருடன் முரண்பட்டுக் கொண்டு வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றிருந்த நிலையில், அவர் பின்னர் சடலமாக மீட்கப்பட்டதாக ஆரம்ப விசாரணைகளி லிருந்து பொலிஸார் தெரிவித்தனர்.

சரவணை மேற்கு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த வேலணையில் உள்ள பாடசாலையில் உயர்தரத்தில் பயிலும் தவிசாலன் பானுசன் (வயது - 17) என்ற மாணவனே சடலமாக மீட்கப்பட்டார்.

மாணவன் நேற்றுமுன்தினம் காணாமற் போயுள்ளார். அது தொடர்பில் பெற்றோர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினமிரவு முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில் நாரந்தனை 8ஆம் வட்டாரப்பகுதியில் உள்ள காணி ஒன்றில் சடலமாக மீட்கப்பட்டார். (வ-4,107)

# மாங்குளம் - ஒட்டுசுட்டான் வீதியில் யானைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

## அச்சத்தில் மக்கள்



முல்லைத்தீவு, ஓக. 3
மாங்குளம் – ஒட்டுசுட்டான் வீதியில் அண்மைக் காலமாக யானைக் கூட்டங்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் போக்குவரத்தில் ஈடுபடுபவர்களை எந்த நேரத்திலும் தாக்க கூடிய நிலமை காணப்படுவதாக மக்கள் தெரிவித்தனர்.

நேற்றைய தினமும் நண்பகல் வேளை குட்டிகள் சகிதம் 7 யானைகள் வீதியின் வடக்குப் பக்கமிருந்து தெற்குப் பக்கமாக வீதியைக் குறுக் கறுத்துச் சென்றதாக மக்கள் தெரிவித்தனர்.

“ஒட்டுசுட்டான் – மாங்குளம் பிரதான வீதியில் அண்மைக் காலமாக யானைகளின் பிரசன்னம் அதிகரித்துள்ளது. இந்த யானைகள் தனியே அன்றி கூட்டமாக குறித்த வீதிகளின் கரையோரம் தரித்து நிற்கின்றன. வீதியின் அருகே உள்ள மரக்கிளைகளை முறித்து உண்ணுகின்றன.

இரவு வேளைகளில் கட்டாக்காலி மாடுகளைப் போன்று வீதியின் கரையே படுத்து உறங்கிவிடுகின்றன. பகல் வேளைகளில் யானைகள் வீதியின்அருகே தரித்து நிற்கும் போது, வீதியால் செல்பவர்கள் யானைகளின் அருகே சென்று செல்பி எடுக்கின்றனர். அதனுடைய விபரீதத்தை அவர்கள் அறியவில்லை.

தற்போது மிருக காட்சிசாலைகள் போன்று ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதி காணப்படுகின்றது. கடந்த காலங்களில் இரவு வேளைகளிலேயே யானைகள் ஊர் மனைகளுக்குள் புகுந்து சேதங்களை விளைவித்தன. தற்போது பகலில் மனித நடமாட்டம் உள்ள போதே வருகை தருகின்றன. எனவே இடர் ஏற்பட்ட பின்னர் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதை விடுத்து, மக்களுடைய நன்மை கருதி முற்கூட்டியே உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொண்டனர். (வ-5-21-102)

# கீரிமலையில் பெருந்தொகையினர் நேற்றுப் பிதிர்க்கடன் செலுத்தினர்

யாழ்ப்பாணம், ஓக.3
ஆடி அமாவாசையை முன்னிட்டு கீரிமலையில் நேற்று ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டு தமது தந்தையர்களுக்கான பிதிர்க் கடன்களை நிறைவேற்றினர். யாழ்.குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கீரிமலையை முற்றுகை யிட்டனர். கீரிமலை புனித தீர்த்தக்கேணி மற்றும் கடல் பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் நீராடி சமயக் கிரியைகளை மேற்கொண்டு பிதிர்க் கடன்களை நிறைவேற்றினர்.

கடற்கரைப் பகுதியில் நூற்றுக் கணக்கான குருமார் சமயக் கிரியைகளை மேற்கொண்டனர். கீரிமலை சுற்றாடல் பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியதால் சன நெரிசல் ஏற்பட்டது.

போக்குவரத்து மற்றும்நெரிசல்களைப்பொலிஸார் கட்டுப்படுத்தினர். பக்தர்களுக்கான தாக சாந்தி நிலையங்களும் அமைக்கப்பட்டு தாக சாந்தி வழங்கப்பட்டது.

நகுலேஸ்வரர் ஆலயத்தில் காலை தொடக்கம் விசேட பூசைகள் இடம்பெற்றன.

மாவைக் கந்தனும் நேற்றுக் காலை கீரிமலைக்கு எழுந்தருளி தீர்த்தமாடிய பின்னர் அங்கு விசேட பூஜைகள் இடம்பெற்றன. (ற-17)

# மன்னிப்புக் கேட்டார் மகிந்த

நடைபவனியில் கலந்து கொண்டவர்களில்ஒரு பகுதியினர் சாராயக் கடைகளுக்கு முன்னால் வரிசையில் நின்றனர். அதற்கு மன்னிப்புக் கோருகிறேன் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ச தெரிவித்தார். நடைபவனி எனக் கூறிக் கொண்டு வந்தவர்களில் ஒரு தொகுதியினர் மதுபான சாலைகளில் வரிசையாக நின்றிருந்ததை மக்கள் ஊடகங்களில் பார்த்தனர். இப்படியான செயற்பாடுகளை மேற்கொள்பவர்களுக்கு வேட்பாளர் சீட்டை வழங்கியமைக்காக நாம் மக்களிடம் மன்னிப்புக் கோருகின்றோம். என கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர் விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 3

'உதயன்' பத்திரிகையின் புகைப்படப்பிடிப் பாளர் விபத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் விபத்து தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டார். யாழ்.கச்சேரியடியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில், கச்சேரி கிழக்கொழுங்கையைச் சேர்ந்த க.ரட்ணம் (வயது - 68) என்பவரே காயமடைந்தார். அவர் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிளும் யாழ்ப்பாண்திலிருந்து வவுனியா சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸும் மோதுண்டதில் விபத்து இடம்பெற்றது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (வ-4)

# கோட்டக்கல்வி பணிப்பாளருக்கு அழைப்பாணை

யாழ்ப்பாணம், ஓக. 3

பாடசாலைச் சிறுமிகளை பாலியல் தொந்தரவு செய்த குற்றச்சாட்டு வழக்கில் கோட்டக் கல்வி பணிப்பாளரையும் மற்றொரு ஆசிரியரையும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு யாழ்ப்பாணம் நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.

யாழ். நகரப் பகுதிக்கு அண்மையாக அமைந்துள்ள பாடசாலை யொன்றில் 5 பாடசாலை மாணவிகளைப் பாலியல் தொந்தரவு செய்ததாக தெரிவித்து, அந்தப் பாடசாலையின் விஞ்ஞான ஆசிரியர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அத்துடன், இந்த விடயத்தை மறைத்த குற்றச்சாட்டில் அதிபர், ஆங்கில ஆசிரியர் மற்றும் வகுப்பு ஆசிரியை ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

பின்னர் அதிபரும் பெண் ஆசிரியரும் பிணையில் விடப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதன் போது ஆங்கில ஆசிரியரை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது. எனினும் சந்தேகநபர்கள் சார்பில் தோன்றிய சட்டத்தரணிகள் இச்சம்பவம் தொடர்பாக அதிபரால் ஏற்கனவே உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதாகவும், பொலிஸார் அது தொடர்பாக உரிய முறையில் விசாரணை செய்யவில்லையெனவும் தெரிவித்தனர். இதனையடுத்து குறித்த பாடசாலை அமைந்துள்ள கோட்டத்துக்கு பொறுப்பான கோட்டக் கல்வி பணிப்பாளரையும் பாடசாலை ஆசிரியர் ஒருவரையும் மன்றில் முற்படுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (வ-103)

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரி ஸ்ரேசன் வீதியில் உள்ள
Samsung Singhagiri PVT LTD நிறுவனத்திற்கு
வேலையாள்கள் தேவை.
(O/L) பரீட்சையில் சித்தியடைந்த இருபாலாரும் ஓகஸ்ட் 4,5,6 ஆகிய திகதிகளில் ஆவணங்களுடன் நேரில் வரவும்.

தொடர்பு:-0777835613

## வேலைவாய்ப்புக்கள்

யாழில் பலரின் கனவு வேலைவாய்ப்பினை நனவாக்கிய WINSTAR JOB BANK இனை நாடி உங்களுக்கோர் சிறந்த வேலை வாய்ப்பினை பெற்றுக்கொள்ளுங்கள்.

| Post | No.of position | salary |
|---|---|---|
| 1.Accountant | 2 Female | 15000= |
| 2.Receptionist | 2 Female | 12000/= |
| 3.Driver | 2 Male | 30000/= |
| 4.Marketing executive | 5 Male | 12000/= |
| 5.Rotty maker | 2 Male | 25000/= |
| 6.Hotel suppliers | 2 Male | 15000/= |
| 7.Cook | 2 Male | 25000/= |
| 8.Manager | 1 Male | 20000/= |
| 9.Office secretary | 1 Female | 25000/= |
| 10.Pharamcy sales girls | 2 Female | 10000/= |
| 12.Designer | 2 Female | 15000/= |
| 13.Factory staff | 5 male | 15000/= |

மேற்படி வேலை வாய்ப்புக்களை பெற விரும்பின் புகைப்படத்துடன் கூடிய சுயவிவரக் கோவையுடன் நேரில் வந்து 05.08.2016 இற்கு முதல் பதிவினை மேற்கொள்ளவும்.
(பதிவுக் கட்டணம் உண்டு)

**WINSTAR JOB BANK**

106, தபாற்பெட்டி சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P: 021 320 2789 (10am-4pm)
Fb:Winstarjaffna web:www.winstarjaffna.com

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (03.08.2016) புதன்கிழமை பனை அபிவிருத்திச் சபையின் தலைவராகப் பதவி ஏற்கும்
**வைத்திய கலாநிதி இராசலிங்கம் சிவசங்கர்**
அவர்களை அகமகிழ்ந்து ஆசீர்வதித்து வாழ்த்துவதுடன்
மேன்மேலும் பல பதவிகளை வகித்து சமூக சேவைகளைத்
தொடர எல்லாம் வல்ல ஸ்ரீ கதிரமலை
பொன்னம்பலவாணேஸ்வரர் திருவருள் வேண்டி
வாழ்த்துகின்றோம்.

Congrats Congrats

வாழ்த்துவோர்:
சுன்னாகம் கிழக்கு மக்கள் சார்பில்

சு.கஜேந்திரன் இ.திவாகரன்
க.சசிகாந்தன் [illegible]

## ஆதார வைத்தியசாலை முழங்காவில் பழைய பெண்கள் விடுதியும் அதனுடன் இணைந்த போக்குவரத்துப் பகுதியும் கழற்றி அகற்றுவதற்கான கூறுவிலை கோரல்

மேற்படி முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் பழைய பெண்கள் விடுதியும் அதனுடன் இணைந்த போக்குவரத்துப் பகுதியும் கழற்றி அகற்று வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. ஆர்வம் உள்ளவர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் விண்ணப்பப் படிவத்தினை 03.08.2016 ஆம் திகதி தொடக்கம் 05.08.2016 திகதி வரை அலுவலக நேரத்தில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவத்தினை 08.08.2016 முற்பகல் 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்பிக்க வேண்டும்.கேள்விக்கோரல்கள் முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். இதில் கூடுதலான பெறுமதியுடைய கேள்விகோரல் தெரிவுசெய்யப்படும் அவ்வாறு தெரிவுசெய்யப்படுபவர்கள் உடன் பணத்தினைச் செலுத்தி குறித்த அனுமதியினைப் பெற்று குறித்தவேலையினை மேற்கொண்டு அதில் இருக்கும் பொருள்களை எடுத்துச் செல்லமுடியும்.

**குறிப்பு: கட்டடத்தைக் குறித்த வைத்தியசாலையில் நேரில் சென்று பார்வையிட முடியும்.**

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



17.08.2015 அன்று
சிவபதப்பேறடைந்த எமது
குடும்பத் தலைவி

**இரத்தினம் பூங்காவனம்**

தோற்றம் 12 . 09 . 1927
மறைவு 17 . 08 . 2015

அன்னாரின் ஆண்டுத்திவசம் 05.08.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.29, அரச வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 08 . 03 . 1962



மறைவு 04 . 07 . 2016

அமரர் திருமதி **துளசிமலர் இரவீந்திரன்**

கடந்த 04.07.2016 திங்கட்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.08.2016) புதன்கிழமை 8.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். நாளை(04.08.2016) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி, 3ஆம் ஒழுங்கை,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல் அறியும் சட்ட வரைவுக்கு சபாநாயகர் ஒப்பம்

தகவல் அறியும் சட்ட வரைவுக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய கையொப்பமிட்டுள்ளார் என்று நாடாளுமன்ற புனரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார். (ந-5)


### திருக்கேதீச்சர ஆலய திருப்பணி வேலைகளுக்கான கட்டட ஒப்பந்தகாரர்களைப் பெற்றுக்கொள்ளல்

திருக்கேதீச்சர ஆலய சுற்றுப் பிரகார மூர்த்திகளுக்கான ஆலயங்களை பொழிக்கப்பட்ட கருங்கற்களினால் அமைப்பதற்கு அனுபவமும் ஆர்வமுமுள்ள ஒப்பந்தகாரர்கள், தங்களின் ஆர்வத்தைத் தெரிவித்து **09.08.2016** ஆம் திகதிக்கு முன்பாகப் பதிவுத் தபால் மூலம் **இணைச் செயலாளர், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை, திருக்கேதீச்சரம், மன்னார்** என்னும் முகவரிக்கு விண்ணப்பங்கள் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பின்னர் ஒப்பந்தக்காரர்களை அழைத்து செய்யப்பட வேண்டிய வேலைகள் பற்றி தெளிவுபடுத்தப்படும்.

**தலைவர்,**
**திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை,**
**திருக்கேதீச்சரம், மன்னார்.**

**076 536 9383**





சிவமயம்

### பணிப்புலம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

### புதிய திருப்பணிச்சபை அங்கத்தினர் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்ட அழைப்பு

அம்பிகை அடியார்களே!

பணிப்புலம் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான "திருப்பணிகளை" 1994 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பொறுப்பேற்று செய்து வந்த ஆலய ஆதீனகர்த்தாக்கள் ஆகிய நாங்கள் எதிர்வரும் காலங்களில் இவ் ஆலய திருப்பணிகளை பொறுப்பேற்று செய்வதற்கு பொது மக்களால் தெரிவு செய்யப்பெறும் திருப்பணிச் சபையினரிடம் " ஒப்படைக்க முன்வந்துள்ளோம் என்பதை அறியத் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

எதிர்வரும் 11.08.2016 அன்று முற்பகல் 10.00 மணியளவில் இவ் ஆலயத்திற்கு வருகைதர இருக்கும் வலி- மேற்கு பிரதேச செயலர் அவர்கள்,வலி - மேற்கு இந்து கலாசார அரச உத்தியோகத்தர் அவர்கள் , பணிப்புலம் கிராம உத்தியோகத்தர் அவர்கள் ஆகியோர் முகதாவில் ஆலய முன்றிலில் ஒன்றுகூடும் பொது மக்களினால் இவ் ஆலய புதிய " திருப்பணி சபையின்" நிர்வாக அங்கத்தினர் தெரிவு இடம்பெறும் என்பதனை தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

அடியார்கள் அனைவரையும் இப் பொதுக்கூட்டத்தில் பங்குபற்றித் திருப்பணிகளை முன்நின்று செயற்படுத்தும் அங்கத்தினர்களை தெரிவுச்செய்து திருப்பணி சபை அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆலய பூசகர்களும் ஆதீன கர்த்தாக்களும்.**
**பங்குரிமைக் காரர்களும்.**



### நல்லூர் பிரதேச சபை
### கொக்குவில் உப அலுவலகம்
### ஆதனப் பெயர் மாற்றம்

**ஆதன உரிமையாளர் பெயர்: சிதம்பரி கணபதி**
**வட்டாரம் -11, இருபாலை வீதி**
**ஆதன இலக்கம்: 36/21 A**

மேற்படி விவரத்தோடு ஆதனம் காணப்பட்ட போது அதே ஆதனத்தை கமலவாசன் பெண் சசிகலா என்பவர் ஆதன பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

குறித்த ஆதனங்களை பரிசீலனை செய்ததன் பிரகாரம் ஆரம்ப உறுதியை கதிரவேலு செல்லன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு ஞா. சிவஞானம் முகதாவில் 15.04.2000 இல் 48 ஆம் இலக்க உறுதியின் பிரகாரம் வெளிப்படுத்தல் உறுதியூடாக உரிமைகோரி, நொத்தாரிசு சிவஞானம் முகதாவில் 01.04.2004 இல் 1150ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கணேசு பெண் தங்கமலர் என்பவருக்கு நன்கொடையாக அளித்துள்ளார்.நொத்தாரிசு சிவஞானம் முகதாவில் 03.01.2012 இல் 65 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் பெயர்மாற்று விண்ணப்பதாரிக்கு நன்கொடை உறுதியாக வந்தடைந்துள்ளது.

எனவே குறித்த ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாக காணப்படுவதால். இவ் ஆதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகைப் பிரசுரத்திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமாக ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ. வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினரூடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும்,யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயரிற்கு குறித்த இலக்கமுடைய ஆவணத்தை பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும். இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செயலாளர்**
**நல்லூர் பிரதேச சபை**


# கல்நாட்டினகுளம் கிராம மக்களை மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை

வவுனியா, ஓக. 3

1983ஆம் ஆண்டுகளில் இடம்பெயர்ந்த வவுனியா கல்நாட்டினகுளம் மக்களை மீள்குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் ஊடகப் பிரிவால் அனுப்பப்பட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

வவுனியா மாவட்டத்தின் தெற்கு எல்லையில் இருக்கும் இந்தக் கிராமமானது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 1977ஆம் ஆண்டுகளிலும், அதனைத் தொடர்ந்து 1983ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் பேரழிவுகளைச் சந்தித்தது.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் 1983ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமது கிராமத்தை விட்டு முற்றாக வெளியேறினர். அதன் பின்னர் அருகிலுள்ள வேப்பங்குளம் மற்றும் கல்நாட்டின குளத்தின் உட்பகுதியில் குடியேறியுள்ள போதும் எல்லைப் பகுதியிலிலுள்ள பாரம்பரிய பழைய கிராமத்தில் மக்கள் இதுவரை குடியமரவில்லை.

இது தொடர்பாக நடுவண் அரசின் மீள்குடியேற்ற அமைச்சரின் கவனத்திற்கு இந்த விடயம் என்னால் கொண்டு செல்லப்பட்டது.

கடந்த மாதம் சிதம்பரநகர் நிகழ்வுக்கு வருகை தந்த மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனை மேற்படி கிராமத்திற்கு அழைத்துச் சென்று மக்களுடன் கலந்துரையாட ஏற்பாடு செய்யப்பட்டது.

மீள்குடியேறவுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு மீள்குடியேற்ற அமைச்சால் மாவட்டச் செயலாளருக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அறிக்கை சமர்பிக்கப்பட்டதும் மக்களை மீள் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றுள்ளது. (ந-5-21)

# ஆடிஅமாவாசைக்கான விடுமுறையை உரிய முறையில் பின்பற்றவில்லை

ஆடி அமாவாசை தினமான நேற்று சாவகச்சேரி நகர்ப் பகுதியில் ஒரு தொகுதிக் கடைகள் திறந்திருந்தன. ஒரு தொகுதி கடைகள் மூடப்பட்டிருந்தன. கைத்தொழில் வணிகர் மன்றத்தால் விடுமுறைக்கான அறிவித்தல் வழங்கப்பட்டிருந்த போதும் அது உரிய முறையில் பின்பற்றப்படவில்லை.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் புதிய நிர்வாகத்தினர் மார்ச் மாதம் பதவியேற்றபோது சித்திரைப் பௌர்ணமி மற்றும் ஆடி அமாவாசை தினங்களில் மன்ற எல்லைக்குட்பட்ட அனைத்து வணிக நிலையங்களும் மூடி சிப்பந்திகளுக்கு விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்று புதிய செயலாளரால் பிரேரணை கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த சித்திரைப் பௌர்ணமி தினத்தன்று அனைத்து வணிக நிலையங்களும் மூடியிருந்தன. வணிக நிலையத்தை மூடி சிப்பந்திகளுக்கு விடுமுறை வழங்க வேண்டுமென்ற பிரேரணையைக் கொண்டு வந்த செயலாளரின் வணிக நிலையம் திறந்திருந்தது. ஏனைய வணிக நிலைய உரிமையாளர்கள் குழப்பமடைந்து தலைவருடன் தொடர்பு கொண்டு தகவலைத் தெரிவித்தனர். செயலாளர் கொழும்பில் நின்றதால் உரிய நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

ஆடி அமாவாசை தினமான நேற்று வணிக நிலையங்களை மூடுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் காலையில் அனைத்து வணிக நிலையங்களைச் சேர்ந்தவர்களும் செயலாளரின் வணிக நிலையம் திறந்து வியாபாரம் செய்யப்பட்டதை அவதானித்தனர். இதன் பின்னர் சாவகச்சேரி நவீன சந்தை தவிர்ந்த ஏனைய வணிக நிலையங்களும் திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் நடந்தன.

"சாவகச்சேரியில் இரு கடைகள் உள்ளன. அவற்றில் ஒன்று சுப்பர் மார்க்கெட். இலங்கைச் சட்டத்தின் பிரகாரம் நாட்டில் இயங்கும் அனைத்து சுப்பர் மார்க்கெட் வியாபார நிலையங்களும் மாதம் முழுவதும் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனால் சுப்பர் மார்க்கெட் திறந்திருந்தது. மற்றைய வணிக நிலையம் மன்ற விதிமுறைகளுக்கமையமூடப்பட்டு அங்குள்ள பணியாளர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது' - என்று சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றச்செயலாளர் தெரிவித்தார். (5-9)


**அறை வாடகைக்கு தேவை**

உடுவில்,மானிப்பாய்,சண்டிலிப்பாயை அண்டிய பகுதியில் அரச உத்தியோகஸ்தருக்கு.

**077 727 2582**



**முல்லைத்தீவில் கிராமசேவையாளர் தரம் 3 போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

செப்ரெம்பர் நடைபெறும் பரீட்சைக்கான இறுதி நேர தயார்ப்படுத்தல்களுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட துரித பயிற்சித் திட்டம்.

20 மணித்தியாலங்களைக் கொண்டது.

06.08.2016 ஆம் திகதி Thanniyootu Mulliyawalai இல் ஆரம்பம்.

**மேலதிக தகவல்களுக்கு**
**077 225 5635**



**கடை வாடகைக்கு**

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி சத்திரச் சந்தியில் இருந்து கொட்டடிப் பாதையில் அகலம் 11 ½ நீளம் 70 அடி கீழ் தளம், மேற்தளம் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.

**071 560 4213**



**வேலையாள் தேவை**

கொடிகாமம் A9 வீதியில் உள்ள போன் சொப் கடைக்கு வேலையாள் தேவை. (தென்மராட்சியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

**077 233 6245**



JMF

## Jaffna Managers Forum Youth Entrepreneurship Development Programme

### இளைஞர் தொழில் முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

**யாழ்ப்பாண முகாமையாளர் சங்கத்தின் அனுசரணையுடன் வழங்கப்படும் இலவச சுயதொழில் முயல்வோருக்கான பட்டறை**

கீழ்க்காணும் தகைமைக்கான பயிற்சிப் பட்டறையும் வழிகாட்டல்களும் வெளிநாட்டு நிறுவனமொன்றின் அனுசரணையுடன் நடத்த ஏற்பாடாகி உள்ளது. விசேட பயிற்சி வழங்குநர்களினால் ஒழுங்கமைக்கப்பட்ட திட்டத்தின்படி பயிலரங்கு நடத்தப்படும்.

**பங்குபற்றுவதில் எதிர்பார்க்கப்படுவோர்**

1. சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட ஆர்வமுள்ளவர்கள்.
2. இளம் தொழில் ஆர்வலர்கள்.
3. முயற்சியுடைய பட்டதாரிகள்.
4. O\L,A/L முடித்து தொழில் முயல்வோர்.
5. விசேடமாகப் போரினால் பாதிக்கப்பட்டவர்கள்.
6. பெண்கள் தலைமையிலான குடும்ப உறுப்பினர்கள்.

**நிபந்தனைகள்**

* வயது எல்லை 20இற்கும் 40 இற்கும் இடைப்பட்டோர்.
* 03 பகுதிகளாகப் பிரித்து 20-30 பயனாளிகளுக்கு 14 நாள்கள் முழுநேரப் பயிலரங்கு நடைபெறும். முதலாவது பயிற்சி பட்டறை ஆகஸ்ட் மாத நடுப்பகுதியிலும் இரண்டாவது மூன்றாவது பயிற்சி பட்டறைகள் முறையே ஒக்டோபர், நவம்பர் மாதங்களிலும் நடைபெறும்.
* பயிற்சியின் முடிவில் தகுதியானவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* பயன்பெற விரும்புவோர் உங்கள் விண்ணப்பங்களை சுயவிவரக்கோவையுடன் கீழ்வரும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது ஈமெயில் மூலமாகவோ உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இணைப்பாளர்,**
**யாழ்.முகாமையாளர் சங்கம் (Jaffna Managers Forum)**
**# 17,கைத்தொழில் சேவை ஒழுங்கை, நல்லூர்.**
**தொலைபேசி இலக்கம்: 021 222 7012** Email: bmsjaffna@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓயாமடுவவில் ஆயுதக் களஞ்சியம் அமைப்பதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு, ஓக. 3

அனுராதபுர மாவட்டத்தில் உள்ள ஓயாமடுவவில் பன்னாட்டுத் தர நியமங்களுக்கு ஏற்ப ஆயுதக் களஞ்சியத் தொகுதியை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

இந்தப் பிரதேசத்தில் ஆகக் குறைந்த சன அடர்த்தி இருப்பதைக் கருத்தில் கொண்டே ஆயுதக் களஞ்சியத்தை அமைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது.

ஓயாமடுவவுக்கு ஆயுதக்களஞ்சியத் தொகுதியை மாற்றும் அமைச்சரவைப் பத்திரத்தைப் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

போர்க்காலத்தில் ஆயுதங்களும் வெடிபொருள்களும் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள தற்காலிக களஞ்சியங்களில் சேமிக்கப்பட்டு வந்தன.

சலாவ இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியத்தில் ஏற்பட்ட பெரிய வெடிவிபத்தை அடுத்து, சன அடர்த்தி குறைவான இடத்தில் நவீன வசதிகள் மற்றும் பன்னாட்டுத் தரத்துடனான ஆயுதக் களஞ்சியம் அமைக்கப்பட வேண்டும் என்று யோசனை தெரிவிக்கப்பட்டது.

ஓயாமடுவ பிரதேசம் அனுராதபுர மாவட்டத்தில் வில்பத்து சரணாலயத்துக்கும், மகாவிலாச்சிய குளத்துக்கும் இடையில் அமைந்துள்ளது. (ற-5)



இளவாலை – வலித்தூண்டல் பகுதியில் பஸ் தரிப்பிடம் இல்லாது பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சென். ஹென்றிஸ், மானிப்பாய் மகளிர் கல்லூரி, இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை போன்ற பாடசாலை மாணவர்களும் மற்றும் பொதுமக்களும் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர். பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுத்து பயனில்லாத நிலையில் மாணவர்களால் தற்காலிக பஸ் தரிப்பிடம் அமைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

# பெண்களை இணைத்துக் கொள்ள கூட்டமைப்பு பின்னடிக்கக் கூடாது

## மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் அங்கம் வகிக்கும் பெண்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 3

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து பணியாற்றுவதற்கு பல பெண்கள் தயாராக உள்ளனர். அந்தக் கட்சி பெண்களை உள்வாங்கிச் செயற்படுவதற்குப் பின்னடிக்கக் கூடாது.

இவ்வாறு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் அங்கம் வகிக்கும் பெண்கள் தெரிவித்தனர்.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் பெண்கள் அரசியலில் பங்குபற்றுவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. அதிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

அங்கு தெரிவிக்கப்பட்டதாவது:

பெண்கள் தற்போது அரசியலுக்குள் வர மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர். இன்று பெண்களுக்கு பலவிதமான கொடுமைகள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. இதனை யாரும் கண்டுகொள்வதாக இல்லை. கண்டு கொண்டாலும் மேடைப் பேச்சளவிலேயே உள்ளனர். பெண்களின் பிரச்சினைகளைப் பெண்களே அறிவார்கள். பெண்கள் அரசியலுக்குள் நுழைந்தால் பெண்களுக்குரிய பல பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

அன்றைய காலத்தை விட இன்றைய காலத்தில் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் 30 வீத பங்களிப்பு பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனை அரசியல் கட்சிகள் உணர்ந்து செயற்படவேண்டும். பெண்களை அரசியலுக்குள் உட்புகுத்த அவர்கள் முன்வரவேண்டும். பெண்கள் அரசியலுக்குள் வருகிறார்கள் இல்லை என்று கோசம் எழுப்புவதைவிட்டு மற்றும் தமக்கு சார்பான பெண்களை முன்னிறுத்துவதை விட்டு உண்மையாக மக்களுக்கு உழைக்கக்கூடிய பெண்களைத் தேர்ந்தெடுங்கள். அவர்களது சேவையும் இந்த நாட்டுக்கு மிக முக்கியமானது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இணைந்து வேலைசெய்வதற்கு பல பெண்கள் இன்று தயாராக உள்ளனர். அந்தக் கட்சி பெண்களை உள்வாங்குவதற்கு பின்னடிக்கக்கூடாது.

கட்சிகள் எங்களை உள்வாங்கத் தயாராக இல்லாதபோதும் எமது மக்களுக்காக, பெண் கொடுமைகளுக்காக தனித்துப் பெண்கள் குழுவாக இயங்கி போட்டியிடவும் தயங்க மாட்டோம். ஆயினும், கட்சிகளுடன் இணைந்து சேவையாற்றும்போது எமது சேவையானது இன்னும் வலுவுடையதாக இருக்கும் என்று நம்புகின்றோம்.

இதேநேரம் இளம் வயதில் உள்ள பெண்களையும் தேர்தலில் உள்வாங்குவதற்கு தயங்கக்கூடாது. அவர்கள் அதிகம் சேவை செய்யக்கூடிய வாய்ப்பு உள்ளது – என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மகளிர் அபிவிருத்தி நிலையத் தலைவர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் மற்றும் அதில் அங்கத்துவம் வகிக்கும் பெண்களும் கலந்து கொண்டனர். (ற-5-ரி)

# அடிகாயங்களுடன் குடும்பஸ்தர் வைத்தியசாலையில்

முகத்தில் பலத்த அடிகாயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

தங்கைக்குத் தொல்லை கொடுத்தார் என்று அந்தப் பெண்ணின் சகோதரன் அந்தக் குடும்பஸ்தரைத் தாக்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது. சம்பவம் சுன்னாகத்தில் நேற்றுமுன்தினம் மதியம் நடந்தது.

தனது சகோதரிக்கு குறித்த குடும்பஸ்தர் பல தடவைகள் தொல்லை கொடுத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. குடும்பஸ்தரைத் தாக்கியவரிடம் பொலிஸ் விசாரணை நடத்தியபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (ற-4,107)

# காற்றோட்டிக் காய்க்கு மவுசு

ஆடி அமாவாசை விரதத்துக்கு பயன்படுத்தும் காற்றோட்டிக் காய்க்கு நேற்று குடாநாட்டில் கிராக்கி ஏற்பட்டது. சந்தையில் ஒரு காற்றோட்டிக்காய் 20 ரூபாவாக விற்கப்பட்டது. போதியளவு காற்றோட்டிக்காய் வராததால் விலை அதிகரித்தது என்று தெரிவிக்கப்பட்டது. ஆடி மாதத்திலேயே காற்றோட்டி மரங்கள் கூடுதலாகக் காய்ப்பது வழமை. (ற-17)

மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு.சுப்பிரமணியம் முரளிதரன்
(BSc (Hons), M.A(Population Development Studies,
LLB,Attorney-at-Law)

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) ஆக கடமையாற்றிவரும் திரு.சுப்பிரமணியம் முரளிதரன் அவர்கள் இன்று (03.08.2016) புதன்கிழமை உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் சட்டத்தரணியாகப் பதவிப் பிரமாணம் செய்வதையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மாவட்ட மீள்குடியேற்ற அலகு மற்றும் காணி கிளை உத்தியோகத்தர்கள்.
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.
(J/8430) (11/18)

வாணி ரெக்ஸின்
விசேட ஆடித்தள்ளுபடி விற்பனை

வாணி ரெக்ஸ்ரைலின்
ஆடிமாதத்தை முன்னிட்டு
விசேட ஆடித்தள்ளுபடி
16.07.2016 தொடக்கம் 16.08.2016 வரையிலான காலப்பகுதியில் சகலவிதமான ஆடைகளுக்கும் 10% தொடக்கம் 30% வரையிலான அசத்தலான விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

எமது அனைத்து வாடிக்கையாளர்களும் தங்களுக்குத் தேவையான சகல ஆடைத் தெரிவுகளையும் பெற்று விசேட ஆடித்தள்ளுபடியினை அள்ளிச் செல்லுங்கள்



Vani Tex
No.81, Grand Bazaar, Jaffna.
Tell: 021 222 5578

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரங்கள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

**ஜோதிடம்**

மிகவும் துல்லியமான முறையில் ஜாதகம் பார்த்து பலன் சொல்லப்படும்.

தொடர்பு.0765690902

**ஆங்கில ஆசிரியர் தேவை**

வெளிநாடு செல்ல இருக்கும் ஆங்கிலத்தில் எழுதத் தெரிந்த இளைஞருக்கு குறுகிய காலத்திற்குள் நன்கு பேசக் கற்றுத் தரக்கூடிய ஒரு திறமையான ஆசிரியர் உடன் தேவை.

தொடர்பு: 071 7611887

**வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு**

சுழிபுரம் வடக்கு சுழிபுரத்தில் சுழிபுரமிறை கொட்டையடிவளவு என்னும் இடத்தில் மூன்று பரப்பும் ஆறே முக்கால் குழியுடன் வீடு மற்றும் கிணறுடன் காணிவிற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-0767764728
பாக்கியநாதன் பவானி

## நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் -2016

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: **03.08.2016 தொடக்கம் 24.08.2016 வரை** **( மு.ப 9.00 தொடக்கம் பி.ப 2.00 மணிவரை)**
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: **25.08.2016 மு.ப 10.00** மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: **25.08.2016 மு.ப 10.30 மணி** (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்).
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை **'தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கருவப்புலம் வீதி கொக்குவில்** என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, **'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கு 2ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | சோழன்தோட்டவீதி (மஞ்சத்தடி) புனரமைப்பு கோண்டாவில். | 0.94 | 9500.00 | 1000.00 | M 9/C 10 |
| 2. | அடைக்கலநாயகி வீதி புனரமைப்பு- கோண்டாவில் | 0.39 | 4000.00 | 1000.00 | M 9/C 10 |
| 3. | நெல்லியடி வீதி புனரமைப்பு- கொக்குவில் | 1.25 | 12500.00 | 1000.00 | M 8/C 09 |
| 4. | பலாலிவீதி குறுக்கு ஒழுங்கை(சம்பத் வங்கி அருகாமை) புனரமைப்பு- திருநெல்வேலி | 0.38 | 3900.00 | 1000.00 | M 9/C 10 |
| 5. | தலங்காவில் பிள்ளையார் 8ம் 9ம் குறுக்கு ஒழுங்கைகள் மற்றும் முருகன் வீதி 9ம் குறுக்கு ஒழுங்கைதொடர்வேலை- திருநெல்வேலி | 0.49 | 5000.00 | 1000.00 | M 9/C 10 |
| 6. | சிங்கராஜர் ஒழுங்கை புனரமைப்பு - கொக்குவில் | 0.32 | 3250.00 | 1000.00 | M 9/C 10 |
| 7. | பிரம்படி குறுக்கு வீதி புனரமைப்பு- கொக்குவில் | 0.41 | 4200.00 | 1000.00 | M 9/C 10 |
| 8. | 98/10 பலாலி வீதி குறுக்கு ஒழுங்கை. திருநெல்வேலி | 0.54 | 5500.00 | 1000.00 | M 9/C 10 |
| 9. | மாரியம்மன் குறுக்கு வீதி புனரமைப்பு- கொக்குவில் | 0.30 | 3100.00 | 1000.00 | M 9/C 10 |
| 10. | வீரபத்திரர் கோவில் வீதி புனரமைப்பு- கோண்டாவில் | 0.82 | 8200.00 | 1000.00 | M 9/C 10 |
| 11. | பொற்பதி 1ம் ஒழுங்கை தொடர்வேலை மற்றும் புனரமைப்பு- கொக்குவில் | 0.26 | 2700.00 | 1000.00 | M 9/C 10 |
| 12. | ஆலடி வீதி 1ம் ஒழுங்கை கோண்டாவில் | 0.65 | 6600.00 | 1000.00 | M 9/C 10 |
| 13. | கருவேப்புலம் வீதி குறுக்கு ஒழுங்கை புனரமைப்பு- கொக்குவில் | 0.47 | 4800.00 | 1000.00 | M 9/C 10 |
| 14. | மீன் சந்தைக்கான கழிவுநீர்த் தொட்டி அமைத்தல் | 0.17 | 1700.00 | 1000.00 | M 9/C 10 |

**செயலாளர்**
**நல்லூர் பிரதேசசபை,கொக்குவில்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 03 . 11 . 1959

ஆண்டவன் அடியில் 03 . 08 . 2015

அமரர் **சின்னட்டி ஐயாத்துரை**
(மின் பொறிவளர்,இலங்கை மின்சாரசபை)

கடந்த 03/08/2015 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக இன்று (03/08/2016) புதன்கிழமை மதியம் 12.30 மணிக்கு (TCT) சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.03,2ஆம் ஒழுங்கை ,
பலாலி வீதி,யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரமணே நமஹ

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராசையா சரவணபவன்**
(பழனி -ஆசாரி)

தோற்றம் 13.04.1953

மறைவு 07.08.2013

திதி:- ஆடி பிரதமை (03.08.2016)

உயிருக்கு உயிராக இருந்து
எம்மைக் காத்த எமது அப்பாவே!
ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா...
உங்களி ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சங்குவேலி தெற்கு,
மாளிப்பாய்.

குடும்பத்தினர்...

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**பொன்னுத்துரை பரமானந்தன்**
(பொலிஸ் சப் இன்ஸ்பெக்ரர்)

தோற்றம் 25 . 02 . 1938

மறைவு 10 . 08 . 1991



எங்கள் அன்புத் தெய்வமே!
நாள்கள் நகர்ந்து மாதங்களாகி மாதங்கள் ஆண்டுகளாகி
ஆண்டுகள் உருண்டோடி 25 வருடங்களாகியும்
எங்கள் நினைவுகளில் என்றென்றும்
பசுமையாக உங்கள் நினைவுகள்...
பசுமரத்தாணி போல நீங்கள் வாழ்ந்த
காலங்களின் நினைவுகளுடனும் அறிவுரைகளுடனும்
வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்
இறப்பின் வேதனைகள் நெஞ்சை இன்னும் அழுத்துகின்றன.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்...

இல.163/2,
ஸ்ரீதர்மமாவத்தை,
கொழும்பு .08

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் இரண்டாவது நாளாகவும் தொடர்கின்றது

## நியமனம் வழங்கும் கால எல்லை அறிவிக்கும் வரை தொடரும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 3

நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக தொண்டர் ஆசிரியர்கள் ஆரம்பித்த உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது. நிரந்தர நியமனம் வழங்கப்படும் கால எல்லையை தெளிவாக – எழுத்தில் வழங்கும் வரையில் தமது போராட்டம் தொடரும் என அவர்கள் தெரிவித்தனர்.



வடக்கின் 12 கல்வி வலயங்களையும் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்பாக போராட்டத்தை ஆரம்பித்தனர். தமக்கான நிரந்தர நியமனம் எப்போது வழங்கப்படும் என்பதை உறுதிப்படுத்துமாறு கோரி ஆயிரத்து 300 தொண்டர் ஆசிரியர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நிரந்தர நியமனம் வழங்கப்படுவதற்கான நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டுத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் வலயரீதியாக காட்சிப்படுத்தப்பட்டன. ஆனால் இன்னமும் நியமனம் வழங்கப்படவில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

நேற்றுமுன்தினம்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொண்டர் ஆசிரியர்களுடன் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்த விடயம் நடுவண் அரசின் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவைக்குச் சமர்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் நியமனம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்தார்.

ஆளுநரின் செயலாளரின் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு போராட்டத்தைக் கைவிடத் தயாரில்லை என்று தெரிவித்த தொண்டர் ஆசிரியர்கள் நேற்று முன்தினம் இரவும், ஆளுநர் அலுவலகம் முன்பாக போராட்டத்தைத் தொடர்ந்தனர். நேற்றுக் காலையும் தமது போராட்டத்தை அவர்கள் கைவிடாமல் தொடர்ந்தனர்.

ஆளுநர் கூரே நேற்று தம்மைச் சந்தித்தார் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். இந்த விடயம் கல்வி அமைச்சு மட்டுமன்றி ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று ஆளுநர் இதன் போது தெரிவித்தார். நிரந்தர நியமனம் வழங்கப்படும் திகதி தொடர்பில் கால வரையறை தெரிவிக்குமாறு தொண்டர் ஆசிரியர்கள் ஆளுநரிடம் கேட்டனர். காலவரையறையை தன்னால் வழங்க முடியாது என்று ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அதனால் தொண்டர் ஆசிரியர்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர். தமக்கான முடிவு கிடைக்கும் வரையில் போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

(ற-5-101)

# வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்கள் அபிவிருத்திகளுக்கும் உதவ வேண்டும்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு

வவுனியா, ஓக. 3

வடக்கு மாகாண சபையின் நியதி சட்டத்தின் மூலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நியமிக்கப்பட்ட அபிவிருத்திக் குழுவினர், வைத்தியசாலையில் காணப்படும் குற்றங்களைத் தெரிவிப்பவர்களாக மட்டும் இருக்கக்கூடாது. அவற்றைநிவர்த்தி செய்யக்கூடிய ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.



வவுனியா மாவட்டத்தில் இயங்குகின்ற அனைத்துஅரச வைத்தியசாலைகளுக்குமான அபிவிருத்திக் குழுக்களின் ஆரம்பக் கூட்டம் நேற்றுமுன்தினம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி. பசுபதிராஜா தலைமையில் நடைபெற்றது. வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தின் சுகாதாரத் துறை கடந்த இரண்டு வருடங்களில் பெரும் அபிவிருத்தி கண்டுள்ளது. வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை பல துறைகளிலும் அபிவிருத்தி கண்டுள்ளது. புதிய சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது பல மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் கூடிய அவசர விபத்துச் சேவைப் பிரிவொன்றுக்கான நிர்மாணப் பணிகள் நடைபெறுகின்றன.

இதுவரை காலமும் அபிவிருத்தித் திட்டங்களைத் திட்டமிடும் போது பொதுமக்களின் கருத்துகளைக் கேட்பதில்லை. அபிவிருத்தியில் மேலிருந்து கீழ் நோக்கிய முறையே கடைப்பிடிக்கப்பட்டது. தற்போது மாகாண நியதிச்சட்டம் இயற்றப்பட்டு வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சட்டபூர்வமாக வைத்தியசாலைகளுக்கான அபிவிருத்திக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் [illegible] வகையானவர்கள் அங்கம் வகிக்கின்றனர். பதவி வழி நியமனம் பெறும் அரச அதிகாரிகள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சரின் பரிந்துரையுடன் செயலாளரால் நியமனம் செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் அபிவிருத்திக் குழுவில் உள்வாங்கப்பட்டுள்ளனர். மொத்தம் 14 பேர் குழுவில் அங்கம் வகிப்பர்.

வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியே இந்தக் குழுவின் தலைவராக இருப்பார். குழுவின் செயலாளராக, நியமனம் பெற்றவர்களில் ஒருவரை நியமிக்கலாம். வடக்கு மாகாணத்தின் [illegible] அபிவிருத்தி[illegible] நீங்கள் அன்னார் வரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் – என்றார்.

கூட்டத்தில் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன், உதவிச்செயலாளர் திருமதி சுஜீவா, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன், வவுனியா பிரதேச செயலாளர் உதயராசா, மாகாண கட்டடங்கள் திணைக்களப் பொறியியலாளர், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், மருத்துவ உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற-21)

## போதையில் சாரத்தியம் ரூ.26 ஆயிரம் தண்டம்

யாழ்ப்பாணம், ஓக. 3

மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு 26 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் 290 மணித்தியாலங்கள் சமுதாய சீர்திருத்த கட்டளைக்கும் உத்தரவிடப்பட்டது.

அச்சுவேலிப் போக்குவரத்துப் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு நேற்றுமுன்தினம் தனித்தனியாக மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எந்தவித பத்திரமும் இன்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய ஒருவருக்கு 17ஆயிரம் ரூபா தண்டமும், 250 மணித்தியாலம் சீர்திருத்த கட்டளைக்கும் உத்தரவிடப்பட்டது. சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய ஒருவருக்கு 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் 40 மணித்தியாலங்கள் சீர்திருத்த கட்டளைக்கு உத்தரவிட்டார்.

(ற-107)

LORD OF RELOAD
Dialog
Mega அதிஷ்டம்
சனிக்கிழமை இரவு 9.55 க்கு வசந்தம் TV ஊடாக
எழுபதாவது வாரத்தின் வெற்றி இலக்கங்கள்
21 12 37 60 28 E
எதிர்வரும் வாரத்தின் சுப்பர் பரிசு ரூ.10,000,000/-
உங்கள் இலக்கங்களை அறிந்திட, பரிசுகளைப் பெற்றிட 121 அழையுங்கள்.
Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ.போ.ச. பஸ்கள் மீது தாக்குதல்

தென்மராட்சி, ஓக.3
சேவையில் ஈடுபட்ட இ.போ.ச. பஸ்கள் மீது இரவு வேளைகளில் இனந்தெரியாதோர் கற்களால் வீசித் தாக்கினர். பஸ்களின் முன்பக்கக் கண்ணாடிகள் சேதமடைந்தன என சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ் மீது நாவற்குழிப் பகுதியில் வைத்தும், யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற பஸ் மீது கைதடிப் பாலத்துக்கு அருகில் வைத்தும் கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் நேற்றுச் சாவகச்சேரி நீதிமன்றத்தில் அறிக்கையைத் தாக்கல் செய்தனர். (ற-9)

## ஏழாலையில் குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 3
ஏழாலை கிழக்குப் பகுதியில் உள்ள காணி ஒன்றிலிருந்து 80 மில்லி மீற்றர் மோட்டார் குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

காணியைத் துப்புரவாக்கும் போதே குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. மல்லாகம் நீதிமன்றில் கட்டளை பெற்றுக்கொண்ட பொலிஸார் விசேட அதிரப்படையினரின் குண்டுசெயலழிக்கும் பிரிவினரின் உதவியுடன் குண்டை மீட்டு செயலிழக்கச் செய்தனர். (ற-107)

# நகுலேஸ்வரத்தின் புனிதத்தை பேணிப் பாதுகாக்க வேண்டும்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 3
நகுலேஸ்வரத்தையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் நாம் போற்றிப் பாதுகாப்பதற்கும் அதன் புனிதத்தைப் பேணுவதற்கும் தவறியதாலே கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இந்தப் பகுதிக்குப் பொது மக்கள் ஒருவரும் வரமுடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருந்தது. ஒருசில புண்ணிய புருசர்களின் வழிபாடுகளாலும் எதிர்பார்ப்பாலும் இன்று இந்தப் பகுதிக்கு அடியவர்கள் வந்து செல்லக்கூடிய ஒரு பிரதேசமாக மாற்றப்பட்டிருக்கின்றது. இந்தப் புண்ணிய பூமியை அதன் புனிதம் குன்றிவிடாது பாதுகாக்க வேண்டியது எம் அனைவரதும் தார்மீகப் பொறுப்பாகும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். அகில இலங்கை இந்துமா மன்றத்தின் அனுசரணையில் கீரிமலை சிவபூமி மடத்தில் ஆடி அமாவாசை புண்ணிய தினத்தில் நீத்தார் நினைவு நிகழ்வு நேற்று நடை பெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.



"கீரிமலை புண்ணிய தீர்த்தத்தின் மகிமை பற்றியும் இந்தப் பிரதேசத்தின் புனிதம் பற்றியும் நாம் பேசிக் கொண்டிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் எமது நடுவண் அரசின் அரசியல் தலைமைகள் இங்கு ஒரு மீன்பிடித் துறைமுகத்தை அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவது எமக்குச் சினத்தை ஏற்படுத்துகின்றது. இலங்கையின் மிகப் பிரபல்யமானதும் இயற்கைத் துறைமுகமுமாகிய மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தைத் தமது தேவைக்கும் இராணுவப் பயன்பாட்டுக்கும் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளும் கபட நோக்கில் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களை வேறிடத்தில் மீள்குடியேற்றம் செய்வதற்கும் அவர்களுக்கான வாழ்வாதாரச் செயற்பாடான மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்குப் பெயரளவில் ஒரு துறைமுகம் அமைத்துக் கொடுக்க வேண்டியுமே நடுவண் அரசு எதுவித கலந்துரையாடல்களோ அல்லது சமூகம்சார் விழிப்புணர்வுகளோ அற்ற நிலையில் கீரிமலைப் பிரதேசத்தை மீன்பிடித் துறைமுகமாக மாற்ற முயன்றுள்ளது. இந்தச் செயல் ஒட்டுமொத்த இந்துக்களையும் ஏன் ஏனைய மதத்தவர்களைக் கூட வெறுப்பூட்டக் கூடிய ஒரு செயற்பாடாக அமைந்திருப்பது இங்கு பேசற்பாலது.

எம்மவர்களில் சிலர் தொலைக் காட்சிகளினூடாக 'ஒப்புக்கு மாரடிக்க' முயல்வது வேதனைக்குரியது. 'புனிதம் கினிதம் என பேசிக் கொண்டிருக்காதீர்கள். இந்தப் பகுதியில் குடியேற்றப்பட்டிருக்கின்ற மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஒரு மீன்பிடித் துறைமுகம் அவசியம். எனவே கீரிமலை மீன்பிடித் துறைமுகம் எதுவித மறுதலிப்புக்களும் இன்றி அமைக்கப்பட வேண்டும்' என்று ஒரு மிகக் கீழ்த்தரமான அறைகூவல் ஒளிபரப்பு இரண்டொரு நாள்களுக்கு முன் தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பப்பட்டது என்று எனக்குக் கூறப்பட்டது.

மக்களோடு மக்களாக வாழாதவர்கள் இப்பேர்ப்பட்ட பெரிய தவறுகளைச் செய்கின்றார்கள். சரித்திரம் அறியாதவர்கள் இவ்வாறான தவறுகளை இழைக்கின்றார்கள். தனிப்பட்ட அல்லது அரசியல் காரணங்களுக்காகத் தமது மக்களையே விலை பேசத் துணிகின்றார்கள்.

இவ்வாறான கருத்துக்களைக் கூற முயல்வது எவ்வளவு எதிர்மறையான தாக்கங்களை மக்களிடையே ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு புனிதத் தலம் அல்லது புண்ணிய பூமி அதன் மகத்துவம் சிறிதும் குன்றாமல் பாதுகாக்கப்பட வேண்டியது எம் அனைவரதும் கூட்டுப் பொறுப்பாகும்.

இந்துசமய ஆலயங்களோ அல்லது புனித பூமிகளோ ஆயினும் சரி அல்லது கிறிஸ்தவ, பௌத்த சமயத் தலங்கள் ஆயினும் சரி அவற்றின் புனிதம் எந்தச் சந்தர்ப்பத்திலும் குறைவடையாது பாதுகாக்கப்படல் வேண்டும்.

கீரிமலைப் பிரதேசத்தில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை அமைப்பதென்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு செயற்பாடாகும். இதனை அரசு நன்கு புரிந்துகொண்டு மாற்றுத் திட்டங்களை முன்வைக்கும் என நம்புகின்றேன்.

ஒரு பக்கத்தால் மயிலிட்டியைத் தாம் விடுவிக்கப் போகின்றோம் என்று கூறிக் கொண்டு கீரிமலையில் மீன் பிடித் துறைமுகம் அமைக்க எத்தனிப்பது கண்ணியமற்ற செயலாகவே எனக்குப் படுகின்றது" - என்றார். (ற-5)






## பிரஜைகள் உரிமைக்கான அமையம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பம்

முல்லைத்தீவு, ஓக.3
முல்லைத்தீவு மாவட்டத்துக்கான பிரஜைகள் உரிமைக்கான அமையம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்வு கூழாமுறிப்பு ஆலயத்தில் நடைபெற்றது.

அமையத்தின் பதிவுச் சான்றிதழ் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனால் கூழா முறிப்பு பங்குத்தந்தை மரியதாஸிடம் கையளிக்கப்பட்டது.

அமையத்தின் தலைவராக பா.நவரட்ணராஜாவும், செயலாளராக திருமதி இ.சுபத்திராவும், பொருளாளராக பரமானந்தமும், உபதலைவராக பரந்தாமனும், உபசெயலாளராக திருமதி ம.ஈஸ்வரியும் செயற்படுவர்.

நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வன்னி மறைக்கோட்டக் குரு முதல்வர் றெக்னோ அடிகளார், நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜாவின் செயலாளர், கோட்டக் கல்விப்பணிப்பாளர், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரஜைகள் குழு உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலய சூழலை இம்முறை சி.சி.ரி.வி. கமரா கண்காணிக்கும்

## யாழ். மாநகர ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஓக.3
நல்லூர் கந்தன் ஆலய திருவிழாக்காலத்தில் இம்முறைபாதுகாப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுக் கண்காணிக் கப்படும். இவ்வாறுயாழ். மாநகர ஆணையாளர் வாகீசன் தெரிவித்தார். நல்லூர் ஆலய திருவிழா முன்னேற்பாடுகள் குறித்து நேற்று யாழ். மாநகர சபையில் ஊடக சந்திப்பு நடத்தப்பட்டது. அதில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

திருவிழா எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பித்து அடுத்த மாதம் 3ஆம் திகதிவரை நடைபெறும். 7 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் ஆலயச் சூழலில் வழமையான இடங்களில் தடைகள் ஏற்படுத்தப்படும். போக்குவரத்து மாற்றுப் பாதைகள் ஊடாகவே மேற்கொள்ள வேண்டும்.

> ஆலயத்துக்கு கலாசார உடைகளுடன் வருமாறு கோருகின்றோம். பாதணிகளை வீதிக்கு வெளியே வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின் றன. தூக்குக் காவடி எடுப்பவர்கள் சுவாமி வீதி வலம் வரும் நேரங்களில் வருவதைத் தவிர்க்க வேண்டும்.

ஆலயத் திருவிழாக் காலத்தில் ஆலயச் சுற்றாடலில் பாது காப்புக் கமராக்கள் பொருத்தப் படும். ஆலயத்துக்கு கலாசார உடைகளுடன் வருமாறு கோரு கின்றோம். பாதணிகளை வீதிக்கு வெளியே வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தூக்குக் காவடி எடுப்பவர்கள் சுவாமி வீதி வலம் வரும் நேரங் களில் வருவதைத் தவிர்க்க வேண்டும்.

ஆலயச் சுற்றாடலின் எந்தப் பகுதியிலும் நடமாடும் வியாபாரத்துக்கு அனுமதி வழங்கப்படாது. இந்த ஆண்டு முதல் பொலித்தீன் பாவனை தடை செய்யப்படுகின்றது. அவை தொடர்பாக பொருள்கள் விற்பனையும் மட்டுப்படுத்தப்படும். பிளாஸ்ரிக்கினாலான அர்ச்சனைத் தட்டு விற்பனையும் தடை செய்யப்பட்டுள்ளது. ஆலய வீதிகளில் பாதணிகளுடன் நடமாடுவதைத் தவிர்க்கவும். ஆலயச் சூழலில் விளம்பரப் படுத்தல் தடை செய்யப்பட்டுள்ளது. ஆலயத்துக்கு வருவோர் தமது தங்க நகைகள் தொடர்பில் கவனம் கொள்ள வேண்டும்.

சைக்கிள்களுக்கு 5 ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 10 ரூபாவுமே அறவிடப்பட வேண்டும். இதை மீறுவோர் மீது நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையூடாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.– என்றார். (ற-101)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.3
மக்கள் வங்கி நெல்லியடிக் கிளையால் கரவெட்டி கல்விக் கோட்டத்துக்குட்பட்ட தரம் 5 மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை வியாழக் கிழமை காலை 8.30 மணி முதல் 11.30 மணிவரை நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தின் மண்டபத்தில் நடைபெறும். (ற-422)

## பெண்களிடம் தாலிக்கொடி அபகரிப்பு

தென்மராட்சி, ஓக.3
ஆலயம் சென்று வீடு திரும்பிய இரு பெண்களின் தாலிக் கொடிகள் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் அபகரிக் கப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் சாவகச்சேரி கெருடாவில், கல்வயல் விளைவேலி ஆகிய இடங்களில் அண்மையில் நடந்தன.

கெருடாவில் பகுதியில் வாகனத்தில் இருந்து இறங்கிச் சென்றவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண் அணிந்திருந்த எட்டுப் பவுண் நிறையுடைய தாலிக் கொடியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

தேவாயத்துக்குச் சென்ற பின்னர் மட்டுவில் மத்தியில் உள்ள வீட்டுக்கு சைக்கிளில் சென்றபோது கல்வயல் துர்க்கை அம்மன் கோவிலடியில் பெண் அணிந்திருந்த தாலிக் கொடியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அபகரித்துக் கொண்டு தப்பினர்.

இரு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)



ஆடி அமாவாசை தினமான நேற்று காரைநகர் ஈழத்துச் சிதம்பர புனித தீர்த்தக் கரையில் நூற்றுக் கணக்கான பத்தர்கள் தீர்த்தமாடி பிதிர்க்கடன் நிறைவேற்றினர். (ற-250)

## மாடுகளை லொறியில் ஏற்றி சென்றவருக்கு தண்டம்

சித்திரவதைக்கு உள்ளாக்கும் வகையில் ஐந்து மாடுகளை லொறியில் ஏற்றிச் சென்ற சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக் கப்பட்டது.

மிருக வதைச் சட்டத்தின் கீழ் வாகனச் சாரதிக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த பதில் நீதிவான் சாரதிக்கு தண்டம் விதித்தார்.

நாவற்குழி வேலன் கோயிலுக்கு அருகில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட வாகனச்சாரதிக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப் பட்டதுடன் மணலைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிடப்பட்டது. (ற-9)

## வீட்டுத் தோட்டம் செய்வதற்கு 4 ஆயிரம் பயனாளிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக. 3
தேசிய உணவு உற்பத்தி சிறப்பு வேலைத்திட்டத்தில் மேற் கொள்ளப்படவுள்ள வீட்டுத் தோட்டப் பயிர்செய்கைக்கு ஆர்வமுள்ள 4 ஆயிரம் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் இ.நிசாந்தன் தெரிவித்தார்.

கமநல சேவைகள் அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய உணவு உற்பத்தி சிறப்பு வேலைத்திட்டம் 2018ஆம் ஆண்டு வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஆர்வமுள்ள பயனாளிகள் 4 ஆயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு புடோல், பாகல், பீர்க்கு, கீரை, பயிற்றை, மிளகாய், மற்றும் கறிமிளகாய் போன்ற 7 வகையான மரக்கறி விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

பழமரக்கன்றுளாக எலுமிச்சை, மாங்கன்று, மற்றும் கொய்யாக் கன்று என்பனவும் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம்பயனாளிகள் தமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதுடன் வீட்டுக்குத் தேவையான பழங்கள் மற்றும் காய்கறிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் சேதனப் பசளையையே பாவிக்கவேண்டும். நஞ்சற்ற பழவகை, காய்கறிகள் பெறலாம். செலவு குறைவு. பசுமை நிறைந்த வீட்டுச் சூழலை வைத்திருக்க முடியும் என எதிர்பார்க் கப்படுகிறது– என்று அவர் தெரிவித்தார். (ற-5-107)

## கஞ்சா வைத்திருந்த இளைஞருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஓக.3
பண்டத்தரிப்பில் கஞ்சாச் சரை வைத்திருந்தவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தது மல்லாகம் நீதிமன்று.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வீதி ரோந்தில் ஈடுபட் டிருந்த பொலிஸார் வீதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்ற இளைஞரிடம் விசாரணை செய்தனர். அவரது உடைமையில் இருந்த கஞ்சா மீட்கப்பட்டது. நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அபராதம் விதிக்கப் பட்டது. குறித்த நபர் முன்னர் இரண்டு தடவைகள் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-107)

# முகாமில் பெண்களிடம் தகாது நடந்த இராணுவத்தை தண்டிக்க வேண்டும்

## அப்போதே நல்லிணக்கம் ஏற்படும் என்று கருத்தறியும் செயலணியிடம் மக்கள் கருத்து

கிளிநொச்சி, ஓக 3
போரின் பின்னர் முகாம்களில் தங்கியிருந்த பெண்களுக்கு பல்வேறு வகையான துன்புறுத்தல்களை இராணுவம் மேற் கொண்டது. ஆண் இராணுவத்தினரால் எமது பெண்கள் தகாத முறையில் சோதனையிடப்பட்டார்கள். எமது சகோதரிகளை சித்திரவதைசெய்த இராணுவத்தினருக்கு சாவுத் தண்டனை வழங்க வேண்டும். அப்போது தான் எம்முள் கொழுந்து விட்டு எரியும் நெருப்பை அணைத்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

இவ்வாறு கிளிநொச்சியை சேர்ந்த மக்கள் நல்லிணக்க செயலணியினரிடம் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

போர்க்குற்ற விசாரணைகளை எவ்வாறு முன்னெடுப்பது, மற்றும் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகங்களை அமைப்பது தொடர்பாக மக்களுடைய கருத்துக்களைக் கேட்டறியும் நல்லிணக்க செயலணியின் கிளிநொச்சி வலய அமர்வு நேற்றுமுன்தினம் பளை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. அதிலேயே மக்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவு மாவட்டங்களில் அமைய வேண்டும். அமைக்கப்படும் அந்த அலுவலகம் நடமாடும் சேவையாக செயற்பட வேண்டும். போரால் கணவனை இழந்த குடும்பங்களுக்கு நிரந்தர அல்லது மாதாந்த உதவிகள் அந்த அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட வேண்டும். போரில் கொல்லப் பட்ட எமது மக்களுக்காக நினைவுத் தூபி ஒன்றை அமைத்து அதில் மக்கள் வழிபடக் கூடியவாறு ஒழுங்குகள் செய்யப்படவேண்டும். அதற்குப் பாதுகாப்பு வழங்கவேண்டும். மாவீரர்களை வழிபட அனுமதி வழங்க வேண்டும்.

வடக்கில் மக்களுடைய காணிகளை அபகரித்து மக்களை நிர்க்கதியாக்கி அலைய வைக்கும் இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேற வேண்டும். குருநாகல் ஆசிரிய வைத்தியசாலையில் இருந்தவர்கள் கடத்தப் பட்டார்கள். மக்கள் தங்கியிருந்த முகாம்களில் பெண்களுக்கு பல்வேறு வகையான துன்புறுத்தல்களை இராணுவம் மேற் கொண்டது. மக்கள் இரணுவக் கட்டுப்பாட்டுக்குள் வரும்போது ஆண் இராணுவத்தினர், பெண்களைத் தகாத முறையில் சோதனை செய்தார்கள். எமது சகோதரிகளிடம் தவறாக நடந்து கொண்ட இராணுவத்தினரை எம்மால் மன்னிக்க முடியாது. அவர்களுக்கு சாவுத் தண்டனை வழங்க வேண்டும்.

பன்னாட்டு விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு குற்றம் இழைத்தவர்கள் யாரெனக் கண்டறிந்து அவர்களுக்கு தண்டனை வழங்குவதன் மூலமே நல்லிணக்கத்தைப் பற்றிப் பேச முடியும். அப்போதுதான் பாதிக்கப்பட்ட எம்முள் கொழுந்து விட்டு எரியும் நெருப்பைக் கட்டுப்படுத்த முடியும். அந்த தீ கட்டுப்படுத்தப்பட்டாலே நல்லிணக்கம் ஏற்படும் – என்றனர். (ற-21,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் அலுவலகம் அமைப்பதற்கான தேவையில்லை

## தயான் ஜயதிலக கூறுகின்றார்

கொழும்பு, ஓக.3
காணாமல் போனோர் பணியகத்தை அமைக்க வேண்டிய தேவை இலங்கையில் இல்லை.
இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் இராஜதந்திரியும், அரசியல் ஆய்வாளருமான தயான் ஜயதிலக.
வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பினார். காணாமல் போனோர் பணியகம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மகிந்த ராஜபக்ச உட்படப் பலரையும் அதில் அவர் சாடியிருந்தார். பலரில் தயான் ஜயதிலகவின் பெயரும் அடங்கியிருந்தது.



அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் தயான் ஜயதிலக மேற்கண்டவாறு கூறினார்.
இராணுவ ஆட்சிக் காலங்களில் காணாமல் போனவர்களை விசாரணை நடத்துவதற்கே காணாமல் போனோர் பணியகம் நிறுவப்பட்டது. இந்த நடைமுறை லத்தீன் அமெரிக்காவில் பின்பற்றப்பட்டது. பன்னாட்டுத் தலையீட்டுடன் விசாரணைப் பொறிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது.
இலங்கையின் நிலைமை முற்றிலும் வேறுபட்டது. ஜனநாயக ரீதியில் தெரிவான அரசுகள், ஒழுக்கமான இராணுவத்தைக் கொண்டு பயங்கரவாதிகளுடன் போரிட்டது. இந்தப் பின்னணியைக் கொண்ட எந்தவொரு நாட்டிலும் காணாமல் போனோர் பணியகம் அமைக்கப்படவில்லை.
காணாமல் ஆக்கப்பட்டவர்களைப் பற்றி மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான குழு விசாரணை நடத்தியது. குற்றச் செயல்களுக்குப் பொறுப்புக் கூறுவது அல்லது பன்னாட்டு விசாரணை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ-மூனுக்கு உறுதி வழங்கினார் என இந்த அரசு பொய் கூறுகின்றது - என்றார். (ற-5)

# இராணுவச் சிப்பாயின் மீது பௌத்த பிக்கு துர்நடத்தை

## கடும் உபாதைகளுடன் சிப்பாய் வைத்தியசாலையில் சேர்ப்பு

கொழும்பு, ஓக.3
சிலாபம் மாதம்பை பௌத்த பிக்கு ஒருவரால் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர் கடுமையான உபாதைகளுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். குறித்த பௌத்த மதகுரு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
பொலிஸ் தரப்பு தகவல்களின் படி, மாதம்பை செத்சிரிகம பகுதியிலுள்ள பௌத்த விகாரையைச் சேர்ந்த 25 வயதுடைய பௌத்த பிக்கு அதே வயதையுடைய இராணுவச் சிப்பாயை கடந்த மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரையான மூன்று நாள்கள் பாலியல் துர்நடத்தைக்கு உள்ளாக்கினார்.
ஹிக்கடுவை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட இந்தச் சிப்பாய் வவுனியா கனகராயன்குளம் இராணுவ முகாமில் பணியாற்றி வருகின்றார். மொழிப் பயிற்சிக்காகக் கண்டி கொத்மலைப் பகுதியில் அமைந்துள்ள மொழிப்பயிற்சி நிலையத்தில் பயின்றார் என்று தெரியவருகிறது.
முகப்புத்தகத்தின் ஊடாக இந்தப் படைச் சிப்பாய்க்கும் - பௌத்த பிக்குவுக்கும் இடையில் தொடர்புகள் ஏற்பட்டதாகத் என்று தெரியவருகிறது.
பௌத்த பிக்குவின் அழைப்பின் பேரில் கடந்த 24 ஆம் திகதி படைச் சிப்பாய் செத்சிரிகம பௌத்த விகாரைக்குச் சென்று தங்கினார். அவர் மீது பௌத்த பிக்கு பாலியல் துர்நடத்தை புரிந்துள்ளார்.
மீண்டும் கொத்மலை மொழிப் பயிற்சி நிலையத்துக்குச் சென்ற குறித்த படைச் சிப்பாய் நோய் வாய்ப்பட்டார். கம்பகா ஆதாரவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அதில் சிப்பாய் மோசமான முறையில் பாலியல் துர்நடத்தைக்கு உள்ளானமை தெரியவந்தது என பொலிஸார் தெரிவித்தனர். பௌத்த பிக்குவை மாதம்பை பொலிஸார் கைது செய்து சிலாபம் நீதிவான் மன்றில் முற்படுத்தினர். (ற-5)

# சட்டவிரோத வெளிநாட்டு மதுவால் திறைசேரிக்கு ரூ. 6,000 மில். நட்டம்

கொழும்பு, ஓக.3
வெளிநாட்டு மதுபானங்களின் சட்ட விரோத இறக்குமதியால் திறைசேரிக்கு 6 ஆயிரம் மில்லியன் ரூபாவரை இழப்பு ஏற்பட்டுள்ளது.
இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவோரைக் கண்டு பிடிக்கும் நோக்கில் நிதி அமைச்சின் கீழ் இயங்கும் விசேட போதைப் பொருள் சோதனைப் பிரிவு பல்வேறு சோதனைகளை முடுக்கிவிட்டுள்ளது.
நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்கவின் பரிந்துரைக்கமையவே இந்த விசேட பிரிவு அமைக்கப்பட் டது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தேடுதலில் தெமட்டகொடவில் பெருந்தொகையான வெளி நாட்டு மதுபானங் கள் கைப்பற்றப்பட் டன. சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கலால் திணைக்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை நடத்துகின்றனர். (ற-5)




## கூட்டு எதிரணி நடவடிக்கை அரசை மாற்றாது - லால்காந்த

கொழும்பு, ஓக.3
மகிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சி என்ன நடவடிக்கையை முன்னெடுத்தாலும் தேசிய அரசில் தாக்கம் செலுத்த முடியாது.
- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் உயர் பீட உறுப்பினர் லால் காந்த தெரிவித்தார்.
கூட்டு எதிரணியின் நடைபவனி தொடர்பில் கூறும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
பல லட்சம் மக்களைத் திரட்டுவோம் என்றனர். சில ஆயிரம் மக்களையே அவர்களால் திரட்ட முடிந்தது. இவ்வாறுதான் மே தினக் கூட்டத்திலும் மகிந்த சார்புக் குழு கூறியது. கூடிக் கலைந்ததை விட நாட்டில் எந்த மாற்றத்தையும் அது செய்யவில்லை. கூட்டு எதிர்க்கட்சியின் நடவடிக்கைகள் மகிந்த சார்புக் குழுவுக்கு பின்னடைவையே ஏற்படுத்துகின்றன- என்று அவர் குறிப்பிட்டார். (ற-5)

# தாய்ப்பால் ஊட்டுதலில் இலங்கை முதலிடத்தில்

கொழும்பு, ஓக.3
தாய்ப்பால் ஊட்டுதல் தொடர்பில் பன்னாட்டு ரீதியில் நடத்தப்பட்ட ஆய்வில் இலங்கை முதலிடம் பெற்றது.
121 நாடுகளில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பாலித்த மகிபால தெரிவித்தார்.
இலங்கையில் பாலூட்டும் தாய்மார் தற்போது 92 வீதமாகக் காணப்படுகின்றனர். குழந்தைகளுக்கான பால்மா தொடர்பான பல்வேறு விளம்பரங்களால் இந்த வீதம் குறைவடைகின்றது.
அனைத்துத் தொழில் நிறுவனங்களும் தமது ஊழியர்களுக்கு பலூட்டுவதற்கான நேரத்தை வழங்க வேண்டும்- என்று பாலித்த மகிபால குறிப்பிட்டார்.
இந்த ஆய்வில் கியூபா இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.
2012ஆம் ஆண்டு 51 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்விலும் இலங்கையே முதலிடம் பெற்றிருந்தது.
இந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து 7ஆம் திகதிவரை தேசிய பாலூட்டல் வாரம் கடைப்பிடிக்கப்படுகின்றது. (ற-5)

# ஒரே சீனா என்ற கொள்கையே இலங்கைப் பௌத்தர்களுக்கு

## சீனத் தூதரிடம் தெரிவித்தார் அஸ்கிரிய பீடாதிபதி

கொழும்பு, ஓக.3
இலங்கை பௌத்தர்கள் ஒரே சீனா என்றை கொள்கையையே ஆதரிக்கின்றனர்.
இவ்வாறு அஸ்கிரிய பீடாதிபதி வண.வரகாகொட ஞானரத்தின தேரர் தெரிவித்தார்.
கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்தித்தார். அதன்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார் என்று சீனத் தூதரகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.
மதம் என்ற போர்வையில் சீனாவைப் பிளவுபடுத்த எந்த சக்திகளையும் மகா சங்கம் அனுமதிக்காது என்று அஸ்கிரிய பீடாதிபதி கூறினார். பொருத்தமான தருணம் ஒன்றில் சீனாவுக்குப் பயணம் செய்யுமாறு அஸ்கிரியப் பீடாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது என்றும் சீனத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார். (ற-5)

## மைத்திரி இல்லம் மகிந்தவுக்கு

கொழும்பு, ஓக.3
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயன்படுத்திய இல்லம் 30 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்படவுள்ளது.
இலங்கை அரசமைப்பின்படி முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு உத்தியோகபூர்வ இல்லம், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், வாகனங்கள் வழங்கப்பட வேண்டும். இதனால்விஜேரமா வீதியில் உள்ள ஜனாதிபதி மைத்திரிபாலவில் இல்லத்தை மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
தற்போதைய ஜனாதிபதி முன்னர் அமைச்சராகக் கடமையாற்றியபோது இந்த இல்லத்தில் தங்கியிருந்தார்.(ற-5)

# சிறப்பு பொருளாதார வலயம் உருவாக்க சீனாவுக்கு காணி

## இலங்கை வழங்கவுள்ளது என்று சைனா டெய்லி நாளிதழ் செய்தி

கொழும்பு, ஓக.3
சிறப்புப் பொருளாதார வலயத்தை உருவாக்குவதற்காக சீனாவுக்கு 55 சதுர கிலோமீற்றர் நிலப்பகுதியை இலங்கை வழங்கவுள்ளது.
இவ்வாறு பீஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்தது என்று சைனா டெய்லி நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.
அதில் தெரிவிக்கப்பட்டதாவது- அம்பாந்தோட்டையில் சிறப்புப் பொருளாதார வலயத்தை உருவாக்க சீனா 55 சதுர கிலோமீற்றர் காணியைக் கோரியது. அதற்கான நிலங்களைப் பெற்றுக் கொடுக்க செயல்முறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார். சிறப்புப் பொருளாதார வலயம் எங்கு அமையவுள்ளது என்பது குறித்து முடிவாகவில்லை.
சிறப்புப் பொருளாதார வலயம் தொடர்பாகப் பேச்சு நடத்த சீன அதிகாரிகள் குழு அடுத்தவாரம் கொழும்பு செல்லவுள்ளது என்றுள்ளது. (ற-5)

# ஈழத் தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்குங்கள்

## வலியுறுத்திச் சென்னையில் பேரணி

கொழும்பு, ஓக.3
இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்றும், நாடு திரும்ப விரும்புவோருக்கு விதிக்கப்படும் தண்டப்பணம் குறைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி சென்னையில் உள்ள ஈழத் தமிழ் அகதிகள் அமைதிப் பேரணி நடத்தினர்.
அதில் சுமார் 600 பேர் பங்கு பற்றினர். தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை தமிழக முதலமைச்சர் அலுவலகத்தில் கையளித்தனர்.
பேரணியில் பங்கேற்ற ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் செயலாளர் ஞானராஜ் தெரிவித்ததாவது:
முகாம்களுக்கு வெளியே உள்ள அகதிகள் நாடு திரும்ப விரும்பும்போது இந்தியாவில் தங்கியிருந்த காலம் தொடக்கம் ஆண்டு ஒன்றுக்கு 3 ஆயிரத்து 600 ரூபா (இந்திய நாணய மதிப்பு) தண்டமாகச் செலுத்த வேண்டும். நுழைவிசைவுக் கட்டணமாக 10 ஆயிரத்து 500 ரூபா செலுத்த வேண்டும்.
நீண்டகாலமாக இந்தியாவில் தங்கியுள்ளவர்கள் இலட்சக்கணக்கில் தண்டம் செலுத்த வேண்டி ஏற்படுகின்றது. தண் டம் செலுத்த வழியில்லாததால் நாடு திரும்ப விரும்பியும் பலர் தொடர்ந்து தமிழ் நாட்டிலேயே தங்கியுள்ளனர் - என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமையகத்துக்கு எதிரான நடவடிக்கை கண்டிக்கத்தக்கது

## சந்திம வீரக்கொடி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 3
அரசியல் களத்துக்கு அடிப்படையாக விளங்கும் இல்லமே கட்சியின் தலைமையகமாகும். அதைக் கொச்சைப்படுத்தும் விதமாக கூட்டு எதிர்க்கட்சியின் நடைபவனியின்போது இடம்பெற்ற சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறு பெற்றோலிய வள அமைச்சரும் முன்னாள் பிரதி சபாநாயகருமான சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.
கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கட்சியின் தலைமையகத்துக்கு முன்னால் நடைபவனியில் செல்லும் போது கூச்சலிட்டு தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களையும் பிரயோகித்தனர். இது குறித்து அமைச்சரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.
இந்த நடைபவனியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் மாத்திரம் கலந்து கொள்ளவில்லை. தலைமையகத்துக்கு எதிராக கூச்சலிட்டவர்கள் எமது கட்சி உறுப்பினர்களாக இருப்பார்கள் என்பது சந்தேகமே எனவும் அவர் குறிப்பிட்டார். (ற-5)

# கற்பனைக் கதைகளைக் கூறினாலும் கடந்த அரசின் கடன்களால் சிக்கலே

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 3
மேடைகளில் கற்பனைக் கதைகளைக் கூறிக் கொண்டு வீதி வலம் வருகின்ற போதும் கடந்த அரசு நாட்டில் ஏற்படுத்தியிருந்த பொருளாதாரப் பிரச்சினைகளின் விளைவுகளைத் தற்போது மக்கள் அனுபவிக்க வேண்டியுள்ளது.
இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்தார்.
கொழும்பு சினமன் கிரேண்ட் விடுதியில் நடைபெற்ற இலங்கை பொருளாதார மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இலங்கை தற்போது 9 ஆயிரம் மில்லியன் ரூபா கடன் சுமையை எதிர்கொண்டுள்ளது. இந்தப் பொருளாதார நிலமையை அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் பொது மக்களும் விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.
சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறைகளிலிருந்து தற்போது நாட்டின் பொருளாதாரத்துக்கு கிடைக்கும் பங்களிப்பு 8 சதவீதம் முதல் 10 சதவீதம் வரையிலாகும். அதனை 20 சதவீதமாக உயர்த்த முடியுமாயின் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை மேலும் பல மான நிலைக்குக் கொண்டு வரக்கூடியதாக இருக்கும்.
கடன் சுமைகள் இருந்த போதும் அரசால் மக்களுக்கு வழங்கும் உதவிகள் ஒருபோதும் நிறுத்தப்படாது. உதவிகளுக்காக செலவிடப்படும் நிதியை ஈட்டிக் கொள்வதற்காக உற்பத்தித் துறையில் குறிப்பிட்ட வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.
பொது மக்களுக்குச் சுமையை ஏற்படுத்தாத வகையில் அரச நிதி முகாமைத்துவத்தையும் நிதி ஒழுங்குகளையும் பேணி வர வேண்டும். இதற்கு அரச துறையும் தனியார் துறையும் ஒன்றாகச் செல்லும் புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.
தற்போது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் இருந்து அரச பொருளாதாரத்துக்கு கிடைத்த பங்களிப்பு தொடர்பில் திருப்தியடையக் கூடியதாக இல்லை. இலங்கையை சுற்றி இருக்கும் கடல் மற்றும் நாட்டில் உள்ள ஏனைய வளங்களில் இருந்து நாம் சரியான பயனைப் பெற்றுக் கொள்கிறோமா என்பதில் பிரச்சினைகள் உள்ளது.
நாட்டில் உள்ள வளங்களை பயன்படுத்துவதில் ஆசிய வலயத்தில் உயர்ந்த மட்டத்தில் உள்ள ஒரு நாடு என்ற நிலையை இதுவரை அடைந்து கொள்ள முடியாதுபோன கனவை நனவாக்குகின்ற நோக்குடன் பிரச்சினைகளில் இருந்து வெளியேறி அவற்றுக்குத் தீர்வுகளைத் தேடுவதிலும் சொற்களுக்குள் வரையுண்டு போகாது செயற்படுவது அவசியம் - என்றார். (ற-5)

# பியசேனவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக. 3
கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.பியசேனவின் விளக்கமறியல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டது.
நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தியபோதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.
அரச வாகனத்தைத் திருப்பிக் கையளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டில் பியசேன கடந்த வாரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.
அரச வாகனம் பொலிஸாரல் கைப்பற்றப்பட்டதுடன் சாரதியும் கைது செய்யப்பட்டார். (ற-5)

# மணமகள் தேவை என விளம்பரம் செய்து மோசடி செய்தவர் கைது

கொழும்பு, ஓக. 3
பத்திரிகைகளில் மணமகள் தேவை எனும் விளம்பரங்களைப் பிரசுரித்து, தொடர்பை ஏற்படுத்தி, திருமண வாக்குறுதியை வழங்கி லட்சக்கணக்கான ரூபா பணத்தை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
கிரில்லவல, கொகிஸ்கடை சந்தியில் வைத்து சந்தேக நபரைக் கைது செய்த பொலிஸார், அவரை மகர நீதிவான் முன்னிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று முற்படுத்தினர். அவரை இன்று புதன்கிழமை வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
வாகன வர்த்தகத்தில் ஈடுபடுபவர் எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டுள்ள சந்தேகநபர் பல்வேறு விலாசங்களில் இருந்துள்ளார். கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரிடமிருந்து அடையாள அட்டைகள் சில கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-5)

# உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தை திருத்துவதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு, ஓக. 3
2012 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற தேர்தல் சட்டத்தைத் திருத்த அரசு தீர்மானித்துள்ளது என்று உள் ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைக்ள் அமைச்சு தெரிவித்தது.
இது குறித்து அமைச்சரவைக்கு பணிப்புரைகளை சமர்ப்பிப்பது தொடர்பில் அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.
குழுவின் தலைவராக அமைச்சர் பைசர் முஸ்தபா நியமிக்கப்பட்டார்.
ரவூப் ஹக்கீம், சுசில் பிரேமஜெயந்த, வஜிர அபேவர்த்தன, ரிசாட் பதியுதீன், மகிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக, விஜேதாஸ ராஜபக்ச மற்றும் மனோ கணேசன் ஆகியோர் இந்த குழுவின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.
இந்தக் குழுவின் செயலாளராக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி நியமிக்கப்பட்டுள்ளார். (ற-5)

# போட் சிற்றி திட்ட நிறுவனத்துக்கு மேலும் இரண்டு ஹெக்ரேயர் காணி

கொழும்பு, ஓக. 3
கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை மேற்கொள்ளும் நிறுவனத்துக்கு இரண்டு ஹெக்ரேயர் காணியை வழங்குவதற்கு அரசு முடிவுசெய்துள்ளது.
இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன் போதே அவர் அவ்வாறு குறிப் பிட்டார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரது சீனப் பயணத்தின் போது ஏற்பட்ட நல்லுறவின் பிரதிபலனாக கொழும்பு துறைமுக நகர திட்டப் பணிகளின் தாமதத்தால் ஏற்பட்ட நட்டத்தை பெற்றுக் கொள்ளாதிருக்க அந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கும் சீன நிறுவனம் தீர்மானித்துள்ளது.
அதற்குப் பதிலீடாக குறித்த வேலைத் திட்டத்துக்கு, இரவு நேர கார் பந்தயப் போட்டிகள் (நைட் ரேஸ்) நடத்துவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த காணியில் இருந்து இரண்டு ஹெக்ரெயர்களை சீன நிறுவனத்திற்கு வழங்க இணக்கம் காணப் பட்டுள்ளது.
துறைமுக நகரத் திட்டப் பணிகளை இடைநிறுத்தல், மீண்டும் ஆரம்பித்தல், பொருள்கள் சேதமடைதல் ஆகியவற்றால் சீன நிறுவனத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத் தொகையை இலங்கை அரசு வழங்கத் தேவையில்லை. (ற-5)

# மைத்திரி - ரணில் அரசை ஒப்படைத்து செல்லாவிட்டால் கொழும்பு முற்றுகை

## விமல் வீரவன்ச முழங்குகின்றார்



கொழும்பு, ஓக. 3
மைத்திரி ரணில் இணைந்த தேசிய அரசின் ஆயுள்காலம் முடிந்தது. அரசை ஒப்படைத்துச் செல்லாவிடின் முழுக் கொழும்பு நகரையும், அலரி மாளிகை, ஜனாதிபதி மாளிகை என்பவற்றையும் முற்றுகையிடுவோம்.
இவ்வாறு எச்சரித்தார் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.
பொது எதிரணியின் பாதயாத்திரை முடிவில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ரணில் மைத்திரி ஜோடி சேர்ந்த தேசிய அரசின் ஆயுள்காலம் ஒரு வருடமும் 8 மாதங்களாகின்ற வேளையில் வீட்டிற்குச் செல்லுங்கள் என்ற செய்தியை வழங்குவதற்காகவே லிப்டன் சுற்று வட்டத்துக்கு நாம் வந்துள்ளோம். தேசிய அரசு பிக்குகளை சிறைக்குள் தள்ளியே தனது பயணத்தை ஆரம்பித்தது.
இந்த நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவேன் என்று சிறிசேன எப்போதும் நினைத்திருக்கவே இல்லை. விக்கிரமசிங்கவும் மேல் ஏறி கீழ் இறங்கிக் கொண்டிருந்தார். துரதிர்ஷ்டவசமாக சிறிசேன ஜனாதிபதியாகவும், விக்கிரமசிங்க பிரதமராகவும் தெரிவாகியதைத் தொடர்ந்து நினைத்தபடி நாட்டை நடத்திச் செல்லலாம் என்று யோசித்திருக்கிறார்கள். இவர்களுக்கு ஏற்றாற்போல் எதிர்க்கட்சி பிரதம கொறடாவும் இருக்கின்றார்.
கலப்பு நீதிமன்றம், நாட்டை பிளவுபடுத்தும் கொள்கை, புதிய அரசமைப்பு, இந்தியாவுடனான எட்கா உடன்படிக்கை, விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினை, இராணுவத்தினரை இலக்காகக் கொண்ட அரசியல் பழிவாங்கல் என்பவற்றுக்கு எதிராகவே ஒன்றுபட்டுள்ளோம். ராஜபக்ச [illegible] போதும் சிறைபிடிப்பார்கள். விஜேதாஸ ராஜபக்சவை மிகவும் கவனமாக இருக்கும்படி அறிவுறுத்த விரும்புகிறேன். ராஜபக்சக்களை சிறை தள்ளிய பின் யாராவது இருப்பார்களா என்று தேடும்போது நீங்களும் சிக்கிக்கொள்ள வாய்ப்பிருக்கிறது.
எட்கா உடன்படிக்கை செய்தாலோ, போர்க்குற்ற நீதி மன்றத்தை அமைத்தாலோ அல்லது ஐக்கிய இலங்கையை சவாலுக்கு உட்படுத்தினாலோ முழுக் கொழும்பு நகரையும் முற்றுகையிடுவோம். கொழும்பில் குடியேறி, அலரிமாளிகையிலிருந்து விக்கிரமசிங்கவினதும், ஜனாதிபதி மாளிகையிலிருந்து சிறிசேனவினதும் குடியேற்றத்தை நீக்குவோம். இதற்காக சிறை செல்வதற்கும் நாம் தயார் என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் , : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மகிந்த அரசு பயணித்த பாதையிலேயே நல்லாட்சி அரசும் தடம் பதிப்பு

**கொ**லைகாரர்களே தாம் செய்த கொலைகள் குறித்து விசாரிக்க முடியுமா? அவ்வாறு செய்வது நடைமுறை நீதிக்கு முற்றிலும் முரணானது.

ஆகையால், போரின்போது இழைக்கப்பட்ட, போர்க்குற்றங்கள் குறித்து அனைத்துலக விசாரணைப் பொறிமுறையே உருவாக்கப்பட வேண்டும்.

போர்க்குற்ற விசாரணை எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கரவெட்டியில் நடைபெற்ற அமர்வின் போது மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

நேற்று முன்தினம் நடந்த மக்கள் கருத்து அறியும் அமர்வில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும், ஓய்வு பெற்ற கிராம அலுவலருமான ஒருவரால் மேற்கண்ட கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

காலங்காலமாக, எமது நாட்டில் விசாரணை ஆணைக்குழுக்கள் நிறுவுவதென்பது மிகவும் சகஜமான தொன்று. காலத்தைக் கடத்தும் உத்தியாகவும், முயற்சியாகவும்--

அனைத்துலக நாடுகளை ஏய்க்காட்டும் முயற்சிகளாகவுமே அவை முடிவடைந்தன என்பது சரித்திரமாகி விட்டது!

இப்போதும்கூட, உலக அரங்கில் - ஐ.நா. மனித உரிமைகள் சபையில் -- தெரிவிக்கப்பட்டதற்கு மாறாகவே இலங்கை அரசு செயற்படும் போக்கு மிகத் தெட்டத்தெளிவாகத் தெரிகிறது.

போர்க்குற்ற விசாரணை குறித்து, அனைத்துலக நாடுகள் வழங்குவதற்கு முன்வந்த உதவிகளைச் சிக்கெனப் பற்றிக் கொள்வதே உகந்த நிலை.

அவ்வாறன்றி இலங்கை அரசு தனித்துச் செயற்படுவதற்கு ஆலாய்ப் பறக்கும் போக்கு கொச்சைத் தனமானது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

வழக்கு ஒன்றில் நீதிவழங்கப்படுவது மட்டுமன்றி அது செயல்முறையிலும் நடைமுறையாக்கப்பட வேண்டும். அந்த வழி நடக்க முந்திய அரசும் சரி, இப்போதைய 'நல்லாட்சி' அரசும் சரி, ஒரே வழித்தடத்திலேயே செயற்படு கின்றன.அது மறுக்கப்பட முடியாத ஒன்று என்று அடித்துச் சொல்லலாம்.

போர்க்குற்ற விசாரணை விடயத்தில் -- விவகாரத்தில் உலகநாடுகள் வழங்குவதற்கு முன்வந்த உதவிகளை சிக்கெனப் பற்றிக் கொண்டால் மட்டுமே நீதி கிடைக்கும். அது மட்டுமன்றி, இனிமேலாவது, குற்றங்கள் இடம்பெறாது தடுப்பதற்கு வகை செய்வதற்கு அது வழி வகுக்கும்.

மேலும்--

வடக்கு, கிழக்கில் நிலைகொண்டுள்ள இராணுவம் முற்றாக நீக்கப்பட வேண்டும். அவர்கள் மட்டுமன்றி அவர்களோடு இணைந்து செயற்படும் புலனாய்வாளர்களும் வெளியேற்றப்பட வேண்டும்.

அதன் மூலம் மட்டுமே அச்சமற்ற வாழ்க்கைக்கான பின்புலம் உருவாகும் என்றும், அர்த்த புஷ்டியான, உண்மையான சூழல் உருவாகும் என்றும் ஆணைக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

எனினும், அவை பாதிப்புற்ற மக்கள் கைகளுக்குக் கிடைக்குமா என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.



சண்டேரைம்ஸ் நிமல் சந்தரத்னவின் கட்டுரையில் இருந்து ரெங்கன்

**நா**ட்டின் பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பதன்மூலம் இன முரண்பாட்டை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்பதை அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இளைஞர்களுக்கு இடையேயான மோதல் சம்பவம் நினைவூட்டுவதாய் அமைந்திருந்தது. இவ்வாறான இன ரீதியிலான வன்செயல்கள் விரிவடையுமானால் எமது பொருளாதாரம் மேலும் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும்.

சுதந்திரம் கிடைத்ததிலிருந்தே நாட்டின் பொருளாதாரத்தை இன வன்செயல்கள் மிக மோசமாகப் பாதித்துவந்துள்ளன. 1958ஆம் ஆண்டுக்கலவரத்தை தொடர்ந்து, 1983 இனக்கலவரம் உட்பட பல இனக்கலவரங்களும் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்து வந்துள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மோதலை அரசும் எதிர்த்தரப்பில் த.தே.கூட்டமைப்பு, ஜே.வி.பி உட்பட சில கட்சிகளும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர எடுத்த முயற்சிகள் குறிப்பிடத்தக்கனவே. வதந்திகளும் திரிபுபடுத்தல்களும் ஏனைய பல்கலைக் கழகங்களுக்குப் பரவி நிலைமை மோசமடைவதை இது தவிர்க்க உதவியுள்ளது.

> யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இரு குழுக்களுக்கிடையிலான மோதலுக்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டு பிடித்தாகவேண்டும். நிரந்தரமான ஒரு தீர்வுக்கு இது தொடர்பாக ஆழமாக ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட வேண்டியது அவசியம். நாட்டின் இன முரண்பாட்டின் அடிப்படைக் காரணம் சிக்கல் மிக்கது. அதற்குத் தீர்வுகாண்பதென்பது மிகப்பெரிய சவாலாகும்.

### அடிப்படைக் காரணத்தைக் கண்டுபிடித்தாக வேண்டும்

இருந்தாலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இரு குழுக்களுக்கிடையிலான மோதலுக்கான அடிப்படைக் காரணத்தை கண்டுபிடித்தாக வேண்டும். நிரந்தரமான ஒரு தீர்வுக்கு இது தொடர்பாக ஆழமாக ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட வேண்டியது அவசியம்.

நாட்டின் இன முரண்பாட்டின் அடிப்படைக் காரணம் சிக்கல் மிக்கது. அதற்குத் தீர்வுகாண்பதென்பது மிகப்பெரிய சவாலாகும். முதலில் பல்கலைக் கழகங்களில் காணப்படும் நியாயபூர்வமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக பல்கலைக்கழகங்களுக்கான தொடர்பாடல்கள் ஒரு தனிமொழியில் மட்டுமே மேற்கொள்ளப்படுவதாகக் குறைபாடு உண்டு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்று மட்டுமல்ல ஏனைய பல்கலைக்கழகங்களிலும் சில சமூகங்களின் கலாசார நிகழ்வுகள் புறக்கணிக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அதேபோல் சில பல்கலைக்கழக பிரிவுகள் மற்றும் நிர்வாகங்கள் மாணவர்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தூண்டிவிடுவதாகவும் கூறப்படுகின்றது. இந்த நிலையில் பல்கலைக்கழகங்களில் பயிலும் மற்றும் கற்பிக்கும் சமூகங்களுக்கிடையில் நல்லுறவைப் பேணுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகிகள் என்னவிதமான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

முரண்பாட்டுக்கு முக்கிய காரணி, பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையில் நல்லுறவும் புரிந்துணர்வும் ஏற்படாமைக்கு முக்கிய காரணிகளில் ஒன்றாகக் கருதப்படுவது என்னவென்றால், பெரும்பாலான மாணவர்கள் ஒரு மொழியில் மட்டுமே புலமையுள்ளவர்களாய் இருப்பதாகும். கல்விப் போதனைகள் ஆங்கில மொழியில் இடம்பெற்றாலும், மாணவர்கள் அந்த மொழியில் உரையாடல்களில் ஈடுபடுவதில்லை. அவர்கள் அதற்குத்தமிழ் அல்லது சிங்கள மொழியையே பயன்படுத்துகிறார்கள். சமூக உறவைமேம்படுத்துவதற்கு பொது மொழியொன்று அவசியமாகத் தேவைப்படுகின்றது.

ஆங்கிலத்தைப் பொதுமொழியாகக் கொள்ளாதவரை நிலையான அல்லது நீண்டகாலத்தீர்வு எதையும் எட்டுவது சாத்தியமாகத் தென்படவில்லை. 50துகளிலும் 60 துகளிலும் மாணவர்களுக்கிடையில் சுமுக உறவு காணப்பட்டமைக்கு ஆங்கிலம் அவர்களுக்கிடையில் பொது மொழியாகக் காணப்பட்டமையே காரணம்.

நாட்டில் சமூகங்களுக்கிடையில் நல்லுறவு மீண்டும் பாதிக்கப்படுமானால், இப்போது சீர்குலைந்துள்ள வெளிநாட்டு வருமானம் மேலும் மோசமடையக் கூடும். உல்லாசப் பயணத்துறைமூலம் இந்த வருடம் 2 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அது 15 வீதத்தால் வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் துறை பல மடங்கு பாதிக்கப்பட்டுவிடக் கூடிய அபாயம் காணப்படுகின்றது. வெளிநாடுகளில், குறிப்பாக சர்வதேச சந்தையில் மேற்கொண்டும் கடன்களைப் பெறக் கூடிய தகுதிகளையும் அரசு இழந்துவிடக்கூடும். ஏற்கனவே வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்தும் தகுதியையும் அரசு இழந்துவிட நேரும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழமாகச் சிந்தித்து சரியான திசையில் நாடு நகர்த்தப்பட வேண்டும்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் மோதல் எடுத்தியம்பும் பாடம் இது



**அறிவாளிகளின் வெளியேற்றத்துக்கு காரணம்**

இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர், உள்நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்களின் காரணமாக அது பெரும் பொருளாதாரப் பின்னடைவுகளைச் சந்தித்து வந்துள்ளது. 1958 இல் ஏற்பட்ட இனக்கலவரமானது, நாட்டின் வளர்ச்சியில் முதல் முறையாக பின்னடைவுக்குக் காரணமாயிற்று. மக்கள் பாதிப்பு, காரணங்கள் மட்டுமல்ல ஏராளமானவர்கள் நாட்டைவிட்டே வெளியேறினார்கள். அறிவாளிகளின் வெளிநாட்டுப் பயணமும் அந்த காலகட்டத்திலேயே ஆரம்பமானது. பின்னர் ஏற்பட்ட இனக்கலவரங்கள் மேலும் பலமடங்கு வெளிநாட்டுப் பயணங்களுக்குக் காரணமாயிற்று. தொழில்சார் நிபுணர்கள், விஞ்ஞானிகள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் பல்துறை தகைமையாளர்கள் எல்லாம் நாட்டைவிட்டு வெளியேறியமையானது நாட்டின் பொருளாதார உறுதிப்பாட்டை மிக மோசமாக பலவீனமடையச் செய்துவிட்டது.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னரான பொருளாதாரப் பாதிப்பானது இனக்கலவரங்கள் மற்றும் வடக்கு-கிழக்கில் நீடித்திருந்த போர் நிலைமைகளின் காரணமாக எழுந்ததாகும். இவைகளால் பெரும் தொகைப் பணம் இழக்கப்பட்டதுடன், பொது மக்கள் நிதிகளின் மீது பெரிய பளுவை ஏற்படுத்திவிட்டன. மேலும், முதலீட்டுத்துறையில் சாதகமற்ற சூழ்நிலைகள் ஏற்பட்டன. உல்லாசப் பயணம் தொடர்பு சாதனத்துறையும் பெரும் பாதிப்புக்குள்ளாகின. பொருளாதாரத்துறையில் 1982-1983 ஆண்டுகளில் முழுஅளவில் முன்னேறியிருக்க வேண்டிய நாடு, பின்னோக்கித் தள்ளப்பட்டது. நாட்டில் முதலீடுகளில் ஈடுபட விரும்பிய பெரிய வெளிநாட்டு நிறுவனங்கள் பலவும் அரசியல் ஸ்திரத்துடன் விளங்கிய மலேசியா, சிங்கப்பூர் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளை நாடிச் சென்றுவிட்டன. 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரமும் போரினால் ஏற்பட்ட பாதுகாப்பின்மையும் வெளிநாட்டு மூலதன முதலீடுகளைப் பெரிய அளவில் பாதித்திருந்தன.

இனமுரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்காது போனால், நிரந்தரத்தீர்வு காணாமற் போனால், அறிஞர்கள், நிபுணர்களின் வெளியேற்றம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். நாட்டில் அரசியல் ஸ்திரம் இல்லாமை வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கமாட்டாது. கல்வி மற்றும் திறமைகள் வளர்க்கப்படுவது தடைப்படும். பொருளாதாரம் தொடர்ந்தும் மந்த நிலையிலேயே காணப்படும்.

> முரண்பாட்டுக்கு முக்கிய காரணி, பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையில் நல்லுறவும் புரிந்துணர்வும் ஏற்படாமைக்கு முக்கிய காரணிகளில் ஒன்றாகக் கருதப்படுவது என்னவென்றால், பெரும்பாலான மாணவர்கள் ஒரு மொழியில் மட்டுமே புலமையுள்ளவர்களாய் இருப்பதாகும்.

**சரியான திசையில் நகர வேண்டும்**

இந்த நாட்டில் வாழும் சகல மக்களும், தாம் இந்த நாட்டுக்குரியவர்கள், சம உரிமைகள், சந்தர்ப்ப வாய்ப்புகளுக்கு உரியவர்கள் என்று உணரக்கூடிய சூழல் இருக்கவேண்டும். உறுதியான தேசிய உணர்வுகளை மற்றும் நிலையான நல்லிணக்கத்தை உருவாக்குவதென்பது ஒரு குறுகிய காலத்தில் அடையக்கூடிய சாதனையன்று. சரியான திசையில் விடயங்கள் நகர்த்தப்பட வேண்டும் என்பதே இன்றைய அவசிய தேவை.

தேசிய நல்லிணக்கத்தை அடைவதில் உள்ள சிக்கல்களைக் களைவது குறித்து ஆழமாகச் சிந்தித்து காரிய மாற்ற வேண்டும் என்பதையே அண்மைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மோதல் சுட்டி நிற்கின்றது.

ஒன்றுபட்ட தேசத்தின் பொருளாதார வளர்ச்சியின் சாதனைகள், இனப்பிரச்சினை துரிதமாக தீர்க்கப்பட்டு முழுமை பெறுவதிலேயே பெரிதும் தங்கியிருக்கின்றன.

## திட்டமிட்ட கலாசார மாற்ற முயற்சி குறித்து அவதானம் அவசியம்

ஒட்டுசுட்டான், கற்சிலைமடு சிவன் ஆலய சூழலில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பௌத்தர்கள் வாழ்ந்ததாக நிறுவும் முயற்சியின் ஓர் அங்கமாக அந்தப் பகுதியில் இராணுவத்தினரால் அறிவித்தல் பலகை நடப்பட்டுள்ளதாக பத்திரிகையில் வெளிவந்த செய்தியை வாசித்தபோது அழுவதா சிரிப்பதா என்று ஒரு கணம் தவிப்புக்கு உள்ளானேன். இலங்கையின் வட புலம், குறிப்பாக யாழ் குடாநாடு முன்னைய காலத்தில் விசேட அடையாளமான பனைவளத்தை முன்னிலைப்படுத்தி, கற்பகதருவாம் பனை மரத்தின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் அடையாளப்படுத்தப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டதுண்டு.

என்றைக்கு இந்திய அமைதிக்காக்கும் படை, இலங்கை இராணுவம் என்பவை பாதுகாப்பு என்ற போர்வையில் வட பகுதியில் ஆங்காங்கே நிரந்தரமாகக் கால் பதித்தனவோ அன்று ஆரம்பித்தது பனை வளத்தின், அழிவு. அது திட்டமிட்ட அழிப்பு என்று கூடக் கருதும் அளவுக்கு தீவிரம் பெற்றிருந்தது. இன்று அந்தப் பெருமைக்குரிய பனை வளம் பெருமளவில் அழிக்கப்பட்டு ஏதோ பெயருக்கு பனைவளம் கொண்ட வட புலம் என்ற பெயரைத் தாங்கி நிற்கிறது.

அதே சமயம் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக பெருமை பேசி திட்டமிட்ட வகையில் வடபுலத்தில் ஆங்காங்கே புத்தர் சிலைகளை நிறுவுவதுடன் பௌத்த வணக்கஸ்தலங்களையும் புதிது புதிதாக அமைக்கும் கைங்கரியம் முன்னெடுக்கப்படுவதன் நோக்கமென்ன? தமிழ் மக்கள் புத்தரின் போதனைகளுக்கு மதிப்பளிக்கும் அதே வேளை, பௌத்தர்கள் போன்று புத்தரை வழிபட முன்வருவர் என இந்தப் பௌத்த கடுங்கோட்பாட்டாளர்கள் நம்புகிறார்களா? இராணுவத்தினரை வட பகுதியில் நிலைநிறுத்தி வைத்திருப்பதன் மூலம் அவர்களாலும்,அவர்களது பாதுகாப்புடன் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டுள்ள சிங்கள மக்களாலும் இந்தப் பௌத்த வழிபாட்டை வடபகுதியில் மேல் நிலைப்படுத்த இயலுமென நம்புகிறார்களா? நிலைமை இப்படியே போனால் காலப்போக்கில் வட பகுதியின் விசேட குறியீட்டுச் சின்னமான பனையின் மாண்பு மறக்கடிக்கப்பட்டு மூலை முடுக்குகளிலெல்லாம் திடீர்திடீரென தலையெடுக்கும் புத்தர்சிலையே வடபகுதியின் குறியீட்டுச் சின்னமாக்கப்பட்டு விடுமோ என்ற அச்ச உணர்வு மனதில் இழை யோடுகிறது.

இந்த விடயத்தில் எமது வட பகுதி மக்களும், எமது அரசியல் தலைவர்களும் எச்சரிக்கை உணர்வோடு செயற்பட வேண்டியவேளை இதுவெனக் கருத வேண்டியுள்ளது.

**வன்னியூர் மைந்தன்**

## வடமாகாணசபையால் பயன் என்ன?

ஐயா, 1987ஆம் ஆண்டு குள்ளநரி ஜே.ஆர், அரசியல் கற்றுக்குட்டி ராஜீவ் காந்தி ஆகிய இருவராலும் தமிழர்களை ஏமாற்றுவதற்கெனக் கொண்டுவரப்பட்டதே, திணிக்கப்பட்டதே இந்த மாயமான் மாகாணசபை. அன்றே இதை ஏற்றுக்கொள்ள மறுத்தார் தமிழர் தலைவர் பிரபாகரன். தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.அமைப்பின் அண்ணாமலை வரதராஜப் பெருமாளும் இதற்குக் கைத்தாளம் போட்டார்கள். வரதராஜப்பெருமாளின் பதவி ஆசைக்கும் இது பயன்பட்டது. காலப்போக்கில் இது செல்லாக்காசாகிவிட்டது. 2014ஆம் ஆண்டுவரை குப்பை மேட்டில் கிடந்தது, தூசு தட்டி மீளவும் மேடைக்குக் கொண்டுவரப்பட்டது. இதற்கு சம்பந்தன் ஐயா, முதலமைச்சர் உட்பட பலரைக்கொண்டு வந்து சேர்த்தார். படித்த பெரிய மனிதர்களால் இதுவரை சாதிக்கப்பட்டது என்ன? இப்பொழுது 200 கோடி ரூபா பெறுமதியான பொருளாதார மத்திய நிலையத்துக்கான கயிறிழுப்புப் போட்டி நடந்து வருகிறது. இதில் விலாங்கு மீனாக நீதிபதியவர்கள் வித்தை காட்டி வருகிறார். நீதிபதிகளைப் பொறுத்தவரையில் காலம் தாழ்த்துவதும், தவணை போடுவதும் மிகவும் சாதாரண விடயம். பள்ளிக்கூடம் செல்லாதவர்களை தெரிவு செய்திருந்தால் கூட, இந்தக் கயிறி முப்புப் போட்டி நடத்திருக்காது.

இந்த விடயத்தில் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா மதில்மேல் பூனையாக இருப்பதுதான் வேதனை தருவதும் வேடிக்கைக்கு உரியதுமாகும். சம்பந்தன் ஐயாவும் அமிர்தலிங்கத்தின் வழியில் தான் பயணம் செய்கின்றாரா என்பதும் ஒரு கேள்வியாகும். மேடைக்கு மேடை, காண்போம் தமிழ்நாடு என்று கோசமிட்டவர்கள், பின்னாளில் இந்தியாவின் கைப்பாவைகளாக செயற்பட்டதை புத்திபூர்வமாக சிந்திப்பவர்கள் எவரும் மறக்கமாட்டார்கள். மொத்தத்தில் தமிழ் மக்களை அன்றும் இன்றும் வெறும் புள்ளடிபோடும் இயந்திரங்களாகவே இவர்கள் கருதுகின்றார்கள். காலம் இப்படியே போனால் தமிழ் மக்களுக்கு விடிவு எப்போது.

**யோ.நித்திலன், கிளிநொச்சி.**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் சிறுபான்மையினர் கொலை

## சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை

அபுஜா, ஓக. 3
நைஜீரியாவில் இடம்பெற்ற கலவரத்தில், ஷியாப் சிறுபான்மையினர் 348 பேர் அந்த நாட்டு இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர் என , நீதித்துறை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற கலவரத்தின் போதே இது நிகழ்ந்துள்ளது. இதனை அடுத்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விசாரணைகள் நடத்தப்பட்டன. இதில்நூற்றுக்கணக்கான ஷியாப் பிரிவு சிறுபான்மையினர் கொல்லப்பட்டமை தெரியவந்தது.
இது முன்னாள் இராணுவக் கட்டுப்பாட்டாளராயிருந்து தற்போது ஜனாதிபதியாகியுள்ள முகமது புகாரியின் அதிகாரத்தின் கீழ் இடம்பெற்ற மனித உரிமை மீறல் செயற்பாடாகும். இவை தொடர்பான அறிக்கை கடந்த ஞாயிற்றுக்கிழமை சர்வதேச மன்னிப்புச்சபையினால் கையளிக்கப்பட்டது இதில் 3 நாள்களாக இடம்பெற்ற கலவரத்தில், இராணுவத்தினர் வெடிபொருள்களைப் பயன்படுத்தியுள்ளதுடன் வன்முறைச் சம்பவங்களிலும் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் இனம் காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவற்றை நைஜீரிய இராணுவம் மறுத்து வருகின்றது.
இது தொடர்பில் இராணுவத்தினர் தெரிவிக்கையில், கலவரத்தின்போது கட்டுப்படுத்தச் சென்ற இராணுவத்தினரை, ஷியாப் பிரிவினர் தடுத்து நிறுத்தினர். இதனால் இழப்புக்கள் ஏற்பட்டன. சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக மிகுந்த எச்சரிக்கையாகவுள்ளோம் என்றனர். 348 பொதுமக்கள் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டனர். 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் அத்துடன் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு, 3 ஆயிரத்து 578 குறிப்புகள், 132 கடிதங்கள், 3 ஆயிரத்து 446 மின்னஞ்சல்கள், 39 சம்பவக் காட்சிகள், 87 சாட்சியங்களை அனுப்பி வைத்துள்ளதாக 193 பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
180 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட நைஜீரியாவில் பெரும்பான்மையாக உள்ளவர்கள் சன்னி இனத்தவர்களாவர். 2009 ஆம் ஆண்டில் இருந்து ஷியாப் இன சிறுபான்மையினர் மீது போகோஹறம் அமைப்பினர் தாக்குதல் நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி4)





## ஹிலாரியை பிசாசு என விமர்சித்த ட்ரம்

வொஷிங்டன், ஓக. 3
அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளரான டொனால்ட் ட்ரம், சக வேட்பாளரான ஹிலாரி கிளின்டனை பிசாசு எனத் தெரிவித்துள்ளார். அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் தில்லு முல்லுகள் இடம்பெற வாய்ப்பிருப்பதாகத் தாம் அஞ்சுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். நேற்று முன்தினம் ஒகியோ மாகாணத்தில் இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். நான் தேர்தலில் நேர்மையாக இருக்க விரும்புகிறேன் என்ற ட்ரம், இதற்குமுன் ஜனநாயகக் கட்சி சார்பில் வேட்பாளர் போட்டியில் களமிறங்கிப் பின்வாங்கிய பேர்ன் சன்டர் சைத் தாக்கிப் பேசினார். அவர் ஹிலாரியுடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டுபோட்டியில் இருந்து விலகினார். பேர்ன் தன்னை நம்பி வாக்களித்த மக்களை ஏமாற்றி விட்டு பிசாசுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.
அத்துடன் தேர்தல் ஒழுங்கு முறைமையை தில்லு முல்லானவை எனப் பரப்புரைகளின் போது பல பகுதிகளிலும் கூறியுள்ளார். கடந்த தேர்தலின் போது குடியரசுக் கட்சியின் சார்பில் எந்த வாக்குகளும் பதியப்பட்டதாஆவணங்களில்இல்லை. எனவே இது தவறானது. எதிர் வரும் நவம்பர் 8 ஆம் திகதி எச்சரிக்கையுடன் இருங்கள். தேர்தலில் தில்லுமுல்லுகள் இடம்பெறலாம். இதில் குடியரசுக்கட்சியினர் மிக அவதானமாகவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (ரி4)

## சிரியாவில் தாக்குதல் 30 பேர் சாவு

டமஸ்கஸ், ஓக. 3
சிரியாவில் இடம்பெற்ற தாக்குதலில் 30 பேர் உயிரிழந்தனர். சிரிய நகரமான அலெப்போவில் போராளிகள் நடத்திய இந்தத் தாக்குதலில், சிறுவர்கள், 18 பெண்கள் உட்பட, 30 பேர் உயிரிழந்தனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை அரசு தீவிரவாதிகளுக்கு எதிராகத் தாக்குதல்களை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்தது. இதன் பின்னர், இரண்டு இரவுகளாக இடம்பெற்ற தாக்குதலில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர். கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்து சிரியாவில் போராளிக்குழுக்களுக்கும், அரசு படையினருக்கும் இடையில் போர் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி4)



சிரியாவில் ரஷ்ய உலங்குவானூர்தி ஒன்று தீவிரவாதிகளால், இட்லிப் மாகாணத்தில் நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் பயணம் செய்த 5 பேரும் உயிரிழந்தனர். சிரியாவில் ரஷ்யா தாக்குதல் நடத்த ஆரம்பித்த பின்னர், ரஷ்யாவுக்கு எதிராக இடம்பெற்ற பெரிய அளவிலான தாக்குதல் இது என அதிகாரிகள் தெரிவித்தனர். (ரி4)

## ஹொங்கொங்கை தாக்கிய நிடா சூறாவளி



விக்ரோறியா சிட்டி, ஓக. 3
ஹொங்கொங்நாட்டில் நேற்றுக் கடும் சூறாவளி வீசியது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. நிடா எனப் பெயர் கொண்ட இந்தச் சூறாவளி மணிக்கு 145 கிலோமீற்றர் வேகத்தில் வீசியது. 180 க்கும் அதிகமான விமான சேவைகள் உட்பட பஸ் சேவைகள், வாகன சேவைகள் போன்றன தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.
இதனால் நகரின் அன்றாட செயற்பாடுகள் ஓய்ந்தன. இந்தச் சூறாவளி ஏற்படப் போவதாக நைஜீரிய அரசு முற்கூட்டியே அறிவித்துவிட்டதால், நாட்டு மக்கள் மூன்று நாள்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், ஏனைய பொருள்களைக் கொள்வனவு செய்து பாதுகாப்பான இடங்களில் இருந்தனர். அத்துடன் கடல் அலைகள் 11 மீற்றர் அளவு உயரத்துக்கு எழும்பும் என எச்சரித்து வெள்ள எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. இதனால் அந்தப் பகுதி மக்களும் பாதுகாப்பான இடங்களில் இருந்தனர். ஆகையால் பெரிய அளவில் சேதங்கள் இடம்பெறவில்லை.
அத்துடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடும் காற்று வீசியதாக அந்த நாட்டு வானிலை மைய ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். இந்த நிலையில் புயல் ஹொங்கொங்கில் இருந்து சீனாவுக்கு நகர்ந்துள்ளது. (ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடலில் மிதந்த விசித்திர உருவம்

சிட்னி, ஓக.3
ஆஸ்திரேலியாவில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் கடலில் மிதந்து கொண்டிருந்த விநோதமான பிராணி ஒன்றை ஒளிப்படம் எடுத்துள்ளார். பார்வைக்கு மிகவும் விசித்திரமான உருவ அமைப்பில் வெண்மையான நிறத்தில் அது காட்சியளிக்கின்றது. அதன் உடல் காற்று நிரம்பியிருந்ததால் மிதந்தபடி காணப்படுகின்றது.

இது குறித்து அந்த மீனவர் கூறுகையில், 11 - 13 அடி நீளமுடையதாகக் காணப்பட்ட அதனைப் படகு அல்லது பலூனாக இருக்கும் என்று கருதியே அண்மித்தேன். அருகில் சென்று பார்த்த போது, அது இறந்த வெண் திமிங்கிலம் என்பது உறுதியானது. எனது 21 வருட கடற் பயணத்தில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றது இதுவே முதல் முறை என்றார். (ரி4)

# கழிவு உணவுகளை உரமாக மாற்றும் பெண்



பிறேசிலியா, ஓக.3
பிரேசிலில் பெர்னாண்டா டெனிலான் என்ற பத்திரிகையாளர் குப்பைகளில் கொட்டப்படும் உணவுப்பொருள்களைச் சேகரித்து உரமாக்கித் தனதும், அயலவர்களினதும் வீட்டுத் தோட்டங்களுக்குப் பயன்படுத்தி வருகிறார். பிரேசிலின் மிகப் பெரிய நகரமான சாவோ பாலோவில் பெரும்பாலான உணவுகள் வீணடிக்கப்படுகின்றன. இதனைச் சரிசெய்யும் முயற்சியில் முன்னர் பத்திரிகையாளராகப் பணியாற்றிய பெர்னாண்டா டெனிலான் என்ற பெண் களமிறங்கியுள்ளார். இதற்காக அங்கேயுள்ள உணவகங்களுக்குச் சென்று வீணாகும் உணவுப் பொருள்களைச் சேகரிப்பதுடன் அவற்றை உரமாக மாற்றுகிறார். சில விடுதிகளின் வளாகங்களில் தோட்டம் அமைத்து அவற்றைப் பயன்படுத்தவும் உதவுகிறார்.
அதுமட்டுமன்றி வீட்டுத்தோட்டங்களில் ஈடுபடும் வீடுகளுக்கும் கொடுக்கிறார். தற்போது மாதத்திற்கு 30 முதல் 40 தொன் குப்பைகளை இவரது குழுவினர் உரமாக்கிக் கொடுக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி4)

# ரஷ்ய ஜனாதிபதியே எமது அடுத்த இலக்கு

## ஐ.எஸ். அறிவிப்பு

மொஸ்கோ, ஓக.3
ரஷ்ய அதிபர் புடின் எமது அடுத்த இலக்கு என ஐ.எஸ். அமைப்பினர் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளனர். இந்தக் காணொலியில், சிரியாவில் ஐ.எஸ்ஸிற்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து ரஷ்யா போரிடுவதற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்குக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. 5 பேர் உட்காந்திருப்பதும், அவர்களில் ஒருவன் கத்தியை காட்டிபுடினுக்கு எச்சரிக்கை விடுக்கும் தொனியில் மிரட்டுவதும் "நாங்கள் ரஷ்யா வருவோம். வீட்டிற்கே வந்து உங்களைக் கொலை செய்வோம்" என 9 நிமிடங்கள் கொண்டமைந்த காணொலி வெளிவந்துள்ளது. இதற்கு ஐ.எஸ். அமைப்பு பகிரங்கமாகப் பொறுப்பு ஏற்கவில்லையாயினும் அவர்கள் பயன்படுத்தும் வலைத் தளத்தில் இது வெளியாகி இருக்கிறது.



சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் வசம் இருக்கும் அலப்போ நகரை மீட்க அந்தநாட்டு ராணுவத்துக்கு ரஷ்யா உதவி செய்து வருகிறது. தீவிரவாதிகளின் இலக்கைக் குறிவைத்து ரஷ்ய போர் விமானங்கள் மற்றும் உலங்குவான் ஊர்திகள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தி வருவதால் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதனால் ரஷ்யா மீதும் அதிபர் புடின் மீதும் கடும் ஆத்திரத்தில் உள்ளனர். இந்த நிலையிலேயே இந்தக் காணொலியும் வெளியாகியுள்ளது. (ரி4)

# காதல் ஜோடிக்கு கசையடி

ஜகார்த்தா, ஓக.3
திருமணத்திற்கு முன்னர் வெளியில் சுற்றித்திரிந்த திருமணமாகப் போகின்ற ஜோடிகளுக்கு பொதுமக்கள் முன்னிலையில் கசையடி கொடுக்கப்பட்டது. இந்தோனேஷியாவில் உள்ள ஏக் மாகாணம், தொன்றுதொட்டு இஸ்லாமிய முறைகளைப் பின்பற்றி வரும் மாகாணம் ஆகும்.



இந்த மாகாணத்தில் ஓரினச்சேர்க்கை உறவு, திருமணத்துக்கு முன்னர் உறவு கொள்வது, காதலர்களாக வெளியில் சுற்றுவது என்பன மிகவும் தவறானவை. அத்துடன் அந்த நாட்டின் இஸ்லாமியச் சட்டமும் ஏற்றுக் கொள்ளாத ஒன்று இந்த நிலையில், குறித்த மாகாணத்தைச் சேர்ந்த ஜோடிகள் திருமணம் செய்து கொள்வதற்கு முன்னர் சேர்ந்து சுற்றித் திரிந்துள்ளனர்.
இதனால் அல் பர்கான் மசூதி முன்னிலையில் வைத்து இவர்களுக்குக் கசையடி கொடுக்கப்பட்டது. முதலில் காதலனுடன் சுற்றித்திரிந்த பெண்ணை இரண்டு பெண்கள் சேர்ந்து அழைத்து வந்து மசூதியின் முன்னிலையில் உள்ள மேடையில் மண்டியிடவைத்தனர். அதன்பின்னர், நபர் ஒருவர் வந்து தான் வைத்திருக்கும் பிரம்பால், அந்தப்பெண்ணுக்குக் கசையடி கொடுக்கிறார். இதே போன்று அவளது காதலனையும் வேறொரு இடத்தில் கட்டி வைத்து அடித்தனர். (ரி4)

# இணைய நண்பிக்காக 10 நாள்கள் விமான நிலையத்தில் காத்திருந்தார்

பீஜிங், ஓக.3
சமூக வலைத்தளம் ஒன்றில் அறிமுகமாகிய நண்பிக்காக 10 நாட்கள் சீன விமானநிலையத்தில் ஒருவர் காத்திருந்தமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. டச்சு நாட்டைச் சேர்ந்த 41 வயதான, அலக்சாண்டர் பீற்றர் கீர்க் என்பவர், சீனாவின் குனான் மாகாணத்தைச் சேர்ந்த சாங் என்ற 26 வயதான பெண்ணை விரும்பியுள்ளார். இதனை அடுத்து அவரைச் சந்திப்பதற்காகச் சீனாவுக்கு வருகை தந்த அலெக்சாண்டர், சாங் இன் வருகையை எதிர்பார்த்து சீன விமான நிலையத்தில் 10 நாள்களாகக் காத்திருந்தார். 2 மாதங்களுக்க முன்னர் சாங், அலெக்சாண்டருடன் அறிமுகமாகினார். இதனை அடுத்து இருவரும் கதைத்துப் பேசினர். இதன் பின்னர் சாங்கைச் சந்திக்கத் திட்டமிட்ட அலெக்சாண்டர் சீனாவுக்கு வருகை தந்தபோது, அவரைச் சந்திக்க சாங் வரவில்லை. அதனால் சீனர்களின் அனுதாபத்தைப் பெற்றுள்ளார். இதனை அடுத்து சீன ஊடகங்கள் அவரை அணுகின. அதன்போது அவர் இன்னும் 10 நாள்கள் காத்திருக்கப்போவதாக ஊடகங்களுக்குத் தெரிவித்தார். அவரது உடல் நிலை மோசமாகியுள்ளதால் தேறுவதற்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இந்தநிலையில், அவருடன் பழகிய சாங் என்ற பெண்ணை ஊடகங்கள் அணுகின, இதற்கு அவர் "விளையாட்டாகத் தான் பழகினேன். அவரைக் காதலிப்பது எனது எண்ணம் அல்ல. விமானக்கடவுச் சீட்டின் ஒளிப்படத்தை எனக்கு அனுப்பினார். ஆனால் அதன் பின்னர் என்னுடன் அவர் தொடர்பு கொள்ளவில்லை" எனத் தெரிவித்தார். இந்தச்சம்பவம் இளைஞர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வன்னி மண்ணின் கலைகள் பாதுகாக்கப்படல் வேண்டும்

செவ்வி கண்டவர்: தனம்

அண்ணாவியார் தன்னைப்பற்றிய அறிமுகத்தின்போது, முல்லை மாவட்டம் கற்சிலைமடு கிராமத்தில் அமரர் இராமர் கார்த்திகேசு என்பவருடைய மூத்தமகனாவேன். நான் 1958 ஆண்டு பிறந்து கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி பயின்றேன்.

எனது அப்பா கார்த்திகேசு ஒரு கலா இரசிகர், நல்ல குரல்வளம் கொண்டவர். மிகவும் இனிமையாகப்பாடுவார். அதனால் அவர் பாடசாலைப்படிப்பை இடையிலே நிறுத்திவிட்டு காத்தவராயன் கூத்து, கோவலன் கூத்து என்பவற்றில் பங்குபற்றி நல்லதொரு கலைஞனாக விளங்கினார். மேலும் அருவிவெட்டுப்பாட்டு, கும்மிப்பாட்டு, ஒப்பாரிப்பாட்டு போன்றவற்றில் பங்குபற்றி அரிவிவெட்டு, கோலாட்டம், கும்மி என்பனவற்றைப் பாடி வருவார். இவருக்கு இந்நிகழ்வுகளில் பங்குபற்றுவதோடு நில்லாது தான் ஓர் அண்ணாவியாராக வரவேண்டும் என்ற நோக்கோடு முதிய அண்ணாவியரோடு இணைந்து செயற்பட்டார். அவரது எண்ணம் நிறைவேறியது. ஆரம்பத்தில் இளம் கலைஞர்களைக் கொண்டு காத்தவராயன் கூத்தை அரங்கேற்றி அதில் பலரினதும் பாராட்டைப் பெற்றார். தொடர்ந்தும் இதனைப் பல மேடைகள் ஏற்றியதுடன் நில்லாது கோவலன் கூத்தையும் பயிற்றுவித்து அதனையும் மேடையேற்றினார். அத்தோடு சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா, அல்லி அருச்சுணா, நந்தனார் போன்ற பல நாடகங்களையும் இங்கு தான் பழக்க வேண்டும் என்ற நோக்கோடு அவை பற்றிய ஆவணங்களை தேடுவதிலும் ஆர்வம் கொண்டார். நித்தமும் கூத்துப் பாட்டுக்களையே முணுமுணுத்தபடி இருப்பார். அப்போது எனக்கு 10 வயது. எனக்கும் படிப்பில் ஆர்வம் ஏற்படவில்லை. நானும் ஒரு கலைஞனாகவும் ஓர் அண்ணாவியராகவும் வரவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

இதனால் அப்பாவை வற்புறுத்தியபோதும் என்னை இணைக்கவில்லை. நான் விடாப்பிடியாக இருந்தமையினால் கூத்துக்களில் சிறுசிறு பாத்திரங்களில் நடிக்க வைத்தார். எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. தரப்படுகின்ற பாத்திரத்தை மிகவும் திறமையாக நடித்து பாராட்டுக்களைப் பெற்றேன். முதன்முதலாக என்னை பால காத்தான் பாத்திரத்திற்கு நடிக்க வைத்தார். மிகவும் திறமையாக அப்பாத்திரத்தை நடித்து அமோக ஆதரவு கிடைத்ததுடன், காசு மாலைகளைக் கூடப் பெற்று மகிழ்ந்தேன்.

இந்த நிலையில் எனது அப்பாவும் அம்மாவும் அகால மரணமடைந்தனர். என்னுடன் மூன்று சகோதரர்களும் இரு சகோதரிகளும் இருக்கும் நிலையில் குடும்பச் சுமையை சுமக்க வேண்டிய நிலையில் எமது அப்பம்மாவின் ஆதரவில் வளர்ந்து வந்தோம். ஆனால் கலை ஆர்வம் நின்றுவிடவில்லை. அப்போது எனக்கு 15 வயதாகிவிட்டது. அயலில் உள்ள அண்ணாவியாரான ஆ.இரத்தினம் என்பவருடன் நடிப்புத்திறன்களையும் பயிற்றுவிக்கும் விதத்தையும் சிலமாதங்களில் பெற்றுக் கொண்டேன். இன்று அண்ணாவியாராக கூத்துக்களை பயிற்றி, பல மேடைகளில் ஏற்றியுள்ளேன். இன்று முல்லை மாவட்டத்தில் நான் ஒரு சிறந்த அண்ணாவியாராக விளங்குவதுடன் மட்டுமல்லாது பல பாராட்டுக்களையும், பரிசில்களையும், சான்றிதழ் களையும் பெற்றுள்ளேன்.

**கேள்வி:** நீங்கள் எப்போது அண்ணாவியாராக மிளிர்ந்தீர்கள்?

**பதில் :** எனக்கு 30 வயதில் 'மாலைக்கு வாதா டிய

> அயலில் உள்ள அண்ணாவியாரான ஆ.இரத்தினம் என்பவருடன் நடிப்புத் திறன்களையும் பயிற்றுவிக்கும் விதத்தையும் சில மாதங்களில் பெற்றுக் கொண்டேன். இன்று அண்ணாவியாராக கூத்துக்களை பயிற்றி, பல மேடைகளில் ஏற்றியுள்ளேன். இன்று முல்லை மாவட்டத்தில் நான் ஒரு சிறந்த அண்ணாவியாராக விளங்குவதுடன் மட்டுமல்லாது பல பாராட்டுக்களையும், பரிசில்களையும், சான்றிதழ் களையும் பெற்றுள்ளேன்.

மைந்தன்' என்ற கூத்தை கற்சிலைமடுவிலே அரங்கேற்றி பலருடைய பாராட்டுக்களைப் பெற்றதுடன் விருதையும் பெற்றேன். அதுமட்டுமல்லாது அரிவிவெட்டும்போது அரிவி வெட்டுப்பாட்டு, கோலாட்டம் இடம்பெறும்போது கோலாட்டுப் பாட்டு, கும்மிப்பாட்டு முதல் பள்ளுப்பாட்டு என்பவற்றையும் பாடி சிறந்து விளங்கினேன்.

**கேள்வி:** முழுநேரமும் இந்தத் தொழிலையே மேற்கொண்டு வருகிறீர்களா?

**பதில்:** இல்லை. நான் கமச் செய்கையிலும் ஈடுபட்டு வருகிறேன். ஆனால் எமது பாரம்பரிய கலைகள் எமது மூதாதையரோடு மறைந்துவிடாது அவைகளை மேன்மேலும் மெருகூட்டி இளம்கலைஞர்களைக் கொண்டு நடத்தி வரவேண்டும் என்பதே நோக்கம்.

**கேள்வி :** உங்களது பிள்ளைகள் இதில் ஆர்வம் கொள்ளவில்லையா?

**பதில்:** எனது மூத்தமகனையும் இணைத்துள்ளேன். அவரும் என்னைப் போன்று மிகவும் திறமைசாலி. பல பாத்திரங்களில் நடித்துள்ளார்.

உங்களது நடிப்புத்துறை மூலம் மிகவும் பிடித்த கூத்து எது? எத்தனை மேடையேற்றியுள்ளீர்கள்?

**பதில்:** என்னைப் பொறுத்தவரை எல்லாக் கூத் துக்களும் எனக்கு பிடித்தவைதான். அதிலும் குறிப்பாக காத்தவராயன் என்னும் கூத்தை மாலைக்கு வாதாடிய மைந்தன் எனப் பெயரிட்டு நடித்து 100 மேடைகளுக்கு மேல் ஏற்றியுள்ளேன்.

போட்டி நாடகங்களில் அல்லது கூத்துக்களில் பங்கு பெறுவதில்லையா?

**பதில் :** முள்ளியவளை மற்றும் புதுக்குடியிருப்புப் பகுதிகளில் நாம் போட்டி நாடகங்களில் பங்குபற்றி 1ஆம் 2ஆம் இடங்களைப் பெற்றுள்ளோம். இதனால் நாம் மேலும் மேலும் பாராட்டுக்களை பெற்று முல்லை மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளோம். அதுமட்டுமல்ல 2006 ஆம் ஆண்டு கலாபூசணம் விருதையும் பெற்றுள்ளேன். அத்துடன் எனக்கு கலை, கலாசாரத் திணைக்களத்தினால் ஓய்வூதியமாக ரூபா 5000 வழங்கப்படுகிறது.

**கேள்வி :** தற்போது உங்களுக்கு எத்தனை வயது? தொடர்ந்தும் இப்பணியில் ஈடுபடுவீர்களா?

**பதில்:** ஆம். எனக்கு தற்போது 58 வயது. ஆனால் எனக்கு ஆண்டவனின் அருளும், பெரியோர்களின் ஆசியும், ரசிகர்களின் ஆதரவும் இருக்கும் வரை தொடர்ந்த வண்ணம் இருப்பேன்.

கற்சிலைமடுவைப் பொறுத்தளவில் எத்தனையோ அண்ணாவிமார் இருந்தார்கள். ஆனால் அவர்களின் மறைவிற்குப்பின் கலைகளை எல்லாம் கைவிட்டு விட்டனர்.

**கேள்வி:** பிள்ளைகளும் தொடரவில்லை, உங்களது நிலைப்பாடு என்ன?

(17ஆம் பக்கம் பார்க்க)



## கூறுகிறார் கற்சிலைமடு தந்த அண்ணாவியார் கா.இராசேந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி? மிதுனம்

குருப் பெயர்ச்சி, ஒகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை சுவடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

**மிருகசீரிம் 3, 4 பாதங்கள்,**
**திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 பாதங்கள் வரை**



பத்திரப் பதிவில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வாங்கிய பூமியை விற்கும் சூழ்நிலை உருவாகும். எதிர்பார்த்த லாபம் கிடைக்குமா? என்பது சந்தேகம்தான். தாய் வழிப் பிரச்சினையை வளரவிடாமல் பார்த்துக்கொள்வது நல்லது. தொழிலில் புதிய பங்குதாரர்களை சேர்த்துக்கொள்ளும் முயற்சியில் திடீர் மாற்றங்கள் உருவாகலாம். நல்ல மாற்றங்களாக அமைய வாரம் தோறும் குருவை வழிபடுவது நல்லது.

அர்த்தாஷ்டம குருவாக இருந்தாலும் அதன் பாதசார பலன் உங்களுக்கு நன்மை தரும் விதத்தில் அமையும் பொழுது, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். பகைக் கிரகத்தின் பாதத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் எண்ணற்ற தடைகள் ஏற்படும்.

**குதூகலம் தரும் குருவின் பார்வை!**

உங்கள் ராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருஇ 8, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. குரு பார்க்கக் கோடிநன்மை என்பதால் அந்த மூன்று இடங்களுக்கும் உள்ள ஆதிபத்யங்கள் சிறப்பாக நடைபெறும் என்றே சொல்லலாம். குருவின் பார்வை ஒன்றுதான் குழப்பங்களை அகற்றி, குதூகலத்தை வரவழைத்துக் கொடுக்கும். வெற்றிகளை கொண்டு வந்து சேர்க்கும். நல்ல திருப்பங்களை உருவாக்கும். திருமணத்தை முடித்து வைக்கும். பொறுப்புகளும், பதவிகளும் அளிக்கும்.

குரு பார்வையால் 8 ஆம் இடம் புனிதமடைகிறது. எனவே ஆரோக்கியம் சீராகும். சென்ற ஆண்டில் தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை இந்த ஆண்டு ஈடுகட்டுவீர்கள். இடமாற்றம், ஊர் மாற்றத்திற்கான விண்ணப்பம் செய்தவர்கள், இதுவரை இருந்த தடை அகன்று நினைத்த ஊருக்கே மாறுதல் பெறுவர்.

பத்தாமிடத்தை குரு பார்ப்பதால் தொழில் ஸ்தானம் புனிதமடைகிறது. எனவே, வருமானம் அதிகரிக்கும். மூடிக்கிடந்த தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். தீட்டிய திட்டங்கள் வெற்றியாகும். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். பொன்னான வாய்ப்புகளை எதிர்பார்த்திருந்த உள்ளங்களுக்கு, மனை வாங்கும் யோகம் வாய்க்கும்.

பன்னிரண்டாம் இடத்தை குரு பார்ப்பதால் விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். வெற்றிகரமாக சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். முக்கிய புள்ளிகள் இல்லம் தேடி வந்து சிக்கல்கள் தீர வழிவகுத்துக் கொடுப்பர். 12ம் இடம் விரய ஸ்தானம் என்பதால் சுப விரயங்களைச் செய்வது பற்றி சிந்திப்பீர்கள். வெளிநாட்டு அழைப்பு வரலாம். ஆனால் பயன்படுத்திக்கொள்ள முடியுமா? என்பது சந்தேகம் தான்.

குரு, சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (2.8.2016 முதல் 19.9.2016 வரை): உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். கடன் சுமை குறைய புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். (தொடரும்)

# வன்னி மண்ணின் கலைகள் பாதுகாக்கப்படல் வேண்டும்

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பதில்:** எம்நாட்டு கலைகள் அழியவிடக் கூடாது. அது சந்ததி சந்ததியாக தொடர வேண்டும். அத்துடன் எம் இளைஞர்கள் இக்கலைகளைக் கட்டிக் காத்து, அதில் ஈடுபாடு கொண்டு கலைகளை வளர்க்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் எனது மகனை இந்தச் செயற்பாட்டில் ஈடுபடுத்தியுள்ளேன்.

அவர் நம் கலைகளை வளர்ப்பதில் ஆர்வமாக இருப்பார் என்பது எனது அசையாத நம்பிக்கை.

**கேள்வி:** உங்களது நடிப்புத் துறையின் போது ஏற்பட்ட மிகவும் மறக்க முடியாத கசப்பான அனுபவம் ஏதும் ஏற்பட்டதா?

**பதில் :** நான் முள்ளியவளையிலே நடைபெற இருக்கின்ற போட்டிக் கூத்தில் பங்கு பற்றி முதலிடம் பெறவேண்டும் என்பதற்காக சுமார் 12-15 மணித்தியாலங்கள் நடைபெறும் கூத்தின் முக்கியமான சாராம்சத்தை ஒரு மணித்தியாலத்தில் நடிக்க வேண்டும் என்பதனாலே கூத்தை ஒரு மணித்தியாலத்தில் கூத்தாக சுருக்கி நடிக்கவேண்டும். இதனை எவரும் இலகுவில் செய்யமுடியாது.

ஆனால் நான் அதனைச் சுருக்கி எல்லாவிடயங்களும் உள்ளடங்கலாக வரும்படி இளம் கலைஞர்களைக் கொண்டு பயிற்றி வந்தேன். அப்போது நடிகர்களில் ஒருவர் வேறு இடத்தைச் சேர்ந்தவர். அவரிடம் தான் இச்சுருக்கக் குறிப்புக் கொப்பியைக் கொடுத்தேன். இதனை வேறு கலைஞர்குழுவினர் அறிந்து அவரை எனது குழுவில் பங்கு பெறாது செய்தும் அக்கொப்பியை வைத்து அவர்கள் கூத்தைப் பழகினர். கூத்திற்கு இரண்டு நாள் மட்டுமே உள்ளது. இந்த நிலையில் ஒரு நடிகனும் இல்லை. சுருக்கக் குறிப்பும் இல்லை. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இருந்தும் நான் சோர்வடையாது அவசர அவசரமாக ஒருவரைப் பயிற்றுவித்து கூத்தில் பங்கு பற்றினோம். ஆனால் சதிவேலையால் முதலாம் இடம்பெற வேண்டிய நாம் 2 ஆம் இடத்தைப் பெற்றோம். இதனை என்னால் மறக்க முடியவில்லை. போட்டி இருக்கலாம் பொறாமை இருக்கக் கூடாதுஎன்பதை ஒவ் வொரு கலைஞரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

> நான் முள்ளியவளையிலே நடைபெற இருக்கின்ற போட்டி கூத்தில் பங்கு பற்றி முதலிடம் பெற வேண்டும் என்பதற்காக சுமார் 12–15 மணித்தியாலங்கள் நடைபெறும் கூத்தின் முக்கியமான சாராம்சத்தை ஒரு மணித்தியாலத்தில் நடிக்க வேண்டும் என்பதினாலே கூத்தை ஒரு மணித்தியாலத்தில் கூத்தாக சுருக்கி நடிக்கவேண்டும். இதனை எவரும் இலகுவில் செய்யமுடியாது.

**கேள்வி:** உங்களுடைய கூத்தில் ஒரு சில வரிகள் பாடி விளக்கம் தருவீர்களா?

**பதில்:** காத்தானும் சின்னானும் நடந்தகளைப் பினாலே நீர் அருந்துவதற்காக ஒரு நீரோடையை சென்றடைந்தனர். அதிலே நீரினை அள்ளிப் பருகும் போது காத்தான் என்பவர் சின்னானைப் பார்த்து இந்த நீரிலே அத்தர் மஞ்சள் மணம் வீசுகிறது, எனக்கு மயக்கம் வருகிறது மதிமயங்குகிறது. இது யார்? குளிக்கும் நீரோடை [illegible] நான் அறியக் கூறுமடா

இந்த நீரோடையில் ஆரியப்பூமாலை தான் குளிக்கின்றார் எனக் கூறவும், அவளைத் தன் மனைவியாக அடைய வேண்டும் எனவும் தொடரும் பாடலாக அமைந்துள்ளது. ஆரியப்பூமாலை குளிக்கும் நீர்தான் என சின்னான் கூறுவதுமாக அமைந்த பாடல்.

அத்தர் எல்லோ சின்னான் மணக்குதடா
எனக்கு
அதிமயக்கம் தம்பி கொள்ளுதடா
மஞ்சள் எல்லோ சின்னான் மணக்குதடா
எனக்கு
மதிமயக்கம் தம்பி கொள்ளுதடா
யார் குளிக்கும் இந் நீரோடை தம்பி

**கேள்வி :** இறுதியாக எம் இளம் கலைஞர்களுக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்?

**பதில்:** எமது வன்னியைப் பொறுத்தவரை பற்பல வரலாறுகள் புதைந்துள்ளன. பற்பல கூத்துக்கள், நாடகங்கள் என்பன நடைபெற்றன. அவைகளை எம்முன்னோர்கள் பேணிப்பாதுகாத்து குறிப்பாக ஏட்டுச் சுவடிகள் மூலம் படித்து அவைகளை கூத்தாகவும் நாடகமாகவும் நடித்துள்ளனர்.

ஆனால் எமது காலத்தில் நாம் அதனை மறையவிடக்கூடாது. இளம் கலைஞர்கள் அதுவும் நடிப்புத்துறைக்கேற்ற நடிகர்கள் இலைமறைகாயாக இருக்கின்றனர். அவர்களை இனம் கண்டு கலைத் துறையில் ஈடுபடுத்தி எம்நாட்டு கலைகளை அழிய, மறையவிடாது பார்க்க வேண்டும். குறிப்பாக பண்டார வன்னியன் வரலாற்று நாடகம், காத்தவராயன் கூத்து, கோவலன் கூத்து என்பன மட்டுமே தற்போது நடிப்புத்தொடர்கிற[illegible] ஆனால் இன்றும் பல வரலாறுக் குறிப்புக்கள் உள்ள[illegible] அவைகளைத் தேடிக்கண்[illegible] பிடித்து நாடகமாகவோ, கூ[illegible] வடிவிலோ நடிக்க முன்[illegible] வேண்டும், அத்துடன் கலை கலா[illegible] அமைச்சு எம் நாட்டுக் கலைஞர் க[illegible] ஊக்குவிக்கும் வகையில் அவர்க[illegible] கான ஆலோசனை[illegible]ளையும் உதவிக[illegible] யும் மேற்கொள்ள[illegible]ண்டும். இளம் க[illegible] ஞர்கள் மேன்மே[illegible] வளர வேண்[illegible] இளம் கலைஞர்க[illegible]தில் கூடிய கவ[illegible] எடுக்கவேண்டு[illegible]பதே எனது வி[illegible] பம் எனவும் தெ[illegible]தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனதைக் குழப்பாமல் வாழ்வதே ஆனந்தம்

**மனம் குழப்பமடையும்போது மனம் சோர்வடைந்து விடும். எந்தவொரு விடயம் தொடர்பாகவும் தீர்க்கமான தீர்மானம் எடுக்க முடியாதநிலை ஏற்பட்டுவிடும். புத்தி மழுங்கடிக்கப்படும். சிறிய பிழையும் பெரிதாகத் தென்படும். சிறிய விடயத்துக்கும் கோபம் கூடுதலாக ஏற்படும். தான் குழம்பியது மட்டுமல்லாமல் தன்னுடனான மற்றவர்களையும் குழம்ப வைக்கும் நிலை ஏற்படும்.**



சி.நற்குணலிங்கம்

மானிட வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஆரோக்கியமான மனநிலை அவசியம் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். உணர்வுகள், எண்ணங்கள், அறிவு முதலானவற்றின் தொகுப்பே மனமாகும். இந்த மனமானது சமநிலையிலிருந்து விலகி சமநிலையற்ற தன்மையில் காணப்படும் நிலையே மனக் குழப்பம் எனப்படும்.

தினசரி வாழ்க்கையில் நாம் நினைத்ததும் நடக்காமல், நினைக்காததும் நடக்காமல் ஏதோ ஓர் இரண்டும்கெட்டான் நிலையில் இருக்கும்போது மனக்குழப்பம் ஏற்படுகின்றது. பலதரப்பினருக்கும் ஏதோவொரு வகையில் மனக்குழப்பம் ஏற்படத்தான் செய்கிறது. தனிமை, சோகம், வேதனைகள், இழப்புகள், தோல்விகள், சரிவுகள், ஏமாற்றங்கள், பதற்றங்கள், பயம், எம்மைச் சார்ந்தவர்களின் பொருத்தமற்ற செயற்பாடுகள், எதிர்பார்ப்புக்கள் முறிவடைதல், தவறுகள், பிணக்குகள், விரும்பத்தகாத விடயங்கள், ஏக்கம், அதிர்ச்சி, கோபம் கொள்ளல், ஆகிய காரணிகளின் விளைவாகவே ஒருவரது வாழ்க்கையில் மனக்குழப்பம் தோற்றம் பெறுகின்றது. மனக்குழப்பத்தின் கூர்மைகளுக்கும் ஒரு வரைமுறை உள்ளது. இது நிரந்தரமில்லை. எனவே மனக்குழப்பம் பற்றி நாம் குழப்பமடையத் தேவையில்லை.

மனம் குழப்பமடையும்போது மனம் சோர்வடைந்து விடும். எந்தவொரு விடயம் தொடர்பாகவும் தீர்க்கமான தீர்மானம் எடுக்க முடியாதநிலை ஏற்பட்டுவிடும். புத்தி மழுங்கடிக்கப்படும். சிறிய பிழையும் பெரிதாகத் தென்படும். சிறிய விடயத்துக்கும் கோபம் கூடுதலாக ஏற்படும். தான் குழம்பியது மட்டுமல்லாமல் தன்னுடனான மற்றவர்களையும் குழம்ப வைக்கும் நிலை ஏற்படும். மனக்குழப்பம் ஏற்பட்டால் எந்தவொரு வேலையைச் செய்யமுற்பட்டாலும் அந்த வேலையில் ஒரு திருப்தி காணப்படமாட்டாது.

கல்விகற்கும் மாணவர்களுக்கு மனக்குழப்பம் ஏற்படும் வேளை அவர்கள் கற்றல் செயற்பாட்டில் தம்மை முழுமையாக ஈடுபடுத்த முடியாமல் போகும். கற்பவை மனதில் நிற்க மறுக்கும். விளங்கக்கூடிய விடயங்கள் கூட விளங்க மாட்டாது. கற்றலில் விருப்பம் குறையும். எனவே மாணவர்கள் தமது மனதை சமநிலையில் வைத்திருக்க பழகிக்கொள்ளவேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் தேவையற்ற விடயங்களை மனதுக்குள் புகுத்தக்கூடாது.

மனக்குழப்பத்தால் அடிக்கடி தலையிடி வரும், மார்பில் எரிச்சல், உளைச்சல் ஏற்படும், தாழ்வு மனப்பான்மை உருவாகும், அழ வேண்டும் என்ற உணர்வு மேலோங்கும், சிக்கல்களைத் தீர்க்க இயலாமல் இருக்கும், தன்னம்பிக்கை இழந்து விடுவார்கள், ஞாபகமறதி ஏற்படும், நிம்மதியற்ற குடும்ப வாழ்க்கையாகிவிடும். ஒட்டு மொத்தமாக எமது ஒவ்வொரு செயற்பாடும் செயற்றிறன் அற்றதாகவே காணப்படும்.

அனைத்து மனிதர்களும் சுகமாக வாழவே விரும்புகிறோம். எப்போதும் எமது உடல் சுறு சுறுப்பாகத் தெம்பாக இருக்கும்போது எமக்கு நல்ல மனநிலை வாய்க்கின்றது. உடல் சுகமாக இருந்தாலும் மனம் குழம்பாமல் மனநிம்மதி கிடைப்பதற்கு மனச்சுகம் இன்றியமையாததாகும். மனதைக் குழப்பாமல் மனம் அமைதியாக இருக்கும் வரை எமது வாழ்க்கை திருப்திகரமாக அமையும். மனம் கொண்டது மாளிகை என்பார்கள்.

மனதைக் குழப்பமடையாமல் வைத்திருப்பதன் மூலம் எமது மனதில் நல்ல உணர்வுகள் ஓடிக் கொண்டிருக்கும். நல் உணர்வினால், மகிழ்வான மனநிலையால் குடும்ப உறுப்பினர்களுடன் உறவினர்களுடன் நண்பர்களுடன் அயலவர்களுடன் அன்பாகப் பழகலாம், இனிமையான தொடர்பாடல்களை மேற்கொள்ளலாம். உணர்வுகளை எமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளலாம். வாழ்வை முழுஈடுபாட்டுடன் வாழலாம். எமது வாழ்வியல் தேவைகளை பதற்றமில்லாமல் மகிழ்வுடன் நிறைவு செய்யலாம்.

யோகாசனம், தியானம் என்பன மனக் குழப்பத்தைக் கட்டுப்படுத்தி ஓய்வு நிலைக்குக் கொண்டுவந்து புதுப்பிக்கும் வல்லமை வாய்ந்தவை. எமது மனதை நாம் நன்றாக அறிந்து வைத்திருக்க வேண்டும். அதற்கேற்ப மனதை முகாமை செய்யவேண்டும். மனதை அடக்க நினைத்தால், அலையும் மனதை அறிய நினைத்தால் அடங்கும். சிந்தித்துச் செயற்படுவதன் மூலம் மனக்குழப்பத்திலிருந்து விடுபடலாம்.

எந்தவொரு காரியத்தையும் அவசரப்படாமல் செய்யவேண்டும். குறுகிய நேரத்தில் கூடிய வேலையை செய்ய முனையக்கூடாது. சரியான முடிவை எடுத்த பின்னரே காரியத்தில் இறங்க வேண்டும். முடியாதவற்றை கட்டுப்படுத்த முயலக்கூடாது. உங்கள் எண்ணங்களைத் தேக்கிவைத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் நிலையில் உறுதியாக இருங்கள். உங்கள் நேரத்தை சரியாக நிர்வகியுங்கள். நல்ல நண்பரை அழைத்துப் பேசுங்கள். பதற்றத்தைக் கட்டுப்படுத்துங்கள். தவறான செயல்களில் ஈடுபடாதீர்கள். கலாசாரச் சீரழிவுகளை வெறுத்து ஒதுக்குங்கள். எல்லோருடனும் அன்பாகப் பழகுங்கள். நேர்சிந்தனைக்கு முக்கியத்துவமளியுங்கள். பிரச்சினைசளைத்தள்ளி வைக்காது அவற்றை எதிர்கொண்டு சமாளிப்பதற்கான திறனை வளர்த்துக் கொள்ளுங்கள். அசட்டுத் துணிச்சலும் அளவு கடந்த நம்பிக்கையும் மன அமைதியின் எதிரிகள் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகப் பார்க்கும் மனநிலையை உருவாக்கிக்கொள்ளுங்கள். குடும்பம் என்பது அன்பைக் கொடுத்து ஆனந்தத்தை உருவாக்கும் இடமாக இருக்க வேண்டும். உங்களின் மனக்குழப்பங்களிலிருந்து பாடம் பயிலுங்கள். ஆனால் ஒரு போதும் கடந்து போனதை நினைத்து மனதைக் குழப்பாதீர்கள். சக்திக்கு மீறிய செயலைச் செய்யாதீர்கள். பொறாமை கொள்ளாதீர்கள். மனதை பயனுள்ள விடயங்களால் நிறைத்து வையுங்கள். இதெல்லாம் ஒருசேர நடக்கும்போது மனக்குழப்பம் நீங்கி வாழ்வில் ஒரு பிடிப்பும், சந்தோசமும் அதிகமான மன அமைதியும் உங்களுக்கே சொந்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி பரமலிங்கம்

# தமிழர் இந்துக்களா?


பசுந்தீவு கோவிந்தன் எழுதிய தமிழர் இந்துக்களா? என்னும் நூலை என்னிடம் கையளித்தபோது அதனை ஆய்வு செய்ய வேண்டுமென்னும் எண்ணம் துளிர்த்தது.

காரணம் 'தமிழர் இந்துக்களா?' என்னும் தலைப்புச் சுட்டிய கருத்தை வைத்துத்தான். ஏனெனில் தமிழர்களுக்கு சொந்தமான உரிய மதங்கள் எதுவும் இதுவரை தோன்றவில்லை; என்னும் எண்ணம் என்னிடம் வளர்ந்து இருந்தது.

தமிழர்கள் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், வைஷ்ணவர்கள், பௌத்தர்கள் ஏன் இன்னும் எத்தனையோ மதங்களைத் தழுவியவர்களாக உலகப்பந்தில் ஓடிமறைந்துள்ள இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வந்திருக்கிறார்களே அன்றி, அவர்களுக்கென ஒரு மத பண்பாட்டுக் கலாசாரத்தை உருவாக்கிக் கொள்ளவில்லை என்பதும் என்னுடைய அடிப்படைக் கருத்தாகும்.

உலகப் பொதுமறை என்றெல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் 'திருக்குறள்' என்னும் அரிய பொக்கிசத்தை திருவள்ளுவர் தமிழுக்குத் தந்தும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. ஆயினும் தமிழர்களால் தங்களுக்கென ஒரு சமயத்தை உருவாக்கிக்கொள்ள சிந்திக்க முடியவில்லை என்றால் எத்தனை பின்னடைவு?

'தமிழர் இந்துக்களா?' என்னும் நூல் வேறு தடத்தில் செல்கிறது. இந்துமதத்தைத் தழுவி உருவாக்கப்பட்ட சைவம் என்னும் மதத்தையே தமிழர்கள் பின்பற்றுவதாகவும், இந்து மதத்தின் முதல் வழிபாட்டுக்குரிய சிவன் தெய்வத்தைவிட்டு, முருகனைத் தமிழ்க் கடவுளாய் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் நூல் கூறுகிறது.




சைவம், சாக்தம், வைஷ்ணவம், காணாபத்தியம் கௌமாரம் சௌரம் ஆகிய வழிபாட்டு நெறிகளும் இந்து சமயம் என்னும் மாபெரும் சக்தியாகத் திகழ்கையில் ஒவ்வொன்றும் தனித்தனி வழிபாட்டு நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகுதல் காலப்போக்கில் இந்து சமயம் என்னும் மகாசக்தி வாய்ந்த ஒரு சமயம் அழிந்து போக வழிவகுக்குமென நூலாசிரியர் வலியுறுத்துகிறார்.

அதேபோல் சிவனை ஏனைய அம்மன், முருகன், விநாயகர் போன்ற சிறு கடவுளர் வழிபடுவதால் சின்னக் கடவுள், பெரிய கடவுளென பக்தர்கள் கூறி அனுசரிப்பதும் பிழை எனக்கூறும் நூலாசிரியர் இந்தக் கருத்தை நூலில் இரண்டுக்கும் மேற்பட்ட இடங்களில் திரும்பத்திரும்பக் கூறுவது நூலின் கனதியைக் குறைத்துள்ளதெனலாம்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் பாடத்திட்டத்தில் சமயபாடம் கட்டாய பாடமாக அமைந்துள்ளதைச் சுட்டிக் காட்டும் பசுந்தீவுக் கோவிந்தன் முற்காலங்களில் இந்து சமயம் இந்து கலாசார நெறியைக் கற்பித்ததாகவும், தற்காலங்களில் அது சைவ நெறியாக மாற்றப்பட்டு விட்டதையும் சுட்டிக்காட்டி அதனை அரசு மேற்கொள்ளும் இந்து சமயச் சங்காரமெனவும் ஆவேசப்பட்டுள்ளார்.

'தமிழர்கள் இந்துக்கள் அல்லர் சைவர்கள், இந்துக்களென அழைக்கப்படக் கூட தென்பது அறியாமையா?' என்றும் நூலாசிரியர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பகவான் ஆதிசங்கரரால் ஆறுகூறுகளாக அமைந்திருக்கும் இந்துசமய நெறிகளை ஒரு குடையின் கீழ் அத்வைத தத்துவத்தை பெரும் சிரமங்கள் மத்தியில் உருவாக்கி பாதுகாத்து வந்ததைச் சுட்டிக்காட்டி, தமிழர்கள் சைவசமயம் ஒன்றைக்கட்டிக்கொண்டு ஆலவிருட்சமான இந்துசமயம் அழிந்துபோக விட்டுவிடக்கூடாதென நூலின் 50 பக்கங்களுக்கும் மேலாக வலியு றுத்தி வந்த நூலாசிரியர், 59ஆம் பக்கத்தில் தடம் புரள்கிறார். 'மக்களுக்குத் தேவையானது இந்துவா? சைவமா?' என்ற பெயரல்ல. (பக்:59)

'இந்து சமயத்தைத் தக்க வைக்க சைவசமயம் என்று பிளவுபடாமல் தமிழர்கள் இருக்க வேண்டுமென' 60ஆம் பக்கம் வரை கூறிவந்த பசுந்தீவுக் கோவிந்தன், 'சைவமும் தமிழும் சேர்ந்தவனே தமிழன்' (பக்:60) என்கிறார்.

பிரம்மம் பிரபஞ்சம் தமிழர் இந்துக்கள் அல்லர்; சைவர் தமிழர்கள் விழிப்படையாவிட்டால் தமிழினமே அழிந்துவிடும். இறைவன்தான் தமிழினத்தைக் காக்க வேண்டும். இதுபோன்ற வார்த்தைப் பிரயோகங்கள் நூல் பக்கங்களில் விரவிக்காணப்படுவதானது சொல்ல வந்த செய்தியைத் திரிபு படுத்துவதாகவே அமைந்தும் விடுகிறது.

'தமிழன் சிவனை மட்டும் வழிபடவில்லை; பரம்பொருளாகிய இறைவன் ஒன்றாயும் பலவாயும் நின்று அருள் புரிபவன்' (பக்:77) என்கின்ற நூலாசிரியர், தமிழ்ச் சைவர்கள் சிவனை அல்லாமல் வேறெந்த மூர்த்தங்களையும் வழிபடுவது சைவம். அழிவதினூடாக தமிழினமும் அழிந்து போகுமென்றும் இடை யிடையே எச்சரிக்கை விடுகிறார்.

தமிழர் இந்துக்கள்தான். சைவமும் இந்துக்குட்பட்டதே. சைவம், இந்து எனத் தமிழர்களிடையே பிளவு ஏற்பட்டு விடக் கூடாதென்பதற்காகவே இந்த நூல் மூலம் முயற்சிப்பதாக வரிந்து கட்டும் ஆசிரியர், கிறிஸ்தவம், இஸ்லாம் மற்றும் பௌத்த மதங்களைச் சார்ந்துள்ள தமிழர்களைக் கைவிட்டு விட்டாரே!

முகவுரை, அணிந்துரை நூலாசிரியர் உரை தவிர்ந்த 102 பக்கங்களில் பத்துக்கட்டுரைகளை பகுதி 1, 2 எனப் பத்துவரை பிரித்து எழுதப்பட்டுள்ள நூலில் தொகுக்கப்பட்டிருக்கும் கட்டுரைகளில் முதலில் கூறியவற்றை திரும்பத்திரும்பப் பல தடவைகள் ஒப்புவிக்கும் பலவீனம் பரக்கக் காணப்படுகிறது.

'சைவம் என்னும் பெயர் மறைந்து போவதும், மாற்றம் அடைவதும் உலக நியதி' என்னும் நூலா சிரியர் இறுதிப் பகுதியில்(பக்:87) வாசகர்களை மேலும் கண்டதுண்டமாக கூறுபோட்டு குழப்பியும் விட்டுள்ளார்.

புலம் பெயர்ந்து கனடாவைத் தளமாகக் கொண்டு எழுதியுள்ள மேற்படி நூலில் 'மனித இனத்துக்கு வேண்டப்படுவது என்ன? அறுபதுக்கும் மேற்பட்ட இனங்கள் வாழும் கனடாவில் வாழும் நாம் கனேடியன் என்ற உணர்வோடு வாழப்பழக வேண்டும். அதைவிடுத்து தமிழன் சைவன், இந்து என வாழப்பழகினால் யானை தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டதாகும் (பக்:87)

இந்த விதமாக நூலில் பரக்கப் புலம்பியுள்ள பசுந்தீவுக் கோவிந்தன் தனக்கே தெளிவில்லாத விடயமொன்றை தேர்ந்து நூலெழுதிப் படிப்போரை குழப்ப முயற்சித்து உள்ளார்.

'தமிழர்கள் சைவர்தாம்; இந்துக்கள் அல்லர் என்பதை ஏற்கமுடியாதென' 102 பக்கங்களில் அதற்கும் அதிக எண்ணிக்கையில் வலியுறுத்தி இருப்பதை வாசித்தால் எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான் என்னும் வாக்கியம் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியாது.

சரளமாக எழுத்து நடை கைவரப் பெற்றுள்ள ஆசிரியர், இத்தகைய கஷ்டமான விடயங்களை எழுதுவதை விட்டு (இதுவரை பத்துக்கும் மேற்பட்ட நாவல்களை எழுதி இருப்பதாகப் பின்னட்டையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, என்னால் வாசிப்புக்கு உள்ளாகவில்லை.) நாவல்களையே எழுதிக்கொண்டிருக்கலாம்.

> **தமிழர்கள் சைவர்தாம், இந்துக்கள் அல்லர் என்பதை ஏற்கமுடியாதென 102 பக்கங்களில் அதற்கும் அதிக எண்ணிக்கையில் வலியுறுத்தி இருப்பதை வாசித்தால் எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான் என்னும் வாக்கியம் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியாது.**

# 'இலட்சிய தாகத்தில் இணையும் உள்ளங்கள்' வவுனியாவில் நாவல் வெளியீட்டு விழா

சி.தணிகாசலத்தால் எழுதப்பட்ட 'இலட்சிய தாகத்தில் இணையும் உள்ளங்கள்' எனும் 'நாவல்' வெளியிட்டு விழா அண்மையில் வவுனியாவில் சிறப்பாக இடம் பெற்றது.

இந்த நிகழ்வு வவுனியா ஸ்ரீ இராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் அதிபர் தே.ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நூலை அகளங்கன் மற்றும் திருமதி ஆ.தணிகாசலம் முன்னிலையில், வலயக் கல்விப் பணிப்பாளர் அன்ரன் சோமராஜா வெளியிட்டு வைக்க, அண்ணா நகர் அதிபர் சு.உதயகுமார் பெற்றுக்கொண்டார். நாவலின் ஆய்வுரையை ஆசிரியர் வே.முல்லைத்தீபன் நிகழ்த்தினார். அத்துடன் பணி ஓய்வுபெற இருக்கும் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அன்ரன் சோமராஜாவுக்கு சேவைநலன் பாராட்டுக்கள் இடம்பெற்றன. நிகழ்வின் இறுதியில் நூலுக்கான ஏற்புரையுடன் கூடிய நன்றியுரையை பாடசாலை ஆசிரியரும், நூலாசிரியரின் துணைவியுமாகிய திருமதி ஆ.தணிகாசலம் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் முன்னிலை இலக்கியவாதியான கலாநிதி தமிழ்மணி அகளங்கன் பிரதம விருந்தினராகவும், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜ் சிறப்பு விருந்தினராகவும், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கு.சிதம்பரநாதனும், கௌரவ விருந்தினர்களாக வவுனியா



மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், வவுனியா பிரதேச கலாசார உத்தியோகத்தர் பண்டிதர் வீ.பிரதீபன், காத்தார் சின்னக்குளம் கிராம அலுவலர் க.[illegible] ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (21)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்றும் நினைவில் நிற்கும் வீ.கே.பாலசிங்கம்

செ.செல்வதாசன்

நம் வாழ்வில் சந்தித்த சிலரை நினைத்தாலே இனிக்கும். அத் தகையவர்களில் ஒருவர்தான் அரியாலையூர், கலாபூசணம், கலை மகிழ்னன் வீ, கே. பாலசிங்கம். கம்பீரமான சரீரமும், இனிமையான குரல் ஓசையும் கொண்டவர்.

ஆசிரியராகப் பணியாற்றிய அவர் சிறந்த ஓவியர், நாடக நடிகர், பாடகர், கவிஞரும் கூட.

நம் பிரதேசத்தில் பல கோயில் திரைச் சீலைகளை , தெய்வீக மணம் கமழ அவர், ஓவியம் தீட்டியிருந்தார். பூஜை தொடங்கி, தீபம் காட்டும் வரை அந்த மறைப்பு திரை ஓவியத்தையே பார்த்துக்கொண்டிருக் கலாம். அந்தளவுக்கு அற்புதமாகவும் தெய்வீகமாகவும் அது அமைந்திருக்கும். அதிலும் சரஸ்வதிதேவியின் ஓவியமென் றால் அது சரஸ்வதியேதான்.

ஓவியத்தின் மீதிருந்த அவரது அளவற்ற விருப்பமும், ஆசிரிய பயிற்சியின்போது பெற்ற ஓவியப் பயிற்சியும் அவருக்கு நாடகங்களில் ஒப்பனை மேற்கொள்ள வும், காட்சி விதானிப்புகளுக்கும் உதவிய தெனலாம். சில வேளைகளில் வேட உடுப்புக்களையும், காதணிகள் போன் றனவற்றையும் அவரே ஆக்கி, பயன் படுத்திய சம்பவங்களும் உள்ளன.

சகோதர விரோதியெனும் பிரபல கற் பனை வரலாற்று நாடகத்தில், காட்சி விதானிப்புகளுக்கு, கிடைக்கின்ற பொருள் களைக்கொண்டே காட்சியமைப்பது இவருக்குக் கைவந்த கலையாக இருந்தது. அரியாசனம் மற்றும் மலை போன்ற அமைப்பின் காட்சியை இவர் கைவண்ணத்தைக் காணலாம். கிடைக் கின்ற கதிரைகள், மேசைகள் மற்றும் தளபாடங்களை அடுக்கி, அதன்மீது, பெரிய தறப்பால் கொண்டு மூடி, அதற்கு வர்ணப்பூச்சு கொடுத்து இயற்கையான குன்றுபோல நாடகத்தில் காட்சி அமைப்பதில் அவருக்கு நிகர் அவரே. கதையின் பிரகாரம், வில்லன்கள் கதா நாயகனை அம்மலை மீது ஏற்றி தள்ளி விடுவர். அதில் கதாநாயகன் உருண்டு உருண்டு வந்து விழுந்து எழுவார். எழுந்ததும் அந்தக் கால நாடகத்தில் ஒரு பாடல் இருக்கும். இவையெல்லாம் அப்படியே பார்வையாளர்களை ஈர்த்து அதில் ஒன்றிப்போகச் செய்துவிடும். எனக்கு 11 வயதாக இருக்கும்போது, இவ்வாறு மலை அமைக்கும்போது மேடையுள் நின்று அதனைப் பார்த்தேன். அடுத்த நாள் எமது மாமன் முறையான வர் ஒருவரின் வீட்டில் (எமது வீடடில் கதி ரை மேசை இல்லாததால்) தளபாடங் களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி, மலைசெய்து, அதில் ஏறி புரண்டுவிழுந்து, கை முறிந்து ஓரிரு வாரங்கள் மருத்துவ மனையிலிருந்தமை இன்றும் பசுமை யான நினைவாக உள்ளது. முழு சுகம் பெற ஒட்டகப்புலத்துக்கும் சென்று வந்தது உண்டு.

இவ் நாடக ஈடுபாட்டை அவதானித்த ஆசிரியர் வி.கே. பாலசிங்கம் சிறுவர்களான எமக்கும் நாடகம் பழக்கி மேடையேற்ற வாய்ப்பளிக்க முன்வந்தார். அதற்கமைய ஔவையாருக்கு, அதியமான் நெல்லிக்கனி கொடுத்த கதையை பிரதியாக்கி, நடிக்க வைக்க முயற் சித்தார். ஒரு 10 நிமிடத்துள் அடங் கும் அந் நாடகப் பிரதியை வழங்கி, பாடமாக்க வைத்து, ஒத்திகை பார்க் கும் நிகழ்வு இடம்பெற்றது. ஒத்தி கைளின்போது சிறுவர்களான எமது உள்ளார்ந்த திறமைகளை மதிப்பீடு செய்த ஆசிரியர், எம்மைக் கொண்டு அரை மணித்தியாலம் வரையான ஓரளவு காத்திரமான நாடகத்தை தயாரிக்கலாமென கணித்து, வேறொரு பிரதியை ஏற்பாடு செய்தார். அது ஏற் கனவே அவரது பாடசாலையில் மாணவர்களால், அவரது நெறி யாள்கையில் மேடையேற்றபட்ட நவாலியூர் நா. செல்லத்துரை யின், ராஜாதேசிங் எனும் வர லாற்று நாடகப் பிரதியாகும்.

அதனை அவரே பழக்கி, வேட உடுப்புக்களையும் அவரே ஆக்கி, ஒப்பனையையும் அவரும், அவ ரது சகோதரர், வீ.கே. செல்லத் தம்பி மற்றும் அமரர் செ.இராஜ ரத்தினம் என்பவர்கள் மேற்கொண் டிருந்தனர். சீன் காரர்களிடம், நன்கு வளர்ச்சியடைந்த பெரி யோர்களுக்கான இராசா, இராணி உடுப்புகளே இருக்கும். அதனால் அரசர், தூதுவன், அமைச்சர், தளபதியென சின்னச்சின்ன அளவுகளில் தருணத்துக்கு ஏற்ற ஆடைகளை, கூறைச் சேலை களிலிருந்தும், பெண்கள் முழு மற் றும் அரைப் பாவாடைகளிலிருந் தும், தாவணிகளிலிருந்தும், ஆசி ரியரே ஏற்பாடு செய்தனர். கைப்பட்டி, கால்பட்டி, அரியாசனம் போன்றன. பிறிஸ்டல் போட்டில் வெட்டி யெடுத்து, வாணிஸ்தாள் மற்றும் சில்வர், கோல்டன் தாள்களும், வெட்டி ஒட்டி செய்யப்பட்டன. சில்வர் டஸ்ற் உம் தூவப் பட்டு, பெரிய திரைச் சீலையைப் (சீன்) பின்னணியாகக் கொண்டு, குவிக்கப் பட்ட அதிக மின் ஒளியில் ஒரு மாய உல குக்கே இரசிகர்களை அழைத்துச் சென்று விடும்.

இவற்றை ஒட்டுவதற்கான வேப்பம் பிசின் சேகரிக்கும் பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும். அதனுடன் ஸ்பிரிட் - (அப்போது மருத்துவமனை களிலிருந்து பெறப்படுவதையும்)



சேர்த்து, உடனடியாகக் காயக்கூடிய ஒரு வகை பிசின் தயாராகிவிடும். தாடி மீசை ஒட்டுவதற்கும் இதுவே பயன்படும்.

இவ்வாறு நாடகம் சார்ந்த பல்வேறு அனு பவங்களையும் அவர் பெற்றிருந்ததுடன், மரபுக் கூத்து நாடகங்களையும் அவர் சிறு வயதிலிருந்தே பாடி நடித்து வந்த தாகக் கூறப்படுவதுண்டு.

நாம் சிறுவராக இருந்தபோது, வள்ளி திரு மணத்தில், அவர் வேடனாக வந்து அட்ட காசம் செயததையும், முருகனாக வந்து அருள்பாலித்தமையையும் வள்ளியைத் திருமணம் புரிந்தமையையும் இன்றும் எம் மனக் கண்ணில் காணக்கூடியதாக உள்ளது. அல்லாமலும் வேறு நாடகங் களில் அவர் நாரதராகவும் பாடி-நடித்து சபையோரை வசீகரித்தது உண்டு. நாடகத்துக்கு அடுத்த நாளும் அவர் வீடு தேடிவந்து, பல முதியர்வர்கள் அவரது கையைப்பிடித்து, முத்தமிட்டு தமது மகிழ்ச் சியைத் தெரிவிப்பது உண்டு. அல்லா மலும், போக்குவரத்துக்கு வசதியில்லாத அந்தக் காலத்தில் பஸ் தரிப்பிடம் வரை, அரியாலையிலிருந்து, முத்திரச்சந்தை வரை செல்கையில், அவரது இரசிகர்கள், கூடுதலாக வயது முதிர்ந்தவர்கள். இவ் வாறே அவரை வாழத்துவதை உடன் செல்லும் நான் கண்டு வியந்தது உண்டு. சீனியப்பு, சின்னப்புப் பரியாரியார் போன் றோர் இவர்களில் அடங்குவர். இதனால் அவரது பயணம் தாமதாவதும் உண்டு. பின்னாளில் கலாநிதி த.கலாமணி, பூதத்தம்பி நாடகத்திலும் நடித்துப் பாராட்டுப் பெற்றார். தான் பணியாற்றிய அனைத்து இடங்களிலும் பாடசாலை நாடகங்களைப் பழக்கி மேடையேற் றியிருந்தார்.

தெற்கு திஸமகராமவில் ஆசிரியராக பணியாற்றியபோது, திடீரென மணம் செய்துகொள்ள தனது மனைவியுடன் அங்கு சென்றார். அவரும் ஓர் ஆசிரியை. கதிர்காமக் கந்தன் ஆலயம் அருகே தானிருந்தது. ஒவ்வொரு வெள்ளிக்கிழ மையும் அங்கு செல்வது உண்டு. முதன் முதலாக தமது மனைவியை காலை வேளை அங்கு அழைத்துச் சென்ற போது, கோயிலில் ஒலி நாடாவில் இசைப் பாடல் ஒன்று ஒலித்துக் கொண்டிருந்ததா கவும், அதனைக் கேட்டபோதுதான், அப்படியே மெய்சிலிர்த்துப் போனதாக வும், அவரது மனைவி சொல்லி ஆச்சரியப் பட்டார். கதிர்காமக் கந்தனைப் பற்றிய அப்பாடல், வீ,கே.பாலசிங்கத்தாலேயே இயற்றப்பட்டு, அவரது குரலிலேயே பாடிக்கொண்டிருந்ததே, அவரின் மனைவி யின் ஆச்சரியத்துக்குக் காரணம்.





## கவிதை நூல் வெளியீட்டு விழா

இணுவையூர் சக்திதாசன் எழுதிய 'தொட்டுவிடும் தூரத்தில்' கவிதை நூல் வெளி யீட்டு விழா அண்மையில் இணுவில் பொதுநூலக, அமரர் இராசையா- இரா சம்மா தம்பதியர் ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது. மானிப்பாய் இந் துக் கல்லூரியின் ஆசிரியர் ஞான. திருக்கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு, பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழித்துறையின் மூத்த விரிவுரையாளரும், [illegible] இளைப்பாறிய [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ.அருந்தவம்

# சிறுவர்களை வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபடுத்துவோம்

இன்றைய பரபரப்பான வாழ்க்கை முறையில் சிறுவர்களை காலையில் எழுந்து கடமைகள் முடித்து பாடசாலை செல்லல், நண்பகலின் பின்னர் பாடசாலையிலிருந்து வீடு திரும்புதல், பின் தனியார் கல்வி நிலையம் சென்று கற்றல், வீடு வந்து மாலைக்கடமைகளைநிறைவுசெய்து அடுத்தநாள் கற்றலுக்கான ஆயத்தப் பாடுகளையும் அன்றைய பாடமீட்டல்களையும் மேற்கொள்ளல் என்றவாறான கல்விச் சக்கரத்தினுள் சுழன்று கொண்டிருக்கின்ற பிள்ளைகளுக்கு இந்த விடுமுறை ஆறுதல் தரும் இனிய காலமாக இருக்க வேண்டும்.

பெற்றோர் இந்த விடுமுறைகாலத்தில் பிள்ளைகளைப் படி படி என்று கரைச்சல் படுத்தாது, அவர்களுக்கு உகந்த மகிழ்வு தரும் மற்றும் எதிர்கால வாழ்க்கையை வளப்படுத்துவதற்கு அத்திபாரமிடும் செயற்பாடுகளில் ஈடுபடுத் தல், காலத்திற்கேற்ற சிறந்த செயற்பா டாகும். இந்த வகையில் பிள்ளைகளை வீட்டுத் தோட்ட முயற்சியின் பால் ஆர் வங்கொள்ளச் செய்யலாமல்லவா!

### நாம் தவறிவிடுகிறோம்

நம் குழந்தைகளுக்கு சொகுசு வீடு, கார், ஆயுள் காப்புறுதித் திட்டம் தர நினைக்கும் நாம் அவர்களுக்கு நல்ல தரமான உணவு பெறும் வழிமுறைகளைக் கற்றுத்தரத் தவறிவிடுகிறோம். நல்ல தரமான உணவைப் பெறுவதற்கு ஏற்ற வழிமுறை வீட்டுத் தோட்டச் செய்கையே. இதற்கான அத்திபாரத்தை இந்த விடுமுறைக் காலத்திலேயே இடுவோம்.

### பிள்ளைகளை ஏன் வீட்டுத் தோட்டச் செயற்பாட்டில் ஈடுபடுத்தல் வேண்டும்?

இன்றைய காலகட்டத்தில் விவசாயம் நம்மைவிட்டுஅகன்றுகொண்டிருக்கிறது. அனைவரும் உணவு உண்கிறோம், ஆனால் நாம் உண்ணும் ஒவ்வொரு காய்கறியும் எப்படி விளைகிறது? எங்கு விளைகிறது என்று பெரும்பாலான இன்றைய பிள்ளைகள் அறிந்திலர். விவசாய நாடான இலங்கையில் இளைய தலைமுறையினர்நவீனதொழிநுட்பத்தைநோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு விவசாயத்தைப் பற்றி அறிவதில் ஆர்வம் இல்லை. அதில் ஈடுபட வேண்டுமெனும் எண்ணமுமில்லை.

விவசாயம் என்றால் அது கடினமான வேலை என்ற தவறான எண்ணமே இன்றைய இளம் தலைமுறையினர் மத்தியில் உண்டு. அது அப்படியல்ல, அது கிரகித்துச் செய்ய வேண்டிய கலையாகும் என்பதுஎமது இளம்சமூகத்துக்குஉணர்த்த வேண்டிய காலம் இது. இதற்கு இந்த விடுமுறையைசிறந்தகாலமாக்கிக்கொள்ளலாம்.

### வீட்டுத் தோட்டச் செய்கையும் ஒரு கலையே

மனதைக் கவரும் எந்தத் தொழிலும் ஒரு கலையாகும். வீட்டை அலங்கரித்தல் முதல் நாட்டியம், இசை, ஓவியம்,சிற்பம், மாலை கட்டுதல் முதலிய செயற்பாடுகள் எல்லாமே கலையே. அந்த வகையில் வீட்டுத் தோட்டம் அமைத்துப் பராமரித்தலும் ஒரு கலையே.

விடுமுறைகாலத்தில் வீட்டுத்தோட்டம் அமைத்து ரசித்து ருசித்துப் பராமரிக்கும் கலையை சிறுவர் மத்தியில் பழக்கிவிட்டால் அது அவர்கள் வாழ்விற்கு இடப்படும் சிறந்த முதலீடாகும்.

### கணிதமும், கணினிப்பொறியும் ஒரு போதும் பசி தீர்க்காது

கால மாற்றத்திற்கேற்ப நவீனம் வருவதும், அவற்றைப் பயன்படுத்துவதும், தவிர்க்க முடியாதது தான். அதற்காக தாய்ப்பாலே நஞ்சாவதை அனுமதிக்கக் கூடாது. ஏர், மண்வெட்டி பிடித்தவர்களின் பிள்ளைகள் எல்லாம் மவுஸ் பிடிக்கப் போய்விட்டதால் வீடுகள் தோறும் வீறுகொண்டு நின்றிருந்த கலப்பையும் மண்வெட்டியும் காணாமலே போய் விட்டன. கணினிவந்து எல்லா வீடுகளிலும் குந்திக் கொண்டது. கண்களுக்கும் அறிவுக்கும் கணினியில் விருந்து கிடைக்கும், வயிற்றுப் பசிக்கு அது வாழையிலை போட்டுப் பந்திபரிமாறுமா, இன்றைய சூழலில் எல்லோரும் விவசாயம் செய்வது சாத்தியமில்லை என்றாலும் வீடு தோறும் பசுமைப்படுத்த வேண்டும். இதற்கான வீட்டுத் தோட்ட முயற்சியில் இளம் தலைமுறையினரை ஈடுபடுத்தவேண்டும்.

எப்போதும்மவுஸும்கையுமாக இருந்து எதிர்கால நோயாளிகளைப் பிரசவிப்பதைத் தடுப்பதற்கும் விடுமுறைக் காலத்தில் தொலைக் காட்சியே தவம் என இருந்து தம் வாழ்வைத் தொலைக்கும் பலரை மீட்டெடுப்பதற்கும், விடுமுறையில் தவறானவர்களுடன் சேர்ந்து பிறழ்வான நடத்தைக்குத் தள்ளப்படுவதைத் தடுப்பதற்கும் விடுமுறையில் பிள்ளைகளை வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுத்தல் பயனுறுதி மிக்கதாகும்.

உண்மையிலேயே குழந்தைகளுக்கு பாடசாலை விடுமுறையில் பயிர்ச் செய்கை முறைகளைக் கற்றுக் கொடுப்போம். ஏனெனில் கணிதமும், கணினிப் பொறியும் ஒரு போதும் பசிதீர்க்கப் போவதில்லை...!


இத்துடன் விடுமுறையில் தவறான செயற்பாடுகளிலிருந்து பிள்ளைகளைக் காப்பதில் வீட்டுத் தோட்டம் பெரும் பங்காற்றுகிறது.

> இன்று நாம் சந்தையில் வாங்கும் விவசாய விளைபொருள்களில் பலவும் விவசாய இரசாயனங்களால் நஞ்சூட்டம் பெற்றவையாக இருக்கும். ஆனால் வீட்டுத் தோட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட விளைவுகள் நஞ்சூட்டம் பெற்றவை என்ற ஐயப்பாடின்றி நுகரக் கூடியதாகவும் அமையும். மொத்தத்தில் வீட்டில் தோட்டம் இருப்பது குடும்ப அங்கத்தவரின் ஆரோக்கியத்துக்கு அரணாகவே அமையும்.

### பல்வேறு நல்லியல்புகள் வளரக் களம்

சிறுவர்களிடத்தே விளையாட்டுக் களில் ஈடுபடுவதன் மூலம் உடலளவில் நல்ல முன்னேற்றம் ஏற்படுவது போன்று வீட்டுத் தோட்ட முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் உடலளவில் மட்டுமன்றி மனதளவிலும் நல்ல முன்னேற்றம் ஏற்படுகிறது.

வீட்டுத் தோட்டத்தை நன்கு திட்டமிட்டு அமைத்துப் பராமரிக்கும் சிறுவர்கள் தம் வாழ்விலும் பல்வேறு செயற்பாடுகளையும் திட்டமிட்டு மேற்கொள்வதற்கான ஆற்றல்களையும் கற்றுக்கொள்கின்றனர். விதைபோட்டு மரங்களை வளர்க்கும் போது அதனுடன் கூடவே தன்னம்பிக்கையும் வளர்கிறது. அந்த மரங்களைப் பேணி வளர்க்கும்போது சாந்தகுணம், நன்றியுணர்வு போன்றனவும் வளர்ச்சியடைகிறது.



### ஆரோக்கியத்துக்கு வீட்டுத் தோட்டம்

அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட நோயாளியின் அறையில் தாவரங்கள் இருந்தால் அவர்கள் விரைவில் குணமடைவார்கள் என்கிறது சன்சாஸ் ஸ்டேட் பல்கலைக் கழக ஆய்வொன்று.

நோய்களை விரட்டி ஆரோக்கியத்தைக் காப்பதில் வீட்டுத் தோட்டத்துக்கு முக்கிய பங்குண்டு. இரத்த அழுத்தம், இதயப்படபடப்பு, சோர்வு, தேவையற்ற சிந்தனைகள், தலைவலி, இருமல், தொண்டைக்கரகரப்பு, மன அழுத்தம், மனச்சோர்வு போன்ற நோய்கள் குணமாக வீட்டுத் தோட்டம் உதவுகிறது. அதிக வெளிச்சத்தைப் பார்த்து சோர்வடைந்த கண்களுக்கும் பச்சை நிறம்புத்துணர்வை அளிக்கக்கூடியதாக அமையும். வீட்டுத்தோட்டத்தில் உள்ள தாவரங்கள் அதிகளவில் ஒட்சிசனை வெளிவிடும். வீட்டில் உள்ளவர்கள் உற்சாகத்துடனும் நோயின்றியும் வாழக்கூடிய நிலமை ஏற்படும். இதேபோல் தாவரங்கள் ஆவியுயிர்ப்பின் மூலம் அதிகளவு ஈரலிப்பை சூழலுக்கு விடுகிறது. இதனால் சூழல் குளிர்ச்சியான விளைவைத் தருவதுடன் வீட்டில் வசிப்பவர்களுக்கு நல்லதொரு ஆரோக்கியமான சூழலையும் இது உருவாக்கித்தரும்.

இன்று நாம் சந்தையில் வாங்கும் விவசாய விளைபொருள்களில் பலவும் விவசாய இரசாயனங்களால் நஞ்சூட்டம் பெற்றவையாக இருக்கும். ஆனால் வீட்டுத் தோட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட விளைவுகள் நஞ்சூட்டம் பெற்றவை என்ற ஐயப்பாடின்றி நுகரக் கூடியதாகவும் அமையும். மொத்தத்தில் வீட்டில் தோட்டம் இருப்பது குடும்ப அங்கத்தவரின் ஆரோக்கியத்துக்கு அரணாகவே அமையும்.

### கல்வியில் ஆர்வத்தை தூண்டும்

மாணவர்கள் கல்வி கற்பது, பரீட்சை எழுதுவது என்று தொடர்ந்தும் அதையே செய்து கொண்டிருக்கும்போது ஒரு விதமான அழுத்தம் ஏற்படுகிறது. வீட்டுத் தோட்டத்தில் சிறிது நேரம் வேலை பார்த்தால் அந்த மன அழுத்தம் நீங்கி உற்சாகம் பிறக்கிறது. இந்த உற்சாகத்துடன் படிக்க ஆரம்பித்தால் நன்றாகக் கற்க முடிவதுடன் படித்த பாடங்கள் மனதில் நிற்கும் ஆற்றலும் அதிகரிக்கிறது.

விடுமுறையென்றால் தொலைக் காட்சி பார்ப்பது, வீடியோகேம் விளையாடுவது, சகபாடிகளுடன் அரட்டை அடிப்பது என்றுதான் பலரும் நினைக்கிறார்கள்.

இதனையும் தாண்டி வீட்டுத்தே முயற்சியில் ஈடுபட்டு சுயமுன்னே றத்துக்கு வழிசமைக்கலாமல்ல ஐக்கிய அமெரிக்காவில் கோ விடுமு என்றால் நே அவானஸ் ப்ரோகிராம் (Net awareness program) எ இளம் த றையினரை ப முயற்சி ஆர்வங்கொள் செய்வார்கள். இதேபோல் நா விடுமு எமது சிறா டுத் தோ முயற்சியில் ஆ கொள்ள து, அவர்கள் வுக்கு வள சேர்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைக்கு வரமளித்த இசைவாணி
# சரஸ்வதி பாக்கியராஜா

கே.எஸ். சிவஞானராஜா

இலங்கையில் அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாகக் கர்நாடக சங்கீதத்தை உருப்படியாகவும், முறையாகவும், தரமாகவும், தாற்பரியமாகவும், தொண்டாகவும் கற்பித்தவர்தான் அமரர் சரஸ்வதி பாக்கியராஜா ஆவார். சிங்கப்பூரில் சரவணமுத்து நித்தியானந்தம் தம்பதிகளுக்கு வரமாகப் பிறந்த இசைவாணியே இலங்கையில் இசைப்பெட்டகமாகத் திகழ்ந்தார். யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக்கல்லூரியில் இசை ஆசிரியராவும், இராமநாதன் நுண்கலைப்பீட விரிவுரையாளராகவும், முதல்வராகவும் பன்னெடுங்காலம் அலங்கரித்துச் சிறப்பித்தவரே சரஸ்வதியாவார்.

**அஞ்சலி**

18.07.2016இல் அமர உலகில் பிரவேசித்த அம்மையாரின் அஞ்சலி நிகழ்வு, அவர் வாழ்ந்து பிரகாசித்த கொக்குவில் இல.145 கே.கே.எஸ். வீதியில் அமைந்த இல்ல மண்டபத்தில் இருதய பூர்வமாக நடைபெற்றது. கலாபூசணம் கே.எஸ். சிவஞானராஜா அவர்களது தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்–

இளைப்பாறிய சங்கீதப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கணபதிப்பிள்ளை, திருமதி அனுசியா பாலச்சந்திரன் குடும்பத்தினர், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் ஞானகாந்தன், முன்னாள் இசைவிரிவுரையாளர் திருமதி தருமபூபதி சிதம்பரநாதன், முன்னாள் சங்கீத ஆசிரிய ஆலோசகர் திருமதி ஞானகுமாரி சிவனேசன், கலாபூசணம் வி.சிவஞானசேகரம், கலாபூசணம் சி.சிவானந்தராஜா, கலாபூசணம் செல்வி தங்கலட்சுமி செல்வத்துரை, முன்னாள் அதிபர் திருமதி சகாதேவன், முன்னாள் ஆசிரியை திருமதி குணபாலசிங்கம், முன்னாள் ஆசிரியை திருமதி யோகம்மா, இசை ஆசிரியை திருமதி தேவராஜா மற்றும் அவரது மாணவர்கள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப்பலரும் கலந்து, உரையாற்றியதோடு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர். திருமதி அனுசியா பாலச்சந்திரன் குடும்பம் முக்கிய பங்காற்றினர்.

**பேறு**

இசைப் பேராசான்களாகிய, முசிரி சுப்பிரமணிய ஐயர், முடிகொண்டான் வெங்கட்ராம ஐயர், பூதலூர் கிருஷ்ண மூர்த்தி, குமாரசுவாமி, இராமலிங்க ஓதுவார் ஆகியோரிடம் முறையாக குரு சிஷ்ய முறையில் இசையைக் கற்றுத் தேறினார். இதன் பிரகாரம் இவரது இசைக்கச்சேரி இலங்கையில் உயிர்பெற்று, மக்களிடையே இசை கற்கவேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இதன் பேறாக நூற்றுக்கும் மேற்பட்ட இசை ஆசிரியர்கள் இப்பொழுதும் பாடசாலையில் பணிபுரிகிறார்கள். பொதுவாக,

சம்பளத்துக்குச் சங்கீதம்
சம்பளத்துக்குச் சமயம்
சம்பளத்துக்குக் கடமை
சம்பளத்துக்கு வாழ்வு என்று

எண்ணுகின்ற இந்தக் காலத்தில் சரஸ்வதி பாக்கியராஜாவின் இசை வாழ்வும், ஆன்மிகப் பணியும், தார்மீகக் கடமையும் எம்மைப்போன்ற ஒருசிலருக்குத் தக்க பாடங்களாக அமைகின்றன. கடின உழைப்பு இவரது தாரக மந்திரம். பாடப்பாட ராகம், மூடமூட ரோகம். இசைக்குப் பயிற்சியே பிரதானம். இதன் பேறாக இவரது குரல் இலங்கை வானொலியிலும், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அத்தனை இசை விழாக்களிலும் ஒலித்துப் பிரபல்யம் பெற்றது.

மகாராஜபுரம் சந்தானம், கல்யாண கிருஷ்ண பாகவதர், முசிரி சுப்பிரமணிய ஐயர், ஐயாக்கண்ணு தேசிகர், இசைப்புலவர் சண்முகரத்தினம், பரம் தில்லைராஜா, ஏ.எஸ். இராமநாதன், நாகேஸ்வரி பிரம்மானந்தா, சத்தியபாமா இராஜலிங்கம், ராம் குமாரசாமி, லயஞான குபேரபூபதி, தெட்சணாமூர்த்தி, நாதஸ்வர சக்கரவர்த்தி, என்.கே. பத்மநாதன், சங்கீத சபை சமூகத்தினர் எனப்பலரும் இவரது இசைப்பணியைப் பாராட்டி ஒரு வெள்ளிவிழாவைக் கொண்டாடியமை வரலாறாகிப் பதிவாகிறது.

**சிறப்பு**

1954 இல் இரசிக இரஞ்சன சபா இசைவிழாவில் முதன்மை இசைக் கச்சேரி முத்திரை பதித்தது.
1963 இல் இலங்கை இசைச்சங்கம் நடத்திய இசைவிழாவில் இவரது இசைக்கச்சேரி வரலாறு படைத்தது.
1968 இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசைவிழாவில் இவரது இசையரங்கு இந்தியாவிலும் புகழ் பரப்பி இலங்கையை வாழவைத்தது.
1970 இல், யாழ்.கலாசேவை மன்றத்தினர் இவரை வெள்ளிவிழா நாயகியாகப் பெருமைப்படுத்தி, வரலாற்றுக்குள் பதிவாக்கினர். ஆயிரம் பிறை கண்ட சரஸ்வதி அம்மா, இலங்கையில் ஆயிரம் இசையரங்குகளைச் சிறப்பித்துள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை ஆய்வுடன் வெளியிட்டுள்ளார். 22 சுருதிகளின் விளக்கமான கட்டுரையே மிகவும் பெறுமதியாக அமைந்துள்ளது எனலாம்.

**அபூர்வம்**

இவரது மனோதர்ம சங்கீதம் இரம்மியமானது. கற்பித்தல் பாணியும், பணியும் லாவண்யமானது. மேடை தர்மம் வசீகரமானது. தமிழ்மொழி உச்சரிப்பு இதமானது. ஹிந்துஸ்தானி சங்கீதம் பரோபகாரமானது. ஆன்மிகவாலாயம் சித்திகரமானது. 2010 இல் இலங்கையில் பாடிய் இசையரங்கு கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு வரமாகிறது. இலண்டனில் 2011, 2012, 2013,2014, 2015இல் இவரது புலமையால் இசை நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டது போன்று இலங்கையிலும் ஆவன செய்யப்பட வேண்டும். யாழ்ப்பாணம் இன்னும் தவம் செய்ய வேண்டி உள்ளது.!!

**யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இசை ஆசிரியராவும், இராமநாதன் நுண்கலைப் பீட விரிவுரையாளராகவும், முதல்வராகவும் பன்னெடுங்காலம் அலங்கரித்துச் சிறப்பித்தவரே சரஸ்வதியாவார்.**

# தள்ளாத வயதிலும் கலைப் பணியாற்றி
## மறைந்த சிவப்பிரகாசம் மாஸ்டர்

து.துசியந்தன்

படைப்பாற்றலின் முதல்முறை எனப்படும் பாறை ஓவியங்களிலிருந்து இன்றைய நவீன ஓவியங்கள் வரை மனிதனுள் மறைந்திருக்கும் கலைஞன் தன்னை காட்சிப்படுத்த முயன்றிருக்கிறான். பாறைகளில் ஆதி மனிதன் பொறித்த அவனது கையடையாளங்கள், இவன் அடையாளத்தைப் பொறிக்க முனைந்த செயல் மட்டுமல்ல, அந்தக் கலை வடிவத்தின் ஊடாகவும் அவன் சொந்த அடையாளத்தைப் பேண முயற்சி செய்துள்ளான். ஓவியம் உள்ளிட்ட எல்லாக் கலைகளுமே தன்னடையாளம் பேணலும் தன்னை வெளிக்காட்டலும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தலும் என்கின்ற மூன்று அம்சங்களையும் உள்ளடக்கியவை.

யாழ்ப்பாணத்தில் ஓவியக்கலைஞர்கள் என்று கருதுமிடத்து பெரும்பாலானவர்கள் சித்திர ஆசிரியர்களாகவும் பகுதி நேரமாக சித்திர பாடக் கற்பித்தலுக்கு புறம்பாக ஓவியம், சிற்பங்களை படைப்பாக்கம் செய்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்த வகைப்பாட்டிலேயே அண்மையில் மறைந்த சிவப்பிரகாசம் மாஸ்டரும் அடங்குகின்றார்.

சிவப்பிரகாசம் மாஸ்டர் என்றவுடன் எமக்கு ஞாபகம் வருவது நல்லூர் கந்தசுவாமி கோயிலின் உட்புறச் சுவர்களில் வரையப்பட்ட ஓவியங்களாகும். இந்த ஓவியங்கள் முருகப் பெருமானது புராணக்கதைச் சம்பவங்களைச் சித்திரிப்பதாக அமைந்துள்ளன.

1928ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதி பிறந்த இவர் யாழ்.மத்திய கல்லூரியில் சித்திர ஆசிரியராகவும் அதன் பின்னர் முறைசாராக் கல்விப் போதனாசிரியராகவும் பதவி வகித்தார். இவர் சிற்பம், ஓவியம், சித்திரக்கலை, கல்வி ஆகிய துறைகளில் அதிக பணியாற்றினார். மன்னர்கள், ஆன்மிகவாதிகள், அரசியல்வாதிகள் உட்பட 60க்கும் மேற்பட்ட முழு உருவச் சிலைகள் இவரால் வடிவமைக்கப்பட்டுள்ளன. நல்லூர் முத்திரைச் சந்தியில் முன்னர் அமைக்கப்பட்டிருந்த சங்கிலியன் சிலை இவருடைய ஆக்கமாகவே காணப்படுகிறது.

யாழ்ப்பாணத்து ஓவிய வரலாற்றில் ஓவியத்துறை சார்ந்த வளர்ச்சிக்குப் பணியாற்றிய பழைமையான நிறுவனங்களுள் வின்சர் ஆட்கிளப், விடுமுறைக்கால ஓவியக்கழகம் என்பன குறிப்பிடத்தக்கதாகும். இவற்றின் செயலிழப்பின் பின்னர் 1982ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் யாழ்ப்பாணத்து நவீன ஓவியர் மாற்குவும் சிவப்பிரகாசம் மாஸ்டரும் இணைந்து ஓவிய வகுப்புக்களை நடத்தத் தொடங்கினார்கள். இந்த ஓவிய வகுப்புகளில் பல பெண் மாணவர்களும் பயிற்சி பெற்றார்கள். இவர்களில் சிலர் சிறந்த பெண் ஓவியர்களாகவும் சிலர் சித்திர ஆசிரியர்களாகவும் திகழ்கின்றனர்.

**ஓவிய வகுப்புகளில் பல பெண் மாணவர்களும் பயிற்சி பெற்றார்கள். இவர்களில் சிலர் சிறந்த பெண் ஓவியர்களாகவும் சிலர் சித்திர ஆசிரியர்களாகவும் திகழ்கின்றனர்.**

1986ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவர்கள் இருவரும் பிரிந்து தனித்தனியாக ஓவிய வகுப்புக்களை நடத்தினர். இந்தக் காலப் பகுதியில் சிவப்பிரகாசம் மாஸ்டர் 'சிவாஜி சித்திரக் கோட்டம்' என்ற நிறுவனத்தை ஸ்தாபித்து அதனூடாக சித்திரம் சிற்பம் தொடர்பான வகுப்புகளை நடத்தினார்.

1998 காலப்பகுதியில் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தின் வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றினார். பிற்பட்ட காலங்களில் நோயால் பீடிக்கப்பட்ட போதும் தள்ளாத வயதிலும் தனது சீடர்களின் உதவியுடன் சிற்பங்களை உருவாக்குவதில் ஈடுபட்டார். அந்தச் சிற்பங்கள் அவ்வளவு நேர்த்தியாக அமையாவிட்டாலும் அந்த முயற்சிகள் பாராட்டத்தக்கதாகும்.

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சித்திரம்)
யாழ்.கல்வி வலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் செய்வோம் வாரீர்!



■ உடுவிலூர்கலா

நேரம் பொன்னானது என்பார்கள் பெண்களில் ஒருசாரார். தமது முன்னேற்றத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறார்கள் ஒரு சாரார் இணையத்திலும், கைப்பேசியிலும், மெகாத் தொடர்களிலும் நேரத்தை வீணாக்குகின்றனர். இன்னும் ஒரு சாரார் எதுவும் செய்ய விரும்பாதவர்களாக ஏதோ பிறந்தோம், வாழ்கிறோம் என்பதுபோல, வெறுமனே வாழ்கிறார்கள் பெண்கள். எப்போதும் பிரயோசனமாக வாழவேண்டும், தமக்குக் கிடைத்த நேரத்தை பயனுள்ளதாக செலவு செய்ய வேண்டும்.

நேரத்தை பயனுள்ளதாக்க எவ்வளவோ செய்யலாம். ஆன்மிக செயற்பாடுகளில் ஈடுபடல், நல்ல கதைப்புத்தகங்கள் வாசித்தல், கற்பனைகளை எழுத்துருவாகக்கல், சுயதொழில் போன்றவற்றில் நேரத்தைச் செலவு செய்யும்போது சிறந்ததொரு அறுவடையைப் பெற முடியும்.

வீட்டிலிருக்கும் பெண்களில் பெரும்பாலானவர்கள் சுயதொழில்களில் ஈடுபட்டுத் தமது பொன் போன்ற நேரத்தை வருவாயைப் பெருக்குவதற்கு பயன்படுத்துகின்றனர். உத்தியோகம் பார்க்கும் பெண்களும்கூட வீட்டு வேலைகளோடு ஏதோவொரு சுயதொழிலை செய்கின்றனர். சுயதொழில் செய்வது கௌரவக் குறைவானதல்ல. சுயதொழில் செய்யும் பெண்கள் படிக்காதவர்களுமல்லர். சுயதொழில் பெண்களை சுயமாய் வாழ வழிசமைக்கிறது. வாழ்வாதாரத்தை மேம்படுத்துகிறது. சிறுவயதில் தந்தையையும், நடுவயதில் கணவனையும் முதிர்வயதில் தனயனையும் எதிர்பார்த்து வாழும் நிலையை மாற்றியமைக்கிறது. அறிவை விருத்தி செய்கிறது. மனதிருப்தியை ஏற்படுத்துகிறது.

இன்று சுயதொழிலில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களே! தும்புசார் உற்பத்தி, பனைசார் உற்பத்தி, தையல், கேக் ஐசிங், அழகுக்கலை, பற்றிக்சாயமிடல், கழிவுப் பொருள்களில் பயனுள்ள உருவாக்கம், கடதாசி வேலை, சிற்றுண்டிகள் தயாரித்தல், வீட்டுத் தோட்டம் அமைத்தல், ஆபரண வேலை, ஸ்கிறின் பிரிண்டிங், காளான் வளர்த்தல், அழகிய மலர் அலங்காரம், கடதாசி மடிப்புவேலை, வாழைநார் உற்பத்தி, தும்புசார்உற்பத்தி, றெஜிபோம் வேலை, மொழுகுவர்த்தி வேலை என பல வேலைகளைப் பெண்கள் திறம்படச் செய்து வருவாயை ஈட்டுகின்றனர். சுயதொழில் பெண்களுக்கு கட்டாயமான ஒன்று.

நேரத்தை வீணடித்து, அடுத்த வீட்டுப் பெண்களோடு கூடியிருந்து வம்பளப்பதையும், கைப்பேசிகளில் காசை நிரப்பி வீண் உரையடல்களில் நேரத்தை காவு கொள்வதையும் விடுத்து வீட்டு வேலைகள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் பயனுள்ள சுயதொழிலை மேற்கொள்வதன் மூலம், பெண்கள் பெருமையாக வாழலாம். சுயதொழிலாளர்களை ஊக்குவிக்க, பிரதேச செயலகங்களில் பலதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிலின் தன்மைக்கேற்ப கடனுதவிகளும் வழங்கப்படுகின்றன. அத்தோடு மாவட்டச்செயலகம், சிறு தொழில் முயற்சிப்பிரிவு, கைப்பணிச் சங்கம், புனர்வாழ்வு அதிகாரசபை போன்ற அமைப்புக்களும் சில ஒன்று கூடல்களூடாக சுயதொழிலாளரை ஊக்குவிக்கின்றன.

வாழ்வில் ஏற்பட்ட அதிரடித் திருப்பங்கள் பெண்களை மனதளவில் கொன்று போட்டுள்ளது. நாம் எம்முன் கண்ணீரோடு நிற்கும் பெருந்தொகையான பெண்களை அறிவோம். வாழ்க்கைத் துணையை இழந்த பெண்கள், வருமானம் போதாத பெண்கள், சுயதொழில் மூலமே வாழ்க்கையை நடத்துகின்றனர். விதவைப் பெண்கள் பலரை சுயதொழில் தலைமைத்துவத்தை ஏற்கும் பலத்தை அளித்துள்ளது. வன்னியில் சுயதொழிலை நம்பி வாழும் குடும்பங்களே அதிகம். நம்மத்தியிலும் வருமானம் குறைவான குடும்பங்களும், குடிகாரக் கணவனைக் கொண்ட குடும்பங்களும், உழைக்க விரும்பாத சோம்பேறிக் கணவன்மாரைக் கொண்ட குடும்பங்களும்கூட, பெண்களின் சுயதொழிலில் வாழ்வதைக் காணமுடிகிறது. சுயதொழிலில் நம்பிக்கையோடு சேலையை வரிந்து கட்டிக் கொண்டு, வாழ்வில் எதிர்நீச்சல் போடும் சுய தொழில் புரியும் பெண்களின் சாதனை மகத்துவமானது.



ஆக பெண்களே! எம்முன் இருக்கும் நேரத்தை காரணமின்றி வீணாக்காதீர்கள், கடிகாரத்தின் முட்கள் எவருக்காகவும் ஒருவினாடி கூட தரித்து நிற்பதில்லை. கடிகாரத்தின் விசையை பெண்களும் பெற்றுக்கொண்டுவாழப் பழகிக்கொள்ள வேண்டும். வீட்டில் இருந்தவாறு பல நல்ல செயல்களை செய்து பெருமையாய் வாழலாம். எமது தேவைகளை அடுத்தவர் கரங்களில் ஒப்படைத்து காத்திருப்பதை விடுத்து, நாமே சுயதொழில்களைக் கற்று, சுயமாய் வாழவேண்டும். இன்றே சுயதொழிலுக்கான தேடலை ஆரம்பியுங்கள். நேர்கொண்ட சிந்தனையுடன் சுயதொழிலில் உறுதியுடன் செயற்படுங்கள். நீங்களும் சாதனையாளரே!



எமது தேவைகளை அடுத்தவர் கரங்களில் ஒப்படைத்து காத்திருப்பதை விடுத்து. நாமே சுய தொழில்களைக் கற்று. சுயமாய் வாழவேண்டும். நேரத்தை வீணடித்து அடுத்த வீட்டுப் பெண் களோடு கூடியிருந்து வம்பளப்பதையும். கைப் பேசிகளில் காசை நிரப்பி வீண் உரையடல்களில் நேரத்தை காவு கொள்வதையும் விடுத்து வீட்டு வேலைகள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் பயனுள்ள சுயதொழிலை மேற்கொள்வதன் மூலம். பெண்கள் பெருமையாக வாழலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரே பாதுகாப்பு வழங்க வேண்டும்

உடுவிலூர் கலா.

பெண்களுக்கெதிரான வன்முறைகள் என்ற நோக்கில் ஆண்களைக் குறை சொல்கிறோம். ஆண்கள் யாருமே தீயவர்களா? ஆணினத்தின் இன்றைய கேள்வி. ஆண்கள் யாவருமே தப்பானவர்கள் அல்லர். குறிப்பிட்ட ஆண்களால் குடும்பத்திலும், பணியிடங்களிலும், சமுதாயத்திலும் சிறிய அளவிலான வன்முறைகள் தொடங்கி மிகக் கொடூரமான வன்முறைகள் வரை இடம்பெறுகின்றன. ஆண்களைக் குறை கூறுவதே எமது நோக்கமல்ல. ஆனால் பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஆண்களாலும், பெண்களாலும் இடம்பெறுகின்ற போதும் பாலியல் வன்புணர்வு, வன்கொடுமை என்பன ஆண்களாலேயே அரங்கேறுகின்றன. பாலியல் வன்புணர்வு ஒன்று இடம்பெறும் போது பெண் பல தாக்கங்களுக்கு ஆளாகின்றாள். பலவீனமடைகின்றாள். அவளது அழகு அலங்கோலமாகிறது. மென்மை கடினமடைகின்றது. உடலாலும், உள்ளத்தாலும் தாக்கமடைந்து மரணத்தை கூடத் தழுவும் நிலை ஏற்படுகிறது. இந்த நிலையில் ஆண்களைக் குறைகூறுவது தவறா? இது மட்டுமா ? பல ஆண்கள் கூட்டிணைந்து கூட்டுவன்புணர்வு வேறு. வித்தியாவின் கூட்டு வன்புணர்வு ஒரு கொடூரம். அதன் பின் வேறொரு கூட்டுவன்புணர்வு. தற்போது பிக்கு, பெண் உட்பட பன்னிரண்டு பேர் பன்னிரண்டு வயதுச் சிறுமியை கூட்டு வன்புணர்வில் கைகோர்த்ததாக சந்தேகிக்கப்படுகின்றனர். 9பேர் வெவ்வேறு இடங்களில் இந்தச் சிறுமியை வன்புணர்வு செய்தபின்னர் கூட்டாக வன்புணர்வு செய்து விட்டு வீதியில் வீசிய நிலையில் பௌத்தவிகாரைக்குச் சிறுமி சென்றுள்ளார். அன்பையும், நீதியையும், சமத்துவத்தையும் போதிக்கும் பிக்குவும் விகாரையில் வைத்து அவளை வன்புணர்வு செய்துள்ளார். இது பௌத்த விகாரை சொல்லும் பால்நிலை சமத்துவம் அல்லவா?

பதின்மூன்று வயதுச்சிறுமியை ஐந்து ஆண்கள் அக்குரஸ்ஸ என்ற இடத்தில் வைத்து வன்புணர்வு செய்துள்ளனர். இதற்கு ஒரு பெண்ணும் உடந்தையாக இருந்துள்ளார். எமது நாட்டு நீதி எவ்வளவு மனிதாபிமானம் நிறைந்தது? ஆண்கள் வன்புணர்வு செய்யவென்றே பிறந்தவர்களா? என்பது இன்றைய கேள்வி. அன்பு தான் இன்பஜோதி, அன்பு தான் இன்ப ஊற்று, அன்பு தான் உலகமகா சக்தி என்கிறது புத்த தத்துவம். புத்தபிரானைத் தெய்வமாகப் பூஜிக்கும் விகாரையில் நீதி கேட்ட சிறுமி பிக்குவால் வன்புணரப்பட்டால், விகாரைகள் எதற்கு? தமிழர் இடங்களில் ஆங்காங்கு முளைத்து நிற்கும் விகாரைகள் புனிதம் காக்குமா? புத்த தத்துவம் வாழுமா?

சிறுமிகள் வன்புணர்வுக்கு சில பெண்கள் உடந்தையாகிறார்கள். இவர்கள் பெண்களா? அல்லது பெண் வடிவில் பேய்களா? பெண்களாகப்பிறந்து வன்புணர்வுக்குத் துணை போகும் இந்த இழிநிலையான பெண்களுக்கு சாவுத் தண்டனை வழங்கப்பட வேண்டும். கொஞ்சமேனும் இரக்கம் கொள்ளாப் பெண்கள் தங்கள் பெண்மைக்குச் சாவு மணி அடிக்கும் கொலைகாரிகள். இவர்களால் பெண்ணினத்துக்கே அவமானம். இவர்கள் வயிற்றில் கருவறை இல்லையா? இல்லை குழந்தைப் பாக்கியமே கிடைக்காதவர்களா? எப்படி இவர்களால் பெண்சிறுமிகளை வன்புணர்வுக்கு உட்படுத்த துணை நிற்க முடிகிறது? வன்புணர்வு செய்யும் ஆண்களைவிட துணை போகின்ற பெண்களுக்கே முதலில் தண்டனை வழங்க வேண்டும்..

பெண்களுக்கான பாதுகாப்புக்குக் குரல் கொடுக்கிறோம். அப்பாவிச் சிறுமிகளின் உயிரைப் பாதுகாக்க அல்லல் படுகிறோம். பெண்களே சிறுமிகளின் உயிருக்கு உலை வைக்கிறார்கள். இது போன்ற பல ஈனச்செயல்கள் பெண்களால் நெறியாள்கை செய்யப்படுகின்றன. அவை வெளிச்சத்துக்கு வராமல் பாதுகாக்கப்படுகின்றன. பெண்களுக்கான வன்முறையில் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் பல கோணங்களில் காரணமாகின்றனர். அப்பாவிச் சிறுமிகளின் வாழ்வைப் பாதிக்கக் காரணமாகும் துர்நடத்தையான பெண்களால் பெண்ணியம் களங்கப்படுகிறது. யாரை யார் பாதுகாப்பது? யாரை நம்புவது? எமது சிறுமிகளின் உலகம் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் உள்ளது என்பதை ஒவ்வொரு பெற்றோரும் உணரவேண்டும். ஆண்களை மட்டுமல்ல, பெண்களையும் நம்பக்கூடாது. எமது பெண்களுக்கு சிறுமிகளுக்கான பாதுகாப்பு என்பது பெற்றோரே அதுவும் தாய் தான் முதல்தர பாதுகாவல். இன்றைய களநிலையானது பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் பாதுகாப்பற்றது ஆகிவிட்டது. நன்மை தீமை அறியாத சிறுமிகள்பாலியலில் துவண்டு சாகும்நிலையில் இருந்து மீட்படைய பெற்றோரே உங்கள் பெண்பிள்ளைகள், சிறுமிகளை பாதுகாத்து அன்பாய் அணையுங்கள். பாலியல் சம்பந்தமான கருத்துக்களை தெளிவுபட எடுத்துரையுங்கள். தொடுகைகள், பார்வைகளில் இருந்து விலகிவாழ சொல்லிக் கொடுங்கள். வெளியே செல்லும் பிள்ளைகளோடு கூடச்செல்லுங்கள். இயலாத வேளையிலும் கூட அடுத்தவர் பாதுகாப்பில் ஒப்படைப்பதைத் தவிருங்கள். பாதுகாப்பற்ற பிரத்தியேக வகுப்புக்களை நிறுத்தி உங்கள் பார்வையில் கல்வியைக் கொடுங்கள். வெளியே சென்று வரும் பிள்ளையின் உடலை, முகபாவனையைக் கவனியுங்கள். சொல்லும் வார்த்தைக்குச் செவிமடுங்கள்.

பாலியல் வன்முறை என்பது எப்போது அற்றுப்போகும் என்பது புரியாத புதிரே. நாம் எமது பெண்பிள்ளைகள், சிறுமிகளைப் பாதுகாத்துக் கொண்டால் போதுமானது. சாவித்திரியால் விழித்திருந்து சத்தியவானைக் காப்பாற்ற முடிந்தது போல் நாமும் விழிப்பாயிருந்து வன்புணர்வு, வன்முறைகளை இல்லாதொழிக்க வேண்டும். பச்சைக் குழந்தைகளை குறிவைத்தே வன்புணர்வு வேட்டை தொடர்கிறது. நாமும் அதனை நன்குணர்ந்தவர்களாக நம் சிறுமிகளை, பெண்களை பாதுகாக்க விழிப்பாயிருப்போமாக

பெண்களுக்கான பாதுகாப்புக்குக் குரல் கொடுக்கிறோம். அப்பாவிச் சிறுமிகளின் உயிரைப் பாதுகாக்க அல்லல் படுகிறோம். பெண்களே சிறுமிகளின் உயிருக்கு உலை வைக்கிறார்கள். இது போன்ற பல ஈனச்செயல்கள் பெண்களால் நெறியாள்கை செய்யப்படுகின்றன. அவை வெளிச்சத்துக்கு வராமல் பாதுகாக்கப் படுகின்றன. பெண்களுக்கான வன்முறையில் ஆண்கள் மட்டு மல்ல, பெண்களும் பல கோணங்களில் காரணமாகின்றனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இது புதுசு





பதின்ம வயது சிறுவர்களுக்கான சேர்ட் அறிமுகமாகியுள்ளது. பலவித வர்ணங்களில் உரு வாக்கப்பட்டுள்ளது. இவை 850 ரூபாவிலிருந்து 950 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 150 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 800 | 800 | 600 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 700 | – | – |
| சீலா | 300 | 600 | 400 | 600 | 500 | – | 400 |
| விளை | 650 | 500 | 400 | 600 | 400 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 400 | 200 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | 200 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 200 | – | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 300 | – | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | – | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 300 | – | 200 |
| மதனம் | 150 | 200 | 180 | 400 | 300 | – | 350 |
| கொய் | 100 | 200 | 60 | 70 | 100 | – | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | – | – |



# சில்லுக்களி

**தேவையான பொருள்கள்**
**வறுத்த உளுத்தம் மா - ½ சுண்டு**
**சிவப்பு அரிசி மா - 1 சுண்டு.**
**வறுத்த பயறு - ¼ சுண்டு.**
**தேங்காய்ப் பால் - ½ லீற்றர்.**
**சீனி - 250 கிராம்**
**உப்பு - தேவையான அளவு**

## செய்முறை

ஒரு பாத்திரத்தில் உளுத்தம் மா, அரிசி மா, 50கிராம் சீனி, அளவான உப்பு சேர்த்து கலந்து இளஞ்சூடான நீரில் பிட்டு மா பதத்துக்குக் குழைக்கவும். பின்பு அதை சுண்டங்காயளவு சிறு சிறு உருண்டைகளாக உள்ளங்கையில் வைத்து உருட்டி விரலால் சிப்பி போன்று அழுத்தி விடவும். (விரும்பினால் சின்ன சின்ன உருண்டைகளாகவும் விடலாம்) அதன் பின் அவற்றை நீராவியில் அவித்து எடுக்கவும்.

மீண்டும் ஒரு பாத்திரத்தில் பயறைப் போட்டு அளவான நீர் விட்டு கொதிக்க அவிக்கவும். அதில் அரை லீற்றர் பாலையும் ஊற்றி, 200 கிராம் சீனியையும் போட்டு நன்றாகக் கொதிக்க விடவும். கொதித்ததும் அவித்து வைத்த சில்லுகளைப் போட்டு அதனுள் இட்டு சிறிது நேரம் அடுப்பில் வைத்து பதம் பார்த்து இறக்கி சூடாகப் பரிமாறவும்.

# நாளை

ஆடி-20
வியாழக்கிழமை
04.08.2016
திதி: துதியை
பி.இ.02.59 வரை
நட்சத்திரம்: மகம்
பி.இ.04.41 வரை
ராகுகாலம்:
01.34-03.04 வரை
சுபநேரம்:
07.34-09.04 வரை




# பாட்டி வைத்தியம்

- சர்க்கரை நோய்க்கு தினமும் காலையில் வெறும் வயிற்றில் சிறிது வெந்தயத்தை வாயில் போட்டு விழுங்க வேண்டும். சர்க்கரை நோய்க்கு முருங்கை கீரை கண் கண்ட மருந்து, பாகற்காயை கழுவி, வட்டவட்டமாக நறுக்கி விதையை நீக்கி, நிழலில் காய வைத்து, மிக்ஸியில் அடித்து பொடியாக்கி போத்தலில் அடைத்து வைத்துக் கொண்டு தினமும் 1 தேக்கரண்டி சாப்பிட்டால் குணமாகும். குறிஞ்சாக் கீரையும் சர்க்கரை நோய்க்கு நல்ல மருந்தாகும்.
- மாங்கொட்டையின் பருப்பை உலர்த்தி, நன்றாகப் பொடி செய்து, தேன் சேர்த்து சாப்பிட்டு வந்தால், வயிற்றிலுள்ள நாக்குப் பூச்சிகள் மலத்துடன் வெளி வந்து விடும். மூல நோயும் குணமாகும். மாதவிடாய் அதிகமாக போவதும் நின்றுவிடும். கொசுக்களை விரட்ட மாம் பூக்களைப் பொடி செய்து, சாம்பிராணி போல புகைபோட்டால் கொசுக்கள் ஓடி விடும்.
- இஞ்சியை கற்கண்டுடன் சேர்த்துச் சாப்பிடுவதால் சர்க்கரை நோய் கட்டுப்படும். இஞ்சிச் சாற்றையும் வெங்காயச் சாற்றையும் சமமாகக் கலந்து குடித்தால் வாந்தி நிற்கும். அஜீரணத்துக் இஞ்சிச் சாற்றை தொப்புளைச் சுற்றித் தடவலாம்.
- கொத்தமல்லித் தழையை அரைத்து சர்க்கரை போட்டு, பால் சேர்த்து தினம் 100 கிராம் சாப்பிட மன நோய் நீங்கும். மல்லி நீரால் கண்களைக் கழுவ கண்



கள் பளிச்சிடும். தாகத்தைத் தணிக்கும். பல் வலி, ஈறு வீக்கம் ஆகியவை கட்டுப்படும். இதன் விதை எண்ணெய் சுளுக்கு நீக்கியாகப் பயன்படும்.
- உள்ளி சேர்த்து எந்த வகை உணவு சாப்பிட்டாலும் வாயுத் தொல்லை, வயிற்று உப்புசம் குறையும். இதனை தேங்காய் எண்ணெய் விட்டு காய்ச்சி, அதைத் தேய்த்தால் வாத வலி போகும். உள்ளித் தழையை உப்பிட்டு அரைத்து சாற்றைப் பிழிந்து சுளுக்குக்குத் தடவ, சுளுக்கு விட்டுப் போகும்.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 50 | 80 | 50 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 140 | 100 | 140 | 100 | 120 | 80 | 90 | 80 |
| கரட் | 200 | 160 | 240 | 100 | 160 | 180 | 110 | 100 |
| மரவள்ளி | 120 | 90 | 80 | 80 | 100 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 250 | 180 | 200 | 250 | 260 | 140 | 200 | 100 |
| பாகல் | 350 | 220 | 325–400 | 300 | 320 | 160 | 240 | 200 |
| கருணைக்கிழங்கு | 150 | 120 | 200 | 130 | 140 | – | 75 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 100 | 80 | 90 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 50–100 | 70 | 90 | 100 | 90 | 70 |
| பூசணி | 70 | 80 | 120 | 80 | 100 | 100 | 70 | 100 |
| தக்காளி | 200 | 100 | 200 | 100 | 80–100 | 150 | 120 | 70 |
| வாழைக்காய் | 120 | 120 | 120 | 100 | 100 | 80 | 70 | 50 |
| கீரை | 30 | 20 | 40 | 25 | 30 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 400 | 600 | 300 | 600 | 600 | 400 | 400 |
| புடோல் | 80 | 80 | 80 | 50 | 80 | 80 | 70 | 60 |
| கோவா | 150 | 40 | 140 | 150 | 140 | 80 | 90 | 120 |
| வெண்டி | 80 | 60 | 80 | 40 | 100 | 80 | 70 | 30 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 130 | 220 | 160 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 100 | 200 | 90 | 120 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 25–30 | 30 | 40 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 80 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 140 | 160 | 100 | 120 | 200 | 120 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 300 | 200 | 320 | 200 | 200 | 200 | 200 | 170 |
| இராசவள்ளி | 160 | – | – | 250 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 300 | 150 | 120 | 150 | 100–120 | 400 | 200 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சூழ்நிலை உணர்ந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். வாகனப் போக்குவரத்தில் மிதவேகம் நல்லது.

**இடபம்:** மனதில் இருந்த கவலை நீங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவர். உறவினர் வருகையால், மகிழ்ச்சி காண்பீர்கள்.

**மிதுனம்:** பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில், முதலீடு அதிகம் தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும். விசப் பிராணிகளிடம் விலகி இருப்பது நல்லது.

**கடகம்:** உழைப்பிற்கான நன்மை தேடி வரும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் திருப்திகரமாக இருக்கும். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர். உறவினர் இல்ல, சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**சிங்கம்:** தேவையற்ற விவாதங்களில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில், வருமானம் சராசரி அளவில் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். கண்களின் பாதுகாப்பில் மிகுந்த கவனம் தேவை.

**கன்னி:** நண்பருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். குடும்பத்தில், சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர்.

**துலாம்:** உறவினர்களின் அன்பும் பாசமும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், அபிவிருத்தி பணியில் ஈடுபடுவீர்கள். தாராள பண வரவு கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு இனிதாக நிறைவேறும்.

**விருச்சிகம்:** மனதில் நம்பிக்கை அதிகரிக்கும். பகைவரால் உருவான கெடுசெயல் பலமிழக்கும். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சியால் இலாபம் உயரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:** செயல் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாரான அளவில் இருக்கும். பெண்களுக்கு, செலவிற்கான பணத்தேவை அதிகரிக்கும். தெய்வ வழிபாடு மன அமைதியைத் தரும்.

**மகரம்:** பேச்சில் அன்பும், பண்பும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேறும். ஆதாயம் உயரும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். விலகிய சொந்தம், உறவினர் பாராட்டுவர்.

**கும்பம்:** எதிர்மறையாகச் செயற்பட்டவர் இடம் மாறிப் போவர். தொழில், வியாபாரத்தில், சாதனை இலக்கை அடைவீர்கள். இலாபம் கூடும். ஆரோக்கியம் பலம் பெறும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மீனம்:** உறவினர்கள் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில், பிரச்சினை குறுக்கிடலாம். இலாபம் சுமார். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். அரசு விடயத்தில் அனுகூலம் கிடைப்பதில் தாமதம் உண்டாகும்.

## அந்தரங்க செல்போன் படங்களால் வரும் ஆபத்தை சொல்லும் படம்



புதுமுகங்கள் இணைந்து உருவாக்கி வரும் படம் 'மாற்றான் தோட்டத்து மல்லிகை'. ரவிராகுல், கவின் கார்த்திக், ரீனாராய், நிஷா, ஆரிஷா நடிக்கிறார்கள். ரமேஷ் ஒளிப்பதிவு செய்கிறார். ராஜ்பாஸ்கர் இசை அமைக்கிறார் 'கள்ளச்சாவி' படத்தை இயக்கிய ராஜேஷ்வரன் இயக்குகிறார். இது செல்போனில் அந்தரங்கத்தை படம் எடுத்து, அதனால் சிக்கி சின்னாபின்னமாகிறவர்கள் பற்றிய கதையாம். இதைப் பற்றி இயக்குனர் ராஜேஷ்வரன் கூறியதாவது: "டிஜிட்டல் புரட்சியில் முக்கியமான வரவு வீடியோ கமரா அமைந்த ஆண்ட்ராய்டு செல்போன்கள் மற்றும் சிறிய வகை கையடக்க கேமராக்கள், காதலியுடனோ அல்லது மனைவியுடனோ அந்தரங்கமாக இருப்பவர்கள் அதை படம்பிடித்து வைத்துக்கொண்டு பின்வரும் நாள்களில் அதை பார்த்து ரசிக்க ஆசைப்படுகிறார்கள். சில நேரங்களில் அந்த செல்போன் தவறுதலாக காணாமல் போனாலோ அல்லது பழுது பார்க்க தரும்போது அந்த வீடியோ காட்சியை காணும் நபர்கள் தான் பார்த்து ரசிப்பதோடு நண்பர்களுக்கும் அனுப்புவது, இணையதளங்களில் பரப்பி விடுவது எனச் செயற்படுவதினால் இதில் இருப்பவர்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறார்கள், சமுதாயத்தில் அவமதிப்புக்குள்ளாகிறார்கள். சமீப காலங்களில் இதனால் சில தற்கொலைகளும், கொலைகளும் நடந்திருக்கின்றன. இது போன்ற செயற்பாடுகள் தவறு என்று வலியுறுத்தும் விதமாக தயாராகியுள்ள படம்" என்கிறார் இயக்குநர் ராஜேஷ்வரன்




கடவுள் எப்போ டென்சன் ஆவார் தெரியுமா? கல்யாணம் பண்ணாமலே ஒரு பொண்ணு கர்ப்பம் ஆகிற பொழுது. அவங்க அம்மா அடக் கடவுளே. இப்படி பண்ணிட்டியே என்று சொல்வாங்க பாருங்க. அப்பதான் டென்சன் ஆவாராம்...?




## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | | 5 | | |
| | 5 | | 6 | 9 | 2 | | 1 | |
| 9 | | | | | | | | 6 |
| 4 | | | 9 | | 5 | | | 2 |
| | | 5 | | 6 | | 9 | | |
| 7 | | | 1 | | 4 | | | 3 |
| 1 | | | | | | | | 5 |
| | 2 | | 3 | 1 | 7 | | 6 | |
| | | 6 | | | | 7 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 6 | 4 | 7 | 3 | 2 | 1 | 8 |
| 4 | 1 | 3 | 2 | 9 | 8 | 6 | 7 | 5 |
| 7 | 8 | 2 | 5 | 1 | 6 | 4 | 9 | 3 |
| 9 | 2 | 5 | 7 | 8 | 1 | 3 | 6 | 4 |
| 6 | 7 | 8 | 3 | 4 | 9 | 5 | 2 | 1 |
| 1 | 3 | 4 | 6 | 2 | 5 | 7 | 8 | 9 |
| 8 | 4 | 7 | 9 | 5 | 2 | 1 | 3 | 6 |
| 2 | 6 | 9 | 1 | 3 | 4 | 8 | 5 | 7 |
| 3 | 5 | 1 | 8 | 6 | 7 | 9 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.







வி.தமிழ் சுகி

இதயத்தில் மோதி மோதி களைந்து போகட்டும் சலனம். கண்ணீர் துளிகளாக உருமாறி எவர் கேள்விக்கும் விதையாகாமல் போனாலே பெரும் பயன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்

அகழ்வுப் பணிகளைத் தொடர முடியாதநிலை ஏற்பட்டது.
மன்னார் நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இரண்டாவது நாளாகவும் நேற்றுக் காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை அகழ்வுப் பணி இடம்பெற்றது. இரண்டு நாள் களில் குறித்த கிணறு 100 சென்றி மீற்றர் வரை அகழப்பட்டது. முள்ளுக்கம்பி துண்டுகள், கற்களும் மீட்கப்பட்டன.
முற்பகல் 11 மணியளவில் அகழ்வு நிறுத்தப்பட்டு பிற்பகல் 2 மணியளவில் அகழ்வு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அதன் போது ஜே.சி.பி பெக்கோ இயந்திரம் மூலமாக அகழ்வு மேற்கொள்ளப்பட்டது. தோண்டத் தோண்ட நீர் பெருக்கெடுக்கத் தொடங்கியது. சுமார் 12.8 அடி வரை ஜே.சி.பி பெக்கோ இயந்திரம் மூலமாகக் அகழ்வு மேற்கொள்ளப்பட்டது. மாலை 5.35 மணியளவில் அகழ்வு நிறுத்தப்பட்டது.
மன்னார் நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் மாவட்ட சிரேஷ்ட சட்ட வைத்திய அதிகாரி எஸ். ராஜபக்ச தலைமையில் இடம்பெற்று வரும் அகழ்வின் போது அழைக்கப்பட்ட 13 அரச திணைக்களங்களின் அதிகாரிகளும் முன்னிலையாகியிருந்தனர்.
மேலும் காணாமற்போனோரின் உறவுகள் சார்பாக சட்டத்தரணிகளான வி.எஸ். நிறைஞ்சன் மற்றும் ரனித்தா ஞானராஜா ஆகியோர் கிணறு தோண்டும் இடத்தில் பிரசன்னமாகி இருந்தனர். இன்று காலை 8.30 மணிக்கு அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகும். கிணற்றைச் சூழ்ந்த பகுதிகளில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.
இந்தப் பகுதியில் வீதி அகலிப்பின்போது மனித புதைகுழி இருந்தமை கண்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் 80 இற்கும் மேற்பட்ட எலும்பக்கூடுகள் மீட்கப்பட்டன. அதற்கு அருகில் உள்ள கிணறு தொடர்பிலும் சுட்டிக் காட்டப்பட்டு, அதனுள்ளும் மனித சடலங்கள் போட்டு மூடப்பட்டதாகச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. இதனால் அதனைச் சோதனை செய்ய நீதிமன்று அனுமதி வழங்கியது. அதன்படி நேற்று முன்தினம் சோதனை ஆரம்பிக்கப்பட்டு 2 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன.
(வ-4,56)

## யாழ்.பல்கலை

இந்தச் சந்திப்பு நாளை வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற இருக்கின்றது.
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கடந்த 16ஆம் திகதி இடம் பெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தின் சில பீடங்கள் தற்போதுவரை இயங்காதுள்ளன. குறிப்பாக விஞ்ஞானபீடம் இதுவரை மீள ஆரம்பிக்காது கடந்த 17 நாள்களாக மூடப்பட்டுள்ளது.
எனவே இவ்வாறு மூடப்பட்டுள்ள பீடங்களை மீள ஆரம்பிக்கும் நோக்கில் மேற்கொள்ள வேண்டிய வழிவகைகள் தொடர்பில் ஆராய்வதற்காகவே இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர். குறித்த சந்திப்புக்காக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயும் அழைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (வ-101)

## போராளிகளுக்கு

கருத்தறியும் செயலணியிடம் தெரிவித்தார். இவர்கள் தொடர்பில் பன்னாட்டுத் தரத்திலான ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்று கூட்டமைப்பு தரப்பில் கோரிக்கை விடுக்கப்படுகிறது. இது விடயத்தில் அரசின் நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.
இதற்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித, இந்த விவகாரம் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டால் உரிய வகையில் விசாரணையை நடத்தலாம். பன்னாட்டுச் சமூகத்தைவிட இலங்கையில் சிறந்த மருத்துவக் கட்டமைப்பு இருக்கின்றது. சிறந்த வகையில் இங்கு ஆய்வுகளை நடத்தலாம் - என்றார்.
இதன்பின்னர் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர, இராணுவத்தினர் மிருகத்துக் குகூட விச ஊசி ஏற்றவில்லை. இந்த நிலையில், மனிதர்களுக்கு எப்படி ஏற்றுவார்கள். மேற்படி குற்றச்சாட்டை அடியோடு நிராகரிக்கின்றோம். நல்லிணக்க முயற்சியை விரும்பாத குழு வொன்றே இவ்வாறு செயற்பட்டு வருகிறது - என்றார்.
(வ-5)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி தவமணி



அரியாலையைப் பிறப்பிடமாகவும், அல்வாயையும் காங்கேசன்துறை, மாம்பிராய் வீதியையும் வதிவிடங்களாகக் கொண்டு தற்போது நாயன்மார்கட்டு ஆஸ்பத்திரி முன் ஒழுங்கையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி தவமணி 01.08.2016 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தவமணியின் அன்பு மனைவியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

41/61, ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை, நாயன்மார்கட்டு.
தகவல்: குடும்பத்தினர்.
(J/3448) (11,18)
021 221 1132

### திருமதி நவமணி இராசையா
(ஓய்வுநிலை ஆசிரியை)



புகையிரத நிலையம் அருகில், மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமணி இராசையா (ஓய்வுநிலை ஆசிரியை) நேற்று (02.08.2016) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.
அன்னார் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி - நாகம்மா தம்பதிகளின் மருமகளும், இராசையாவின் (இளைப்பாறிய பொலிஸ் திணைக்கள எழுது வினைஞர்) அன்பு மனைவியும், இராஜினி (சுவிஸ்), அருள்ராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயபிரகாஸ் (சுவிஸ்), சர்மிளா ஆகியோரின் மாமியாரும், சிவஞானம்பிள்ளை (இளைப்பாறிய தொலைத்தொடர்பு பொறியியலாளர் - கனடா), காலஞ்சென்ற ஜெயமணி சிவராம் (இளைப்பாறிய ஆசிரியர் - கனடா), கந்தவனம் (இளைப்பாறிய Superintendent Cardiology), சிங்காரநாதன் (இளைப்பாறிய தொலைத்தொடர்பு பொறியியலாளர்), யோகமணி (இளைப்பாறிய அளவெட்டி கிராமிய வங்கி முகாமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபிமன்யு, நிசாந்தினி, அகல்யா, கமலினி, அஸ்வினி, அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2016) புதன்கிழமை ஆனைக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காலை 9 மணியளவில் தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்கோட்டை.
தகவல்: கணவர், பிள்ளைகள்.
(J/3446) (11,18)
021 225 5076

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை பூபாலபிள்ளை
(ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் - கச்சேரி)



மீசாலையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பூபாலபிள்ளை நேற்று (02.08.2016) செவ்வாய்க் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கெங்காதரா (கனடா), சந்திரகுமாரி (ஆசிரியை- மந்துவில் ஆர்.சி), காலஞ்சென்ற பாக்கியகுமாரி, மதனகுமாரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவகி (கனடா), சிவசுப்பிரமணியம் (ஓய்வுநிலை ஆசிரியர்- சென்ஜோன்ஸ் கல்லூரி), சண்முகலிங்கம் (ஸ்ரீ - கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தரண்யா, கௌதம், ஆதித்தியா, கோபிசுபானன், நிசாந், சங்கரன், சிவகாமி, விஷாலி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கையைபிள்ளை, சபாபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2016) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயா கடையடி, மீசாலை.
(C/101) (11,18)
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி சிவானந்தம்மா சிவகுரு

பிறப்பு 20 . 05 . 1937



இறப்பு 30 . 07 . 2016

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவானந்தம்மா சிவகுரு நேற்று (30.07.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் சிவகுருவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - செல்லம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, யோகலிங்கம் மற்றும் பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நித்தியானந்தராசா (கனடா), காலஞ்சென்ற சிவானந்தராசா மற்றும் பாஸ்கரன் (கனடா), முரளிதரன் (கனடா), அன்பரசி ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயலக்சுமி (கனடா), சாந்தநிருஞ்சனா (கனடா), ஜனா (கனடா), மௌனீஸ்வரன் (முகாமைத்துவ உதவியாளர் - வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி) ஆகியோரின் மாமியாரும், பிரசாந்தன் (கனடா), லாவண்யா (கனடா), தர்மிகா (கனடா), பிரணாத் (கனடா), மிருணா (கனடா), விதுஷா (கனடா), ஜெனிபா (கனடா), ஜெசிக்கா (கனடா), ஜெசன் (கனடா), மைட்றேயன் (இந்துக்கல்லூரி - சாவகச்சேரி), சாணுகா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), தக்சிகா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2016) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோயில் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
(J/3390) (11,17,18)
தகவல்: குடும்பத்தினர்.
077 078 2279, 077 660 5350


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**செல்லையா குணபாலசிங்கம்**

(காணி வெளிக்கள போதனாசிரியர்)

மலர்வு 23.09.1956 உதிர்வு 04.07.2016



மன்னகுளத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரம் முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர் சிவபதம் அடைந்த செய்தி அறிந்து நேரடியாக இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், மலர் வளையம், துண்டுப்பிரசுரம், பதாதைகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல் ஊடாகத் துயர் பகிர்ந்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றி நவிலலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (02.08.2016) செவ்வாய்க்கிழமை கீரிமலையில் நடைபெற்று வீட்டுக்கிரியைகள் நாளை (04.08.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தங்கள் குடும்பத்துடன் அனைவரும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முதலாம் வட்டாரம்,
முள்ளியவளை.

(J/3488) (11,17)

குடும்பத்தினர்.

## போதையில் சாரத்தியம்; சாரதி அனுமதிப் பத்திரம் ரத்து

தென்மராட்சி, ஒக.3

மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய சாரதிகள் மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 7ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாரதியொருவரின் சாரதி அனுமதிப் பத்திரத்தை ஆறு மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

சாவகச்சேரிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த பதில் நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டார். காப்புறுதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய சாரதிக்குப் பத்தாயிரம் ரூபா தண்டம் விதித்தார். (ந-9)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை அருந்தவராசா (Goalkeeper)



கல்லுவம், கரணவாய் மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் இல.166, புன்னை நீராவியடி, விஸ்வமடுவைச் சேர்ந்த சின்னத்துரை அருந்தவராசா 31.07.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கல்லுவம், கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கோண்டாவில் வடக்கைச்சேர்ந்த சின்னத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானாம் பிகையின் அன்புக் கணவரும் அகிலன் (ஜேர்மனி), அகிலாம்பிகை (ஜேர்மனி), பிரதீபன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான நேசம்மா, சின்னராசா மற்றும் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற இராசையா, தர்மசீலி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகாம்பிகை, காலஞ்சென்ற யோகாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகந்தினி, சிறிதரன், ராதிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் தமிழ்ஞானா, தமிழ் அருந்தன், தமிழ்நேசா, தமிழ்ராகன், யோமனா, லோமனா, சிறீசா, அகிந்தன், ரதீஸ், ரதீசா, ரகீசா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(04.08.2016) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லுவம்,கரணவாய் மேற்கு,
கரவெட்டி

தகவல்: குடும்பத்தினர்.

077 756 2413, 021 205 6380

## மரண அறிவித்தல்

திருமதி

### சிவபாக்கியம்(சிவா) திருநாவுக்கரசு

தோற்றம் 24 . 05 . 1928



மறைவு 02 . 08 . 2016

தெல்லிப்பழை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் பலாலிவீதி, உரும்பிராய் ஒஸ்காலேனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம்(சிவா) திருநாவுக்கரசு நேற்று (02.08.2016) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசின் அன்பு மனைவியும் கலா, பவானி, உதயன், ராஜன், காலஞ்சென்ற ரவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.08.2016 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுவில் அப்போஸ்தர் சபை மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] வீதி, [illegible]

தகவல்: பிள்ளைகள்
077 [illegible]

## மரண அறிவித்தல்

### திருமதி யோகம்மா தேவராஜா

பிறப்பு 03 . 10 . 1950



இறப்பு 28 . 07 . 2016

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், கேகாலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா தேவராஜா 28.07.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாமுத்து - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தங்கம்மா தம்பதிகளின் மருமகளும், தேவராஜாவின் அன்பு மனைவியும், சுதாமினி (கனடா), சுதர்சினி, சுதர்சன் (ஜேர்மனி),சுபாஸ்கரன் (டுபாய்), சுஜீவன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஈஸ்வரன் (கனடா),கிருஷ்ணதாஸ் (கூட்டுறவுநகர் - உரும்பிராய்ச் சந்தி),ரேகா (ஜேர்மனி),நிஷாந்தி ஆகியோரின் மாமியாரும், ராஜேஸ்வரி, அருந்ததி, இரவீந்திரன் (சுவிஸ்), சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பொன்னையா மற்றும் இரத்தினம், மல்லிகா (சுவிஸ்), சூட்டி (சுவிஸ்), ராஜேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், ஆகாஷ் (கனடா), தனோஜா, டினோஜா, விதுனன், அபிநயா, வினுயா, சுஜித்தா, சாலினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2016) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நீர்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(J/3455) (11,17,18)

தகவல்: ம.தேவராஜா (கணவர்)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ்

பிடித்துக் கொடுத்தவரைக் குத்த முற்பட்டார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அவரது கைப்பையைப் பொலிஸார் சோதனை செய்திருந்தால், அவர் சயனைட் திரவம் வைத்திருந்தமை தெரியவந்திருக்கும் என்றும், அதனைக் குடிக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது என்றும் இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

காணாமற்போனவரை மீட்டுத் தருவதாகக்கூறி லட்சக் கணக்கில் பணம் பெற்று மோசடி செய்தார் என்று குற்றஞ் சாட்டப்படும் நபர், பாதிக்கப்பட்டவரால் யாழ். நகரில் வைத்து நேற்றுமுன்தினம் பிடித்துப் பொலிஸில் ஒப்படைக்கப் பட்டார்.

கோப்பாயைச் சேர்ந்த அச்சுதன் வைகுந்தன் (வயது 24) 2006ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்டார். 2013 ஆம் ஆண்டு அவர் உயிருடன் இருப்பதாகவும் 5 லட்சம் ரூபா பணம் தந்தால் அவரை மீட்டுத் தருவதாகக் கிஸ்ணன் கூறியுள்ளார். அதற்கு முன்னர் கிருஸ்ணன் வைகுந்தனின் குடும்பத்தினருக்குக் கடிதம் எழுதியதோடு, அதில் தனது அலைபேசி இலக்கத்தையும் குறித்து அந்த இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் குறிப்பிட்டுள்ளார். பின்னர் பகுதி பகுதியாகப் பணம் பெறுவது என்றும் அவ்வாறு முதற்கட்டமாக 2 லட்சத்து 86 ஆயிரம் ரூபாவை வைகுந்தனின் சகோதரனிடமிருந்து கிருஸ்ணன் பெற்றுக் கொண்டு தலைமறைவாகிவிட்டார்.

கிருஸ்ணனின் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையிலும் அவரைக் காணமுடியாதும் வைகுந்தனின் குடும்பத்தினர் ஏமாற்றப்பட்டனர். பண மோசடி தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினர் முறைப்பாடு செய்திருந்தனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் கிருஸ்ணன் மாட்டிக் கொண்டார். அவர் கொழும்பில் தலைமறைவாக வாழ்ந்து வந்தார். இடையிடையே யாழ்ப்பாணம் வந்துசென்று விடுவார். அவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.அவர் யாழ். நகரில் நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளாகியுள்ளார். அவருக்கு உதவ அந்த இடத்தில் நின்றிருந்த ஒருவர் முற்பட்டு காயமடைந்தவரைத் தூக்கிவிட்டு உதவியபோதே, தன்னிடம் முன்னர் லட்சக் கணக்கில் பணம் பெற்று ஏமாற்றியவர் என்பதனைத் தூக்கிவிட்டவர் அடையாளம் கண்டுகொண்டார். அந்த இடத்தில் வைத்து அவருடன் முரண்பட்டதோடு, அவரைப் பிடித்து யாழ்ப்பாணப் பொலிஸில் ஒப்படைத்திருந்தார்.

சம்பவம் மதியம் இடம்பெற்றது. மாலை 5 மணிவரை அவர் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரிக்கப்பட்டார். பின்னர் அவருக்கு எதிராகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஏற்கனவே முறைப்பாடு இருந்ததனால், அவரைக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க முற்பட்டு, ஓட்டோவில் அவரைப் பொலிஸார் ஏற்றிச் சென்றனர்.

கோப்பாய் பொலிஸ் நிலையம் முன்பாக, இறங்கியபோதே சந்தகநபரான கிருஸ்ணன் தனது கைப்பையிலிருந்து 500 மில்லிலீற்றர் அளவுடைய போத்தலை எடுத்து அதிலிருந்த திரவத்தைக் குடித்தார். அவ்வாறு குடித்தவுடன் போத்தலை உடைத்து தன்னைப் பிடித்துப் பொலிஸில் ஒப்படைத்தவரான வைகுந்தனின் சகோதரனை உடைந்த போத்தலால் குத்த முற்பட்டார். அங்கு நின்றவர்கள் அவரைத் தடுத்ததோடு திரவத்தை அருந்திய கிருஸ்ணனை மாலை 6.45 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினமிரவு 8 மணியளவில் அவர் உயிரிழந்தார். அவர் அருந்தியது ஆபத்தான பொட்டாசியம் சயனைட் திரவம் என்றும் இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அவர் போத்தலால் குத்த முற்பட்டு, குத்தப்பட்டிருந்தால் வைகுந்தனின் சகோதரனும் நச்சுத் தன்மையால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம குமார் விசாரணை மேற்கொண்டார். சந்தேகநபர் மதியம் கைது செய்யப்பட்டும் மாலைவரை அவரது கையிலிருந்த கைப்பையைப் பொலிஸார் பரிசோதனை செய்திருக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுவதோடு, அவ்வாறு பரிசோதனை செய்திருந்தால் அவரது பையில் குறித்த நச்சுத் திரவம் இருந்தது தெரியவந்திருக்கும் என்றும் அதன்மூலமாக இறப்பைத் தவிர்த்திருக்கலாம் என்றும் இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பொட்டாசியம் சயனைட் அருந்தியதால்தான் அவர் உயிரிழந்தார் என்பது தெரியவந்தது. எனினும் அதனை மேலும் உறுதிப்படுத்த இறந்தவரின் இரத்தமாதிரி பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி உ.மயூரதன் தெரிவித்தார்.

இதேவேளை, காணாமற்போனவர்களை மீட்டுத்தருவதாகக்கூறிப் பணம் பெற்றிருப்பதனால் படைப்புலனாய்வாளர்களுக்கும் அவருக்கும் தொடர்பு இருந்திருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. எனினும் அது பற்றிய மேலதிக தகவல்கள் தெரியவரவில்லை.(வ-4,10)

## தொண்டர்

அடுத்து போராட்டத்தை நேற்று மாலை கைவிட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஆனோல்ட் மற்றும் அஸ்மின் நேற்று மாலையில் சந்தித்தனர். ஆளுநருடனும் தொடர்பு கொண்டு இந்த விடயம் தொடர்பில் எடுத்துரைத்தனர்.

வடக்கு மாகாண ஆளுநர் கூரே, போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை இதன் பின்னர் நேரில் வந்து சந்தித்தார். தற்போது உங்களுடைய சகல விவரங்களையும் பெற்றுள்ளேன். அதேபோல் வடக்கு மாகாண கல்வி அமைச்சிலும் பெற்றுள்ளேன். நீங்கள் இவ்வாறு எனது செயலகம் முன்பாக இருப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கும் நேரடியாகத் தெரிவித்தேன். இது தொடர்பில் ஜனாதிபதியும் கவனம் செலுத்துவதாகக் கூறியுள்ளார்.

இந்த வாரம் ஜனாதிபதியைச் சந்தித்து உங்களின் விவரம் அடங்கிய கோவைகளை அவரிடம் முன்வைத்து நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும். இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் வரையில் கால அவகாசம் வழங்கவேண்டும். என்னை நம்பினால் கூறியதை முடித்துத் தருவேன் என ஆளுநர் உறுமொழி வழங்கினார்.

இதனை அடுத்து ஆளுநரின் உத்தரவாதத்தை ஏற்று தொண்டராசிரியர்கள் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஆளுநர் குடிதண்ணீர் வழங்கி போராட்டத்தை முடித்து வைத்தார். (வ-5-10)

(மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்)

## அரசின்

நீதிபதிகளின் பங்களிப்புடனான விசா ரணையைத் தமிழ் மக்கள் கோரவில்லை எனவும், தமிழ்த் தலைவர்கள்தான் கேட்பதாகவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே விசாரணைப் பொறிமுறையை எவ்வாறு அமைக்கவேண்டும் என மக்கள் கருத்தறியும் அமர்வில், இலங்கை அரசின் விசாரணையில் நீதிகிடைக் கும் என்ற நம்பிக்கை இல்லையென போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். அவர்கள் கடந்த காலத்தில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகளில் நீதி வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியே பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்புக் கட்டாயமென வலியுறுத்தினர்.

போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையை எவ்வாறு முன்னெடுப்பது மற்றும் காணாமற்போனோர் அலுவலகத்தை அமைப்பது தொடர்பாக மக்கள் கருத்துக்களை கேட்டறியும் கிளிநொச்சி வலயச் செயலணியின் அமர்வு நேற்று பூநகரி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது முழங்காவிலைச் சேர்ந்த ஜெகநாதன் தெரிவித்ததாவது:

"போர்க்குற்ற விசாரணை நடத்தி, குற்றமிழைத்தவர்களைத் தண்டிக்காமல் நல்லிணக்கம் ஏற்படாது. தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு இதுவரை நியாயமான தீர்வு கிடைக்கவில்லை. திருகோணமலை குமாரபுரம் படுகொலை, உடும்பன் குளம் படுகொலை, மூதூர் அக்சன் பாம் படுகொலை, செம்மணிப் படுகொலை எவற்றுக்குமே இலங்கையின் ஆட்சியாளர்கள் நீதியைப் பெற்றுக் கொடுக்கவில்லை. இப்படிப்பட்ட ஆட்சியாளர்களைக் கொண்ட இலங்கையில் இறுதிக் கட்டப் போரின் போதான குற்றங்களுக்கு மாத்திரம் எப்படி நீதி கிடைக்கும்.

பன்னாட்டு நீதிபதிகள் விசாரணைப் பொறிமுறையில் உள்வாங்கப்படவேண்டும். இதன் போதே நீதி கிடைக்கும். காணாமற்போனோர் அலுவலகம் கிளிநொச்சியில் அமைக்கப்படவேண்டும். அதற்கான அலுவலர்களை இலங்கை அரசு நியமிக்க முடியாது. ஐ.நா. சபைதான் நியமிக்கவேண்டும்.

தென்னாபிரிக்காவில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இதன் போது நெல்சன் மண்டேலாவின் மனைவியும் குற்றச்சாட்டுடன் தொடர்புடையவராக இனம்காணப்பட்டார். இதனால் நெல்சன் மண்டேலா தனது மனைவியை விவகாரத்துச் செய்தார். ஆனால் எங்கள் ஆட்சியாளர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல.

இலங்கையில் கடந்த காலங்களில் பல விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவற்றுக்கு என்ன நடந்தது என்பதே தெரியாது. இதுதான் இங்குள்ள நிலமை.

பன்னாட்டுச் சமூகம் இலங்கை அரசைப் பணிய வைப்பதன் ஊடாக நல்லிணக்கத்தைப் பெற்றுக் கொள்ளமுடியாது. இங்கு இயல்லான சூழ்நிலை உருவாக்கப்பட்டு நல்லிணக்கத்தை மக்கள் உணரவேண்டும். அப்போதுதான் உண்மையான நல்லிணக்கம் கிடைக்கும்" - என்றார். (வ-5-10)

## முன்னாள்

செயலணியின் அமர்வு பூநகரிப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

போரின் இறுதியில் படையினரிடம் சரணடையும் போது, போராளிகள் ஆரோக்கியமான நிலையிலேயே சரணடைந்தார்கள். புனர்வாழ்வை முடித்துக் கொண்டு வெளியில் வந்த பின்னர் அவர்களின் தேக ஆரோக்கியத்தில் மாற்றம் தென்பட்டது. பலர் உயிரிழந்தனர். இவர்களின் உயிரிழப்புக்களை யாரும் கண்டுகொள்ளவில்லை. அதனைக் கவனத்தில் எடுக்கவுமில்லை.

பன்னாட்டு மருத்துவக் குழு இது தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். புனர்வாழ்வு பெற்று விடுதலையாகி சமூகத்துடன் இணைந்துள்ள போராளிகளுக்கு மருத்துவப் பரிசோதனை முன்னெடுக்கப்படவேண்டும். இதனை இந்தக் குற்றத்தைப் புரிந்ததாக நாங்கள் சந்தேகிக்கும் இலங்கை அரசு மேற்கொள்ளக் கூடாது. பன்னாட்டு மருத்துவக் குழுவே ஆய்வு செய்ய வேண்டும் - என்று தெரிவித்தனர். (வ-5-21)

## வடக்கில்

விகாரைகள் மற்றும் மதத் தலங்களை துரித கதியில் சீரமைப்புச் செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் சம்மந்தப்பட்ட மாவட்டங்களின் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ், விகாரைகள் மற்றும் மதத் தலங்களின் முகாமைத்துவ பராமரிப்புச் சபைகளுக்கு வழங்குவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

இது தொடர்பில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட தகவல்கள், அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டது என அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார். (வ-5)

## மோட்டார்

அதனைச் செலுத்திச் சென்ற சாரதி கைது செய்யப்பட்டார். சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

## மரண அறிவித்தல்கள்

### அருளம்பலம் விஜயரட்ணம்



புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் விஜயரட்ணம் நேற்று (02.08.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம்-சின்னத்தங்கம் தம்பதிகளின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - பாக்கியலட்சுமி தம்பதிகளின் மருமகனும் மணி மேகலையின் அன்புக் கணவரும் யாழினி, தீபனா, காலஞ் சென்ற வித்தியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிரிமதன கேசவன்(மைனா), ரஜித்பிரகாசன் ஆகியோரின் அன்பு மாமனும் பாக்கியலட்சுமி(கிளிநொச்சி), தேவேந்திரநாதன் (கொழும்பு), காலஞ்சென்ற Dr.பேரின்பநாதன்(உடுப்பிட்டி) மற்றும் விமலாதேவி(கனடா), அன்னலட்சுமி (PHLT,கிளிநொச்சி), குணரட் ணம் (SMHO,யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விதுஷிகா, தனுசிகா, அம்பிகன், தேனுசா, கிருஷாந்தன், பௌசனா, அர்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2016) புதன்கிழமை நண்பகல் 12மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அம்பலயம்பதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிப்பனை வீதி, 6ஆம் வட்டாரம், வேலணை.**

**தகவல்: குடும்பத்தினர்.**

### மாணிக்கவாசகர் சிவபாலச்சந்திரன்

(கரைச்சி வடக்கு ப.நோ.கூ.ச முன்னாள் முகாமையாளரும், ஊரியான் உபதிட்டக் குழுவின் முன்னாள் செயலாளரும்)



யாழ் மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் 32/3 ஊரியான்,முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் சிவபாலச்சந்திரன் நேற்று (02.08.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கவாசகர்-செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், தவமணி(ஓய்வு பெற்ற ஆசிரியை, கிளி/புனித அந்தோனியார் றோ.க.வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராமநாதன்-சொர்ணம் தம்பதிகளின் மருமகனும் கீதாஞ்சலி, காலஞ்சென்ற பிரசாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணேசகுமாரின் (செட்டிக்குளம்) மாமனாரும் ஜெயபாலச்சந்திரன்(கனடா), தவபாலச்சந்திரா(முரசு மோட்டை), தனபாலச்சந்திரன்(கனடா), குணபாலச்சந்திரன்(கனடா), யோகபாலச்சந்திரன்(கனடா), லோகபாலச்சந்திரன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தரணிகன், லோஜிதன் ஆகி யோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.08.2016) புதன்கிழமை பி.ப 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முரசு மோட்டை, ஐயன் கோயிலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.32/3,ஊரியான், முரசுமோட்டை**

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த வீரராக ரூட் புரோட்டின் தெரிவில்

நிகழ்கால கிரிக்கெட் உலகின் ஆகச் சிறந்த துடுப்பாட்ட வீரராக இங்கிலாந்தின் ரூட்டைத் தெரிவு செய்தார் சக வீரரான புரோட்.

நிகழ்கால கிரிக்கெட் உலகின் சிறந்த வீரர் யார் என்பதில் ஒவ்வொருவரும் வேறுபட்ட தெரிவுக்களைக் கொண்டுள்ளனர். கோக்லி, சிமித், வில்லியம்சன், ரூட், வில்லியர்ஸ் ஆகியவர்கள் மத்தியில் உள்ள குறித்த போட்டியில் இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளரான புரோட், சக வீரரான ரூட்டைத் தெரிவுசெய்தார்.

பொதுவாக எல்லா வகை கிரிக்கெட்டிலும் ரூட்தான் முழுமையான வீரர் என்று நினைக்கிறேன். அனைத்து வகை கிரிக்கெட்டிலும் சாதனை படைத்துவரும் ரூட் விளையாடும் அதே அணியில் நான் விளையாடுவது எனது அதிர்ஷ்டம் என புரோட் மேலும் தெரிவித்தார். (ம)





# றொயேர்ஸ் கிண்ணம் ஜோகோவிக் கையில்

கனடா ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான றொயேர்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றினார் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் நிலை வீரரான ஜோகோவிக்.

நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில், பன்னாட்டுத் தரப்படுத்தலில் ஆறாம் நிலை வீரரான ஜப்பானின் நிசிகோரியை எதிர்த்து ஜோகோவிக் மோதினார். இந்த ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 6:3, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஜோகோவிக் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார். ஜோக்கோவிக்கின் இந்த வெற்றி பன்னாட்டுத் தரப்படுத்தலில் அவர் கைப்பற் றிய 30ஆவது சம்பியன் கிண்ணமாக பதிவாகியுள்ளது. (ம)

# ரியோ ஒலிம்பிக்; நடால் சந்தேகம்



ஸ்பெய்ன் நாட்டின் முன்னணி ரென்னிஸ் வீரரான ரபேல் நடால், மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் காரணமாக ரியோ ஒலிம்பிக் தொடரில் பங்கேற்பது சந்தேகமாகியுள்ளது.

கடந்த மூன்று மாதங்களாகக் குறித்த பகுதியில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டுவரும் நடால், பிரான்ஸ், விம்பிள்டன் போன்ற பன்னாட்டுத் தொடர்களைத் தவறவிட்டிருந்தார். தற்போது காயம் ஓரளவு குணமாகிய நிலையில் ஒலிம்பிக் தொடருக்காக பிரேஸிலைச் சென்றடைந்த போதிலும் தனது பங்குபற்றலை அவர் உறுதிப்படுத்தவில்லை. கடந்த மூன்று மாதங்களாக நான் எந்த தொடரிலும் பங்கேற்க வில்லை. பயிற்சியும்செய்யவில்லை. ஒலிம்பிக் தொடரில் களமிறங்க அதீத பயிற்சி வேண்டும். மிகக் குறைந்த பயிற்சியுடன் பூரண உடல்தகுதியின்றி ஒலிம்பிக் தொடரில் விளையாட இயலாது. எனவே ஒலிம்பிக்கில் களமிறங்குவது குறித்து இன்னமும் முடிவுசெய்யவில்லை என நடால் மேலும் தெரிவித்தார். (ம)

# களமிறங்குகிறார் நர்சிங் யாதேவ்

ஊக்கமருந்து சோதனையில் தோல்வியடைந்ததால் தடை செய்யப்பட்டிருந்த மல்யுத்த வீரர் நர்சிங் யாதேவ் மீதான தடையை நீக்கியது பன்னாட்டு ஊக்கமருந்து தடுப்பு சம்மேளனம்.


பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நாளை மறுதினம் ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாகிறது. இதில் பங்கேற்கவிருந்த, இந்திய மல்யுத்த வீர ரான நர்சிங் யாதேவ் குருதி மாதிரியை சோதனை செய்த தில், அதில் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து இருந்தமை கண்டறியப்பட்டது. ஆனால் தான் ஊக்கமருந்தை பயன் படுத்தியதை ஏற்றுக் கொள்ளாத நர்சிங் யாதேவ், குறித்த விவகாரத்தில் சதி இருப்பதாக தெரிவித்தார். இதனையடுத்து விசேட விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு மேற் கொள்ளப்பட்ட மேலதிக விசா ரணைகளில் நர்சிங் யாதேவ் திட்டமிட்டு கவிழ்க்கப்பட்டமை அம்பலமானதைத் தொடர்ந்து அவர் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டு ஒலிம்பிக் தொடரில் களமிறங்க அனுமதி வழங்கப்பட்டது. (ம)



# மூன்றாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

இங்கிலாந்து – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.

முடிவடைந்த முதல் இரு டெஸ்ட் ஆட்டங்களில் முதலாவதில் பாகிஸ்தானும், இரண்டாவதில் இங்கிலாந்தும் வெற்றிபெற்று தொடர் 1:1 என்று சமநிலையில் உள்ளது. இந்த நிலையில் மூன்றாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி தொடரை இழக்க வாய்ப்பில்லை என்பதால் இரு அணிகளும் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. (ம)




# இந்தியாவின் பிடியில் சிக்கியது மே.தீவுகள்

இந்தியா – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸின் மூன்றாம் நாள் முடிவில் இந்தியா 304 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 196 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக பிளக்வூட் 62 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் அஸ்வின் ஐந்து இலக்குகளையும் இசாந் சர்மா, மொகமட் சமி இருவரும் தலா இரு இலக்குகளையும், மிஸ்ரா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்தியா இரண்டாம் நாள் முடிவில் 358-5 என்றிருந்தது. ரகானே 42 ஓட்டங்களுடனும், சகா 17 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காகக் களமிறங்கினர். இணைப்பாட்டமாக 98 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் மூன்று ஓட்டங்களால் அரைச்சதத்தைத் தவறவிட்டார் சகா. சுமாரான பங்களிப்பை வழங்கினார் மிஸ்ரா. பதட்டமில்லாத சதத்தைப் பதிவுசெய்தார் ரகானே. 21 ஓட்டங்களுடன் மிஸ்ராவை வீழ்த்தினார் சேஸ். அடுத்த பந்தில் ஆட்டமிழந்தார் சமி. இந்தியா 500-9 என்றிருந்த வேளையில் மழை குறுக்கிட ஆட்டத்தை இடைநிறுத்தியது இந்தியா. ரகானே 108 ஓட்டங்களுடன் களத்திலிருந்தார். பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகளின் சார்பாக சேஸ் 5 இலக்குகளையும், கப்ரியெல், ஹோல்டர், பிஷூ மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவஜீவன்ஸ் அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஓக. 3
அரியாலை திருமகள் சனசமூக நிலையம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் நவஜீவன்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த காலிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து ஆவங்கால் மத்திய அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது நவஜீவன்ஸ். இரண்டாவது செற்றை 26:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது ஆவரங்கால் மத்தி. அரையிறுதியைத் தீர்மானிக்கும் இறுதி செற்றை 27:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம். (ம-23)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், ஓக 3
*பாரதி வி.க. தொடர்*
பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாச்சிமார் கோவிலடி சிறி அம்பாள் அணியை எதிர்த்து அல்வாய் நக்கீரன் அணியும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி 'பி' அணியை எதிர்த்து நவாலி சென். பீற்றர்ஸ் அணியும் மோதவுள்ளன.

*எவரெட்ஸ் வி.க. தொடர்*
புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த வி.கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 6.45 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகமும் இரவு 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)



# அம்பாளின் வலைப்பந்தாட்டத்தில் சரஸ்வதி மகா வித்தி.சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 3
சுன்னாகம் கிழக்கு அம்பாள் விளையாட்டு கழகம் நடத்தும் வலைப்பந்தாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி சம்பியனானது.
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 8:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் இரு அணிகளும் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தின. இதனால் 9:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த பாதி சமநிலை கண்டது. எனினும் முதல் பாதியில் முன்னிலை பெற்றமை கை கொடுக்க 17:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி. (ம-422)

## சம்பியனானது சென். தோமஸ்

யாழ்ப்பாணம், ஓக. 3
வடமராட்சி கபடிச் சங்கத்தால் நடத்தப்பட்ட கபடித் தொடரில் பருத்தித்துறை சென். தோமஸ் அணி சம்பியனானது.
பருத்தித்துறை சென். தோமஸ் விளையாட்டு கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் சென். தோமஸ் அணியை எதிர்த்து கொட்டடி துள்ளுமீன் அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பருத்தித்துறை சென். தோமஸ் அணி 28:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனானது. மூன்றாமிடத்தை சித்திவிநாயகர் அணியும், நன்னடத்தை அணியாக நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் தெரிவாகின. (ம-422)





தொடராட்ட நாயகனான பிரகாஸ்

## கிண்ணம் வென்றது கரவெட்டி ஞானம்ஸ்

கரணவாய், ஓக. 3
சங்கானை உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கியது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம்.
உதயதாரகையின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜீவன் 31 ஓட்டங்களைப் பெற்றார்.
67 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்று நான்கு ஓட்டங்களால் தோல்வியடைந்தது.
ஆட்டநாயகனாக ஞானம்ஸ் அணியின் ஜீவனும், தொடராட்ட நாயகனாக அதே அணியைச் சேர்ந்த பிரகாஸும் தெரிவானார்கள். (ம-108)

## விடத்தல்தீவு ஐக்கிய வி.க. மன்னாரில் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஓக. 3
மன்னார் கால்பந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் விடத்தல்தீவு ஐக்கிய அணி சம்பியனானது.
மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் விடத்தல்தீவு ஐக்கிய அணியை எதிர்த்து யோசவாஸ்நகர் ஐக்கிய அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்து 4ஆவது நிமிடத்தில் விடத்தல்தீவு ஐக்கிய அணியின் நிதர்சன் தனது அணியின் முதல் கோலைப் பதிவு செய்தார்.
ஜோசவாஸ் நகர் ஐக்கிய அணி கிடைத்த வாய்ப்புக் களை சரியாகப் பயன்படுத்தத் தவறியது. முதல் பாதியின் முடிவில் விடத்தல்தீவு ஐக்கிய அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.
இரண்டாம் பாதியின் 6ஆவது நிமிடத்தில் விடத்தல்தீவு ஐக்கிய அணியின் வின்சன் தனது அணியின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றங்களும் ஏற்படாத நிலையில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது விடத்தல்தீவு ஐக்கிய அணி.
சிறந்த வீரனாக விடத்தல்தீவு ஐக்கிய அணியின் நிதர்சன், சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் வெஸ்லி, தொடராட்ட நாயகனாக யோசவாஸ்நகர் ஐக்கிய அணியின் டெசில் ஆகியோர் தெரிவாகினர். (ம-56-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேரிஸின் கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 3

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் றோயல் அணி சம்பியனானது. மேரிஸின் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதி யாட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதியது. றோயலின் வீரர்களான சயந்தன், பிலாவியோ இருவரும் கோல்களைப் பதிவு செய்ய முதற் பாதியில் 2:0 என்று முன்னிலை வகித்தது றோயல். இரண்டாம் பாதியில் யங்கம்பன்ஸைத் தேடி வந்தது தண்டனை உதை வாய்ப்பு. கச்சிதமாகக் கோலாக் கப்பட நிலைமை 2:1. யங்கம்பன்ஸுக்கான சுடக்குரல் களும் இருக்கத்தான் செய்தன. ஆனால் றோயலின் சோபன் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்து தனது அணியின் ஆதிக்கத்தை ஆழமாக நிலைநாட்டினார். மாற்றங்கள் ஏற்படாத நிலையில் 4:1 என்ற கோல் கணக்கில் சம்பியனானது றோயல் அணி. ஆட்ட நாயகனாக றோயலின் கஜகோபன் தெரிவானார், சிறந்த கோல் காப்பாளராக யங்கம்பன்ஸ் அணியின் மகிந்தன் தெரிவானார். நன்நடத்தை வீரனாக றோயலின் கபில் தெரிவானார். நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினரும் யாழ். லீக்கின் தலைவருமான இ.ஆனல்ட் கலந்து கொண்டார். (ம-23)



## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாக்கியலீலா நவரத்தினம்



உடுவிலைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலீலா நவரத்தினம் நேற்று (02.08. 2016) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து-அம்மாபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகன்-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் நவரத்தினத்தின் அன்பு மனைவியும் தர்மதாஸ், ஜெயதர்சினி, சுஜாதர்சினி, ஜீவதர்சினி, அருணதர்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2016) புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டி வீதி,
இணுவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

### தவிசாளன் பானுஜன் (பானு)

(யா/வேலணை மத்திய கல்லூரி உயர்தர மாணவன்)



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவிசாளன் பானுஜன் (பானு) கடந்த (01.08.2016) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தவிசாளன்(தீபன்)-சிவரஞ்சினி தம்பதிகளின் அன்பு மகனும் பகீரதன், துஷானி ஆகியோரின் சகோதரனும் இராசரெத்தினம், குனேஸ்வரி, கனகம்மா ஆகியோரின் பேரனும் செல்வராசா, யோகாம்பிகை, கணேஸ், ஞானாம்பிகை, குணரதன், கேதீஸ்வரி, நிறஞ்சன், ரேவதி ஆகியோரின் பெறாமகனும் தனகுமார்(தாத்தா), ஆனந்தி, சிவராசா, விமலாம்பிகை, துஷாந்தினி, முருகதாஸ், நிஷாந்தினி ஆகியோரின் அன்பு மருமகனும் குமணன், மயூரி, அருண், அமுதினி, கதரன், றாயினி, விறோ, விசி, விஜயன், கோபி, சஜ்வினி, அபிஷன்,மதுமிதா, தஸ்மி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் கண்ணன், சயந்தினி, லதா, நந்தா, சுகந்தினி, நிருபன், சதுர்ஷன், நிருத்திகா, குழலினி ஆகியோரின் மைத்துனரும் சாரு, ஷைந்தவி ஆகியோரின் மாமனாரும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சரவணை புன்னம்பிட்டி மயானத்தில் மு.ப 11 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்..இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செல்வராசா J.P
சரவணை மேற்கு, வேலணை.
077 9309788

தகவல்:
குடும்பத்தினர்.
077 5365257

### திருமதி
### சிவபாக்கியம் சின்னத்துரை



நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கோயில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சின்னத்துரை நேற்று (02.08. 2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகேந்திரம்-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் செல்லத்துரை, காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் பொன்மணி, பொன்னத்துரை, இராசதுரை, காலஞ்சென்ற அன்னலிங்கம் மற்றும் இராசலிங்கம்(ஜேர்மன்) காலஞ்சென்ற புனிதராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ரூபி, காலஞ்சென்ற செல்லத்துரை, தம்பிமுத்து மற்றும் பரிபூரணம், பத்மினி, விமலாதேவி, நித்தியாதேவி ஆகியோரின் மைத்துனியும் சிவகடாட்சம் (சட்டத்தரணி), சந்திரமோகன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மங்களேஸ்வரி, மஞ்சுளாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியும் துவாரகன், கர்ஷனா அகியோரின் அன்புப் பேர்த்தியும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2016) வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்.
077 9587225

நியத்த ஜய
484
02.08.2016
மஞ்சள்
01 07 21 27 A
10,693,940/=
2016.08.05

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
02.08.2016 | 2012 | நீலம்
05 51 58 59
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2,000,000 /-

கொடிபதி
அடுத்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 89,489,980/-
033
L 12 18 47 52

## சைக்கிள் ஓட்டம்

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும், வடமாகாண ரீதியிலான ஆண்களுக்கான 50மைல் சைக்கிள் ஓட்டம்.

காலம்:-06-08-2016 சனிக்கிழமை ,காலை.6.30

இடம்:-திருமகள் சனசமூக நிலையம் முன்றில்.

57/10,திருமகள் வீதி,
அரியாலை,யாழ்ப்பாணம்.
நிர்வாகம்
தொடர்பு.0776450755
0778435234

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தரும், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான (காணி),
திரு. சுப்பிரமணியம் முரளிதரன்
(BSc ,MA (Population Development Studies) , LLB)
அவர்கள்,இன்றைய தினம் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில்

சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் மேற்கொள்வதையிட்டு அவர் சேவையில் மேலும் பதவி உயர்வுகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உத்தியோகத்தர்கள்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்

யாழில்40 வருடங்களாக AF இன் பயணம்...

இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.



பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்:
யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.
இலவசம்: PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...

பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து...
செல்வோர் : யாழ். வன்னி, பிற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படிக்கிறார்கள்.

ஆரம்பம்: 23.08.2016 உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

## வேலையாள் தேவை
புடவை நிலையம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆண் வேலையாள்கள் தேவை.
தொடர்பு.0212228383

## தேவை
வெள்ளவத்தையில் இயங்கும் கட்டட கம்பனிக்கு லேபர்கள் தேவை சம்பளம் 1300 இருந்த 1500 வரை நாள் ஒன்றிற்கு.
தொடர்பு.0772578723

## தேவை
திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள பலசரக்கு வியாபார நிலையத்திற்கு அனுபவம் மிக்க வேலையாள்கள் தேவை.
தொடர்பு 0772210294

## அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK-550/=Kg
தொடர்புகளுக்கு: 0768226243
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி
● நெல்லியடி ● வல்வெட்டித்துறை

## கபிசுஜா பவன் மந்திர் வேலையாளகள் தேவை (பெண்கள் மட்டும்)

## திரு.ஷாம்சனின்
IELTS



இலகுவழி கற்பித்தல் முறை மூலமான ஷாம்சனின் IELTS பரீட்சைக்கான புதிய ஆங்கில பயிற்சி பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

வாரநாள் வகுப்புகள்
திங்கள் தொடக்கம் வியாழன் வரை
காலை 8.30 - 11.00

பயிற்சியில் இணைபவர் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். ஒருபிரிவில் 16 பேர் மட்டும்.

SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org